16

சக்தி

MADRAS
2530



★ மங்கலமானது வெற்றிலை

★ கும்பகோணம் வெற்றிலை பெயர் பெற்றது

★ சுவைமிக்க பாக்குத்தூள் 'அசோகா'

88871

அசோகா

சுகந்த பாக்குத் தூள்

தயாரிப்பவர்:

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்

உடலுக்கும் உள்ளத்திற்கும் இ

நீங்கள் உயர்ந்த நகைக
உங்கள் உடலை அலங்கரித்
கொண்டு அழகு பார்க்
பொழுது உங்கள் ம
இன்புறுகிறது

நல்ல அதிர்ஷ்டமும் மனச்
சாந்தியும் அளிக்கக்கூடி
நகைகளையே விற்பவர்கள்
எப்பொழுதும் அவர்க
வியாபாரம் பெருந்தன்மை
யும்நேர்மையும் நிறைந்த

வீண் டம்பம்

சிலர் இக்கலி யுகத்தில் கூந்தலழகுதான் முக்கியம் எனக் கருதுகிறுர்கள். நிரந்தரமில்லாத அற்பப்போலி ஆபரணங்களால் அவர்கள் மனம் கவரப் பட்டிருக்கலாம் மேலும் இயற்கையாகவே நிரந்தரஐச்வரியங்களான தங்கமும் ரத்தினங்களும் காலக்ரமத்தில் மறைந்துவிடும் என அபிப்பிராயப் படுகிறுர்கள்,

புத்திமான்களே உண்மையாக நீடித்திருக்கும் பொருள்களை வாங்குகிறுர்கள். வைரங்களே என்றும் அழியாத நன் மதிப்புடன் நீடித்திருக்கக்கூடியவை.

313, எஸ்பிளநேட்
மதராஸ்

For SILKS
and SAREES
நாகரிகமான பட்டு புடவை
கள் பல ரகங்களில் ஏராள
மாக கிடைக்குமிடம்
S. R. B.
குப்புசாமி அய்யர் & சன்
(பழைய விலாசம்)
S. R. பாலுசாமி அய்யர்
& சன்ஸ்
117, நயினியப்ப நாய்க்கன்
தெரு. P. T. மதருஸ்
230, கீழமாரெட் வீதி, மதுரை
SRB
MSD

"Commercial Progress"

South India's first and high-class English Weekly Journal

on

Commerce, Industry, Finance & Transport

Editor :

Prof. K. J. M. THARAKAN M.A.,

Excellent information and trenchant views
on current topics.

Annual Subscription Rs. 20/- : : Single Copy 8 As.

For particulars please write to :

The Manager,

Commercial Progress,

MADRAS 14.

A Shakti Press Ltd. Publication

ஹிந்து-முஸ்லிம் பிரசினை

காந்தி மலர்—3

ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையின்றிச் சுயராஜ்யமில்லை. அப்படி சுயராஜ்யம் கிடைத்துவிட்டாலும், ஒற்றுமை ஏற்படாவிட்டால், கிடைத்த சுயராஜ்யம் நிலைபேறுடையதாய் இராது. பாக்கிஸ்தான் என்பது கூடவே கூடாது. அது இந்தியத் தாயை உயிரோடு வாள் கொண்டு அறுப்பதை ஒக்கும் என்பதை அடிப்படையாகக் கொண்டு, காந்திஜி ஹிந்து-முஸ்லிம் பிரசினையை ஆராய்ந்து இருக்கிறார். ஹிந்து-முஸ்லிம் பிரசினை நெருக்கடியாய் உள்ள இந்தக் கட்டத்தில், காந்திஜியின் கருத்துக்களை அறிந்துகொள்ள இந்நூல் மிகவும் உதவியாய் இருக்கும். **விலை ரூ. 6-0-0**

★

மாணவருக்கு

காந்தி மலர்—1

காந்தி மலரில் முதலாவது புத்தகம். காந்திஜியின் இலட்சியங்களை அறிந்துகொள்ள விரும்புகிறவர்களுக்கு இந்த நூல் மிகவும் பயனுடையதாய் இருக்கும். வாழ்க்கையின் இலட்சியம், கல்வி, திருமணம், வாழ்க்கை முறை, தாய்மொழி மூலம் கல்வி, அன்னிய மொழி படித்தல், போராட்டம், அஹிம்சை, சத்தியாக்கிரகம் முதலிய பல அம்சங்களைப்பற்றிக் காந்திஜி கொண்டுள்ள கருத்துக்கள் இந்த நூலில் அடங்கி இருக்கிறது. வெளிவந்த இரண்டொரு மாதங்களில், சென்னை சர்க்கார் இந்த நூலைப் பறிமுதல் செய்து விட்டார்கள். பத்திரிகைகளில் பறிமுதல் உத்திரவு பற்றிய கண்டனங்கள் வெளிவரத் தொடங்கவே, பின்னர் சர்க்கார் தடை உத்திரவை ரத்து செய்துவிட்டார்கள். இரண்டாம் பதிப்பு இப்போது வெளிவந்திருக்கிறது.

திருத்திய இரண்டாம் பதிப்பு

பரிசுப் பதிப்பு ரூ. **8-4-0** : மலிவுப் பதிப்பு ரூ. **5-0-0**

(தபால் செலவு தனி)

புதுமைப் பதிப்பகம் லிமிடெட், காரைக்குடி

பத்தே நிமிஷத்திற்குள்
10 Saridon
BRAND ANALGESIC TABLETS
Saridon
ஸாரிடோன்
எல்லா வலியையும் நிறுத்துகிறது

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்
உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் ஸில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்.
மைசூர்
சில்க்
மைசூர்
கவர்ன்மெண்ட்
தயாரிப்பு.
கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.
MGK-107M

யுனைடெட் கமர்ஷியல் பாங்கு லிமிடெட்

2, ராயல் எக்ஸ்சேஞ்சு பிளேஸ், கல்கத்தா

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2-கோடி

ரிசர்வு நிதி ரூ. 30-லட்சம்

ஸ்ரீ. ஜி. டி. பிர்லா
(சேர்மன்)

பி. டி. தாகூர்
ஜெனரல் மானேஜர்

தென் கிளைகளின் தொகுதி:
சென்னை (மெயின்), சௌகார்பேட்டை,
பெங்களூர், கோயம்புத்தூர், மதுரை,
காரைக்குடி, புதுக்கோட்டை, மைசூர்

தென் கிளைகளின் மானேஜர்:
ஸ்ரீ. கே. ஆர். கே. ஐயங்கார்
310-11, லிங்கி செட்டி தெரு,
சென்னை

எல்லாவிதமான நாணயமாற்று அலுவல்களும் வியாபார விஷயங்களும் கையாளுவதற்குத் தகுதியுள்ளவர்கள்

எங்கள்
3 வருட
காஷ் சர்டிபிகேட்டுகளில்
முதலீடு செய்யுங்கள்

A.S.P. U.C. 6

Coiffures OF INDIA

A typical ancient coiffure of Bengal.

வங்க தேசத்தின் புராதன முடி வகைகளில் ஒன்று

புராதன இந்தியக் கலை இப்பொழுது மறுபடியும் சிறிது சிறிதாக அதன் சுய உருவைப் பெறுகிறது. பழங்காலத் தாய்மார்களின் முடி அலங்காரம் இன்று வங்கத்திலே புத்துயிர் பெறுகின்றது.

ஆனால் இன்று, வாஸனை கலந்த **ஸ்வஸ்திக் காஸ்டர் ஆயில்** உபயோகிப்பதால் முடியலங்காரத்திற்கு அதிகமான அழகைக் கொடுக்கிறது. கேசத்தை நன்கு வளர்த்து, புதுமையும் பளபளப்பும் அளித்து மனோரம்மியமான வாஸனையும் தருகிறது.

மற்றும் இதர ஸ்வஸ்திக் தயாரிப்புகள் ;—காந்தி, மற்றும் பல டாய்லட் சோப்புகள், ஷேவிங் ஸ்டிக், வாஷிங் சோப், கோவாலின் பிராண்டு வனஸ்பதி முதலியன.

SWASTIK
PERFUMED CASTOR OIL

UNMATCHED FOR QUALITY

SWASTIK OIL MILLS LTD., BOMBAY.

SOM. 1A SHILPI

BE INDIAN - BUY INDIAN !

பொருள் அடக்கம்

●

சில விளக்கங்கள்	...	மகாத்மா காந்தி	1
போய் வா !	...	சுரபி	3
நேரு - அவர் வீட்டில்	...	கல்யாணி சென்	5
சந்திரன்	...	விஞ்ஞானி	8
தென்னாப்பிரிக்க நரகம்	...	எஸ். ஜார்ஜியேவ்	9
லம்பாடிகள்	...	" கல்யாணி "	17
ஏட்டிக்குப் போட்டி	...	பட்டேல்	20
போட்டி ஒழிக !	...	என். எம். ஜோஷி	22
முதலாளிகள் சங்கம்	...	வி. வி. பிரசாத்	26
காஷ்மீரக் கவிதை...	...	சோஹன்	28
பக்ஷணம்	...	யஷ் பால்	32
வினை தீர்க்கும்...	...	சி. ந. வைத்தீஸ்வரன்	36
ஜே. சி. குமரப்பா	...	கிராமவாசி	41
இயந்திரத் தொழில்...	...	இஸ்மத் பாஷா	43
சிரிக்கத் தெரியுமா...	...	ரேவ. ஈ. ராபின்சன்	47
தேனீக்கள் பாஷை	...	" கானடா "	49
விட்டகுறை	...	கு. அழகிரிசாமி	52
உலக அரசாங்கம்	...	பெர்ள் பக்	62
மார்க்ஸீயம்	...	ரா. ஹாலாஸ்ய நாதன்	65
புத்தக உலகம்	...	கு. அ.	69

முதலியவை

அட்டைப் படம் : ஸ்ரீ எம். டி. வின்ஸெண்ட், சென்னை

✲

சர்வசித்து வைகாசி

மலர் 14 இதழ் 2



ஆயிரங் காலப் பயிர்

நம் நாட்டில் திருமணத் தம்பதிகளை 'ஆயிரங் காலப் பயிர்' என்று வாழ்த்துவார்கள். நம் நாட்டுப் பண்பாட்டின் அறிகுறியாய்—நம்மவர் திருமணத்தின் மதிப்புக்குரிய சின்னமாய் இலங்கும் **திருமங்கலியத்தை** எண்ணிப் பெருமைப் படாதவர் யாருமே இல்லை.

திருமங்கலியத்தை யார் வேண்டுமானாலும் செய்யலாமா என்ன? ஆயிரங் காலப் பயிரல்லவா திருமங்கலிய தாரணம்! எனவே, புகழ் பெற்ற நகை வியாபாரியின் அனுபவமும், ராசியும் அவசியம்.

பாபாலால் கம்பெனியார் செய்யும் இத்தகைய அணிகள் உங்கள் வீட்டுக்கு அழகு மட்டுமல்லாமல் கிருஹலட்சுமியையும் சேர்த்து வைக்கின்றன.

சர்வசித்து
மலர் 14

சக்தி

வைகாசி
இதழ் 2

மெய்ப் பொருள் காண்பது அறிவு

சில விளக்கங்கள்

மகாத்மா காந்தி

பாகிஸ்தான் என்றால் என்ன என்பதை முயன்று பார்த்தும் என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. பாஞ்சாபிலும் வங்காளத்திலும் இப்பொழுது காணப்படும் நிலைமையை வைத்துப் பாகிஸ்தானின் இலட்சணத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்று கூறினால் அந்தப் பாகிஸ்தான் ஒரு நாளும் ஏற்பட முடியாது. இந்தியாவைப் பிரிக்கும் விஷயமாக நான் கொண்டுள்ள கருத்து எப்பொழுதும் போலவே இருந்துகொண்டிருக்கிறது. எவ்வித மாறுதலும் அடையவில்லை. இந்தியா பிரிக்கப்படாமல் ஒன்றாகவே இருக்க வேண்டுமென்ற எண்ணம் எப்பொழுதும்போல் உறுதியாகவே இருந்துகொண்டிருக்கிறது. இந்தியாவையோ, மாகாணங்களையோ பிரிப்பது போன்ற விஷயங்களைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் ஜனங்கள்தான். அவர்களும் பிரிட்டிஷார் வெளியேறிய பிறகுதான் அத்தகைய தீர்மானங்களைச் செய்ய முடியும்.

இதை நான் நண்பர்களுக்குப் பலமுறை சொல்லி இருக்கிறேன். எந்தக் காரியத்திற்கும் பிரிட்டிஷாருடைய உதவியை எதிர்பார்த்து நிற்பது இந்திய மக்களுடைய வாழ்வைப் பாழ்படுத்தி நிற்கும் ஒரு விஷயமாகும். சமஸ்தானங்களின் நிலைமையும் இதுதான். அவர்கள் பிரிட்டிஷாருக்குச் சாசுவதமான அடிமைகளாக இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு எது ஆதாரமாக இருந்ததோ அது இப்பொழுதுபோய்க்கொண்டிருக்கிறது. இந்திய அரசர்கள் தங்கள் சிம்மாசனத்தை இழக்காமல் இருக்க வேண்டுமானால், அவர்கள் சுதந்தர இந்தியாவில் இணை பிரிக்க முடியாத ஒரு பாகமாக ஆகிவிட வேண்டியது அவசியமாகும். அவர்கள் சுதந்தரம் அடைவதென்பது தங்கள் அதிகாரத்தைக் குடிகளிடம் ஒப்புவித்துவிட்டு அவர்களுடைய பிரதம ஊழியர்களாக ஆகிவிடுவதேயாகும்.

பிரெஞ்சு நண்பர் ஒருவர் இந்தியாவில் பொதுஉடைமை அர

சாங்கம் ஏற்படுமா என்று கேட்கிறார். பொது உடைமை அரசாங்கம் கட்டாயம் வந்து தீருமென்றே எண்ணுகிறேன். ஆனால், இந்தியாவில் ஏற்படும் பொது உடைமை நாற்காலியில் சாய்ந்து கொண்டு பேசும் வெறும் வேதாந்தமாய் இராது. அனுபவ சாத்தியமான அரசாங்க அமைப்பாகவே இருக்கும். நாம் போய்ச் சேரவேண்டிய இடம் இது வென்று தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அது தெரியாமல் இது வரை யாரும் பிரயாணம் செய்தறியாத கடலில் பிரயாணம் செய்யப் புறப்பட்டால் நம்முடைய கப்பல் தண்ணீரில் ஆழ்ந்துபோகும். இந்தியாவில் இனிமேல் அமையப்போகும் சமூகத்திற்கு அஹிம்சையே அஸ்திவாரமாக இருக்குமென்று நம்புகிறேன். அப்படி யமைந்தால் தான் பொது உடைமையானது சாசுவதமான நல்வழியாய் இருக்கும்.

ஒரு நண்பர் மதம் என்பது இறந்துபோகுமா என்றும் கேட்கிறார். மதம் இறந்து போனால் இந்தியாவும் இறந்து போகு மென்றே சொல்வேன். ஹிந்துக்களும் முஸ்லீம்களும் தத்தம் மதத்தை அநுஷ்டிக்க வில்லை. தத்தம் மதத்தின் சாரத்தை விட்டுவிட்டுச் சக்கையையே கட்டி அழுதுகொண் டிருக்கிறார்கள். அவர்கள் பயித்தியம் அடைந்திருக்கிறார்கள். ஆயினும் இரண்டு நதிகள் சேரும்பொழுது நுங்கும் நுரையுமாகக்காணப்படுவது இயல்பு. எல்லாம் கலங்கலாகத் தோன்றும். ஆனால், அடியிலோ பளிங்குபோல் தெளிவாகவும் அமைதியாகவும் இருக்கும். அழுக்குகளெல்லாம் கடலுக்குப் போய்விடும். நதிகள் ஒன்றாகச் சேர்ந்து தெளிவாகவும் சுத்தமாகவும் ஓடிக்கொண் டிருக்கும்.

பிரிட்டன் தேசம் ஒரு காலத்தில் சப்த சமுத்திரங்களிலும் தலைவணங்கா அரசியாக இருந்துவந்தது. இப்பொழுது இந்தியா விஷயத்தில் சரியாக நடந்துகொண்டால் சன்மார்க்க சமுத்திரத்திலும் தலைவணங்கா அரசியாக முடியும். அந்தப் பெருமை முன்னையதைவிடப் பன் மடங்கு மேன்மை யுடையதாகும். அந்த ஸ்தானத்தை அடைந்தால் உலகத்தின் க்ஷேமத்தை நிர்ணயிக்கக்கூடிய பதவி கிடைக்கும். அதற்குரிய சக்தி அதற்கு உண்டென்றே நம்புகிறேன். நான் பிரிட்டிஷ் மக்களை நன்கறிவேன். என்னுடைய வாழ்நாளில் சிறந்த வருடங்கள் எவையோ அவற்றுள் சிலவற்றை அவர்களிடையே கழித்திருக்கிறேன். பிரெஞ்சு மக்கள் பிரிட்டிஷாரை "ஏமாற்றும் இங்கிலாந்து" என்று கூறுவது வழக்கம். அதை நான் எப்பொழுதும் எதிர்த்து வந்திருக்கிறேன். ஏமாற்றுதல் என்பது அறத்திற்குக் கூறும் ஒரு புகழ்மாலை என்று கூப்பர் என்னும் ஆங்கிலக் கவிஞர் கூறுவதையே நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால்,பிரிட்டன் இனிமேல்தான் அந்த உயர்ந்த நிலையை அடையவேண்டும்.

⁂

என் ராஜ்யத்தில்

நான் அரசனாக இருந்தால், என் ராஜ்யத்தில் விடும் கண்ணீரெல்லாம், ஆனந்தக் கண்ணீராகவே இருக்கும்.

—ஹென்லி.

போய் வா!

●

சுரபி

(புதுவருஷப் பிறப்பன்று புனைந்தது)

போ

அத்தமிக்கும் வருடமே போ போ போ
அவதிமிக்க வருடமே போ போ போ
எத்திசைக்கும் இன்னலே போ போ போ
ஈனமிக்க காலமே போ போ போ

சுத்த சூனி யத்தை யெங்கும் விதைத்தாய் போ
சூதும் வாதும் மோதவிட்டுத் திகைத்தாய் போ
மத்து போலும் மாந்தர் வாழ்வைக் கடைந்தாய் போ
மங்கி மங்கிப் பங்கமுற்றுப் போ போ போ

அன்னை கை விலங்·கறுக்க மறந்தாய் போ
அண்டி வந்த மெய்ப்பதம் துறந்தாய் போ
முன்னவர்க்கும் பின்னவர்க்கும் வீண்போர்கள்
மூட்டிவிட்டு நோட்டம் பார்த்து நின்றாய் போ

இத்தரைக்குள் சத்துருக்கள் வளர்த்தாய் போ
ஈனர் கையில் ஈட்டி கத்தி கொடுத்தாய் போ
குத்தி வெட்டி ரத்தம் நித்தங் குடித்தாய் போ
கூற்றுவற்கு நல்விருந்து படைத்தாய் போ

முத்து போலும் தானியத்தை மூடிவைத்து
மூடர் கையில் சிக்கி மக்கள் வாடவைத்து
புத்து போலும் கொடு நரகம் ஒரு கோடி
பூவுலகில் மேவ வைத்த பாவியே போ

பஞ்ச மென்று கோடி பேரைக் கொன்றாய் போ
பகைமை யென்று கொள்ளை பேரைத் தின்றாய் போ
மஞ்சைபோலும் மாதர் வாழ்வைப் பறித்தாய் போ
மழலை பொழியுங் குழலும் யாழும் முறித்தாய் போ

சஞ்சலத்தில் மூழ்கி மூழ்கிப் பலகாலும்
சர்ச்சனர்கள் தாங் கலங்கச் செய்தாய் போ
கஞ்சி யற்ற பஞ்சைகள் தம் பங்காளன்
கால் கடுத்துக் கோல் பிடிக்க வதைத்தாய் போ

சரம கீதம் பாடுகின்றோம் போ போ போ
சாபமிட்டுத் தூற்றுகின்றோம் போ போ போ
நரர்கள் யாரும் ஓட்டுகின்றோம் போ போ போ
நானிலத்தை விட்டு ஓடிப் போ போ போ

வா

ஒளிவழங்கும் வருடமே வா வா வா
ஊனமற்ற காலமே வா வா வா
களிதுலங்க வென்றுதித்து வா வா வா
கால தேவன் உளந்தழைக்க வா வா வா

பஞ்சமோடப் பசியுமாற வா வா வா
பகைமையென்ற தீயு மாற வா 'வா வா
அஞ்சலென்ற வார்த்தை கூறி வா வா வா
அன்பு பொங்கி எங்கும்பாய வா வா வா

அடிமையேக மிடிமைசாக வா வா வா
அவனி எங்கும் அறந்தழைக்க வா வா வா
கடமை என்று அவனிதன்னைக் கரியாக்கும்
கயவர் காலம் அத்தமிக்க வா வா வா

அன்னை கைத் தளை யறுந்து வீழ வென்று வா
அண்ட மெங்கும் அவள் புகழ்கள் சூழவென்று வா
பொன் கொழித் தவள் புதல்வர் வாழவென்று வா
பூமி யுள்ளார் சொர்க்க வாழ்வில் ஆழ வென்று வா

யுத்த மென்ற பேயுலகில் செத்து மாள வா
யூக மென்ற தந்திரங் கொள் சித்தம் மாள வா
கத்தி யென்றும் ரத்த மென்றும் பித்தங் கொண்டபேர்
கனிவு கொண்டு உலகை யென்றும் கட்டி யாள வா

சாதியென்றும் வேதமென்றும் பேதம் பேசுவார்
சகலஉயிரும் ஒன்று என்னும் போதங் கொள்ள வா
பாதிவயிறு உண்டுயிர்க்கும் பஞ்சைகள் எலாம்
பசுமையாக வாழ வென்று பறையறிந்து வா

வீமன் போலும் வீரரெங்கும் தோன்றவென்று வா
விதுரன்போலும் ஞானியர்கள்தோன்ற வென்றுவா
சோமன் போலும் அளியுடையார் ஆளவென்று வா
சுதந்தரத்தின் கிளைகளெங்கும் நீள வென்று வா

சங்கெடுத்து ஊதுகின்றோம் வா வா வா
சாமரைகள் வீசுகின்றோம் வா வா வா
பொங்கு கும்ப மேந்துகிறோம் வா வா வா
பூமியெங்கும் போற்றுகின்றோம் வா வா வா

நேரு - அவர் வீட்டில்

●

கல்யாணி சென்

ஜவாஹர்லால் நேருவைப்பார்க்க விரும்புகிறவர்களின் மனத்தில் எத்தனையோ கேள்விகள் உதிக்கின்றன. இந்த மனிதர் உண்மையிலேயே எப்படி இருக்கிறார்? டாம்பீகக்காரரா? சரளமாகப் பழகுவாரா? அதி தீவிர உணர்ச்சி உடையவரா? படாடோபமான அறைகளில் வசிக்கிறாரா? அல்லது சாதாரணமான அறைகளில் இருக்கிறாரா? பெரிய துரை மகனாரைப் போலக் கரண்டி வைத்துக்கொண்டு சாப்பிடுவாரா? அல்லது, சாதாரணமாக, தட்டிலிருந்து, கையிலேயே எடுத்துச் சாப்பிடுவாரா? ஸ்நானம் செய்யும்போது பாடுவாரா? உலகத்து விவகாரங்களை யதார்த்தமாகப் புரிந்துகொள்ளுவதற்காக, தினம் காலையில் எழுந்ததும் தலை கீழாகச் சற்று நேரம் இருப்பார் என்பதும் வாஸ்தவமா?

கீழே கொடுத்திருக்கும் அவருடைய தினசரி வாழ்கை பற்றிய விவரங்கள், அவரைப்பற்றிய அநேக அழகான கட்டுக் கதைகளைப் பொய்யாக்கி விடலாம். 'பெரிய ஆளாக' இருப்பதற்கு, பித்துக் கொள்ளித் தனமோ ஆடம்பரமோ தேவையில்லையென அறியப் பலருக்கு ஆறுதலாயுமிருக்கும்.

புது டில்லி, யார்க் ரோட் 17-ம் நம்பர் வீட்டில் இருக்கும் நேரு குடும்பம் ஒரு சிறிய குடும்பம்தான். ஜவாஹர்லால் நேரு இங்கேதான் வசிக்கிறார். பலர் நினைப்பதை விட, சற்றுச் சிறியதான தேக அமைப்பு; வேகமும், சுறுசுறுப்பும் நிறைந்திருப்பதால் அவர் இளமையாகவே காணப்படுகிறார். கஷ்டமான பொது வாழ்க்கையில் அடிபட்ட வயோதிகமான தோற்றம் இராது. ஒன்பது முறை சிறையிலே இருந்ததற்கான அறிகுறி எதும் வெளிப்படையாகத் தெரியாது. தலையில் இப்போதுதான் வழுக்கை விழுந்துகொண்டிருக்கிறது; ஓரங்களில் வெள்ளி மயிர்; நெற்றிக்கு மேலே, குல்லாயின் விளிம்பை ஒட்டினாற்போல ஒரு சுருக்கக் கோடு; இது வெயிலிலேயே அதிக நேரம் இருந்ததின் விளைவு; வெள்ளெழுத்துக் கண்ணாடி போடும் வழக்கம் உண்டு. கைகள் வலுவானவை; திறன் உடையவை. ஆழ்ந்த யோசனைகளில் லயித்திருக்கும்போது, லேசாகக் கீழ் உதட்டைப் பிதுக்கிக்கொள்ளுவார். ஜவாஹர்லாலிடம் ஓர் அலாதியான கவர்ச்சி இருக்கிறது. பார்க்க வருபவர்களுக்கு அவரிடம் மனப்பூர்வமான சிரத்தைகொள்ளச் செய்கிறது, அக்கவர்ச்சி.

இதுவே அவரை, மக்களைக் கவர்ந்திருக்கும் ஒரு சிறந்த பேச்சாளராகச் செய்திருக்கிறது; அவருடைய பிரசங்கம் ஆவேசமாகவோ பிரசங்க தோரணையிலோ இராது. அவருடைய உடல் மிகச் சக்தி வாய்ந்தது; அவருடைய குரல் ஆழ்ந்திருக்கும்; அவருடைய மௌனமோ, பெருத்த தொனியுடையது

பண்டித ஜவாஹர்லால் நேருவின் அரசியல் வாழ்க்கையை உலகம் முழுவதும் அறியும். ஆனால், அவருடைய தனிப்பட்ட சொந்த வாழ்க்கை எப்படியிருக்கிறது என்பதை இந்த ருசிகரமான கட்டுரை கூறுகிறது. ட்ரேண்டு பத்திரிகையிலிருந்து.

போலத் தோன்றும். ஒரு முறை, பத்திரிகை நிருபர் ஒருவர், அவரைத் துடுக்கான, சிறு பிள்ளைத் தனமான ஒரு கேள்வி கேட்ட போது, அவர் அதற்குப் பதிலே அளிக்க வில்லை. ஆனால், அவர் அதற்குத் தம் புருவத்தை நெறித்ததும், கடுமையாகப் பார்த்ததுமே, அந்த நிருபருக்குப் பதில் அளித்து விட்டன. அதனால் தான் நிருபர்கள், "நேரு மௌனத்தில் ஆழ்ந்துவிட்டால், அவ்வளவுதான். பிறகு அங்கே சோவி இல்லை!" என்று சொல்கிறார்கள். ஆனால், அநேக முறைகள் அவா பத்திரிகைக்காரர்களிடம் மிகுந்த பட்சத்துடனேயே நடந்துகொள்கிறார்.

நேருவுடன், முப்பது வயதான அவருடைய ஒரே மகள் இந்திரா காந்தி இருக்கிறார். அழகாயும், ஒல்லியாயும் இருக்கும் அவர், தம் தாயாரைப் போலவே சாயல் உடையவர்; அவருக்கு நான்கு வயதான ராஜீவா, சில மாதங்களே நிரம்பிய இன்னொரு குழந்தை ஆகஇரண்டு பையன்கள் உண்டு. இவருடைய கணவர் பிரோஸ் காந்திக்கு லக்ஷ்மணபுரி, நேஷனல்ஹெரால்டு பத்திரிகையில் வேலை. இவர் அடிக்கடி இங்கே வந்து போவார்; மற்றப்படி அங்கே குடியிருப்பவர்கள், நேருவின் இரண்டு அந்தரங்கக் காரியதரிசிகள்: ஒருவர் சிவதத்த உபாத்தியாயர். இவர் மோதிலால் நேருவின் அந்தரங்கக் காரியதரிசியாக இருந்தவர்; நீண்ட நாளைய பழக்கத்தால் நேருவின் குடும்பத்துள் ஒருவராகவே இருக்கிறார். இவரே ஹிந்திக் கடிதப் போக்குவரவுகளையும், பணப் போக்குவரத்துகளையும் கவனித்துக் கொள்ளுகிறார். மத்தாய் என்கிற மற்றவர், குவிந்துகொண்டிருக்கும் தபால்களைப் பார்ப்பதுடன், நேருஜிக்கு வீட்டிலும், காரியாலயத்திலும் பேட்டிகளை ஏற்பாடு செய்கிறார்; பிறகு, கச்ரூ; இவர் இந்திய சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டின் காரியதரிசி.

இவர்கள் மட்டுமல்ல வீட்டுக்காரர்கள்; ஹரிலால் என்ற நேருஜியின் சொந்தக் காரியதரிசி ஒருவர் இருக்கிறார். மோதிலால் நேருவின் காலத்திலேயே தம்முடைய ஒன்பதாவது வயதிலே ஏதோ ஒரு விசித்திர சந்தர்ப்பத்தினால் வந்து சேர்ந்த இவர் ஒரு 'தீண்டத்தகாதவர்.' இவர் வந்து எத்தனை வருஷங்களாயிற்று என்று யாருக்குமே நிச்சயமாய்த் தெரியாது. 1937-ம் வருஷம் ஐக்கிய மாகாண சட்டசபைக்குக் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட்டு, வெற்றியும் பெற்றார். இவர் தம் பெயருக்குப் பின்னால் எம். எல். ஏ. என்ற பட்டத்தையும் பெருமையாகச் சேர்த்துக் கொண்டார்.

நேருஜியை அவருடைய தினசரி வாழ்க்கையைப் பற்றிக் கேட்டபோது, "உங்களுக்கே தெரியும்; என் வாழ்க்கை அப்படி ஒன்றும் ஆச்சரியப்படத் தக்கதல்ல" என்று பதிலளித்தார். அவர் சொல்வதைக் கேட்கவென்றே நான் போயிருந்தேன். ஆகையினால், அவரை மேலே பேச விட்டேன். ஆனால் என் மனம் மட்டும் சிந்தனையில் ஆழ்ந்தது. "இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிப்பதே ஆச்சரியப்படத் தக்கதல்ல என்றால், அப்புறம் வேறு எதுதான் ஆச்சரியப்படக் கூடியது? அவர் மேலும் தம்மைப்பற்றிப் பல விவரங்களைக் கூறினார். அவர் காலையில் சீக்கிரம் எழுந்திருப்பவரல்ல. எட்டரை

மணி சுமாருக்குச் சில யோகா சனங்கள் செய்வார்; (இது தான், அவர் தலை கீழாக நிற்கும் கதை யின் 'மூலம்') குளித்துவிட்டு, காலை ஆகாரத்தையும் முடித்துக் கொண்ட பிறகு, தம் வேலையைத் தொடங்கத் தயாராகிவிடுகிறார். அவருடைய காரியதரிசி மத்தாய், ஏதாவது சந்திப்போ அல்லது ஏதாவது பேட்டியோ ஏற்பாடு செய்திருப்பார். அதற்காக, கீழே இருக்கும் பெரிய வரவேற்பு ஹாலுக்குச்செல்வார். பிறகு, தம் மகளுடன் இரண்டொரு வார்த்தை பேசிவிட்டு, ராஜீவா வைத் தட்டிக் கொடுத்துவிட்டு, காரியதரிசிகளுக்குக் கடைசி உத்தரவுகளையும் இட்டுவிட்டு, ஒன்பதரை மணிக்குச் செக்ர டேரியட்டுக்குப் புறப்படுகிறார். மத்தியானச் சாப்பாட்டுக்காக ஒன்றரை மணிக்குத் திரும்புகிறார். அநேகமாக இது அவசரச் சாப்பாடாகவே யிருக்கும்; யாராவது விருந்தாளிகளும் வந் திருப்பார்கள். மேஜை மேலேயே ஆகாரம் பரிமாறப் படுகிறது.

நேருஜி ஆகாரத்தில் அவ்வள வாகச் சிரத்தை கொள்ளுவதில்லை என்று அவர் மகள் கூறுகிறார். அவர் சைவச் சாப்பாடே சாப்பிடுகிறவர் என்று சாதாரண மாகப் பலர் எண்ணினாலும், அவர் மாமிசமும் சேர்த்துக் கொள்ளு கிறார். சிகரெட் குடிக்கிறார்; மதுபான வழக்கம் கிடையாது. பெரும்பாலான பெண் மக்கள் நினைப்பது போலவே, இந்திராவும் தம் தகப்பனார் அதிகம் சாப்பிடுவ தில்லை யென்று எண்ணி, இன்னும் கொஞ்சம் சாப்பிடும் படி வற்புறுத்திக் கொண்டே யிருக்கிறார்.

பகல் சாப்பாட்டுக்குப் பின் னர் மறுபடியும் செக்ரடேரியட் டுக்குச் சென்று, அயல்நாட்டு, சாம்ராஜ்ய உறவு இலாகாக்களில் தம் நேரத்தைக் கழிக்கிறார். ஆறரை அல்லது ஏழு மணிக்கு முன்பாகத் திரும்ப மாட்டார். ஏதாவது மகாநாடோ, மந்திரி கள் கூட்டமோ இருந்துவிட் டாலோ, சாப்பாட்டு நேரத்துக் குத்தான் வீட்டுக்கு வருவார். இரவுச் சாப்பாட்டுக்கும் யாரா வது விருந்தாளிகள் வந்திருப்பார் கள். பகலில் இருந்த அத்தனை காரியங்களுக்கும், சிரமங்களுக் கும், இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகுதான் ஈடுகொடுக்கிறார். நண்பர்களுடனும் உறவினர் களுடனும் வம்பு அளக்கிறார். ஆனால், இரவுச் சாப்பாட்டுக்குப் பின்னரே தம்முடைய படிப்பு அறையில், தனிமையாகத் தம் வேலையைக் கவனிப்பதாக நேருஜி கூறுகிறார். காரியாலய பைல்களையும் பார்த்துவிட்டு, பல் வேறு விதமான, காரியாலய, வீட்டுக் கடிதங்களையும் கவ னித்துவிட்டு, அநேகமாக நடுநிசி யில்தான் படுக்கச் செல்கிறார். இந்த அலுவல்களுக் கிடையே ஏதாவது ஒழிவு நேரம் இருந்தால் அதைப் படிப்பதில் செலவழிக் கிறார். கடைசிச் சில வருஷங் களில் அவர் அதிகமாகப் படித்த தெல்லாம் விமானத்திலோ, ரயி லிலோதான்.

விடுமுறை நாட்களில் தமக் குப் பிடித்த பொழுது போக்கு, நீச்சலும் குதிரைச் சவாரியும் என்கிறார் நேரு.

*

சந்திரன்

●

விஞ்ஞானி

சந்திரனை நம் கவிஞர்கள் அழகிய முகத்துக்கு ஒப்பிடுகிறார்கள். 'மதி முகத்தாள்' என்றும், 'சந்திர பிம்ப வதனம்' என்றும், இன்னும் எப்படியெல்லாமோ சந்திரனைக் காதலிலும், காவியத்திலும் கொண்டுவந்து இணைத்துக் கவிஞர்கள் பாடியிருக்கிறார்கள். ஆனால், விஞ்ஞானிகளுக்கோ சந்திரன், எரிமலை கக்கிய சாம்பல் குவியல்தான். விஞ்ஞான ரீதியில் சந்திரனை ஆராய்ந்து பார்த்தால், சந்திரனை அழகான பொருளாக மதிப்பதில் அர்த்தமே யில்லை.

பூமியிலிருந்து 2,40,000 மைல் தூரத்தில் இருக்கிறது சந்திரன். சந்திரனில் உள்ள மலைகள் வெறும் கற்பாறைகளாகவே யிருக்கின்றன. அப்பினைன்ஸ் எனப்படும் ஒரு மலைவரிசை 3100 சிகரங்கள் கொண்டது. இந்தச் சிகரங்களுள் மிக உயரமானது 19,000 அடி உயரமுள்ள ஒரு சிகரம். பெரிய பெரிய எரிமலைகளும் இங்கே இருக்கின்றன. மௌராலிக்ஸ் என்பதுதான் இவற்றுள் மிகப் பெரியது. 135 மைல் நீளமும், 37 மைல் முதல் 95 மைல் வரை அகலமும் உள்ளது இது.

அமெரிக்க ராணுவத்தினர் ராடார் மூலமாகச் சந்திரனுடன் தொடர்பு ஏற்படுத்தியிருக்கின்றனர். 1946, ஜனவரி 10-ம் தேதி மிக வேகத்துடன் பிரயாணம் செய்யும் சப்த அலைகளை அவர்கள் அனுப்பினார்கள். இரண்டரைக் கண நேரத்தில் சந்திரனிலிருந்து எதிரொலி வந்தது. 'ராடார்' மூலமாகவே சந்திரனின் தேசப் படம், ஒன்று தயாராகிறது. ராக்கெட் விமானத்தின் மூலமாகச் சந்திரனுக்குப் பிரயாணம் செய்வது சீக்கிரமே சாத்தியமாகலாம்.

பூமியைவிடச் சிறிதாகையால், சந்திரனில் ஆகர்ஷண சக்தியும் குறைவு. ஒரு மனிதன் பூமியில், மேலே எழும்பிக் குதிப்பதைப் போல் ஆறு மடங்கு அதிக உயரம் சந்திரனில் எழும்பிக் குதிக்கலாம். சந்திரனில் பிராணவாயுவும் தண்ணீரும் பூஜ்யம்; குளிரும் உஷ்ணமும் அதிகம்.

எரிமலை கக்கிய சாம்பலிலிருந்து பிரதிபலிக்கப்பட்ட ஒளியும், சந்திரனின் கிரண ஒளியும் ஒரே மாதிரியாக இருக்கின்றன என்று வியாட் என்ற விஞ்ஞானி கூறுகிறார். இந்தச் சாம்பல் உஷ்ணத்தை மிகக் குறைந்த அளவே வாங்கும். ஆகையால், மிக மிக உஷ்ணம் இல்லாததால், சந்திரனின் பரப்பிலே ஓர் அங்குல ஆழம் எப்போதும் உறைந்து போயே யிருக்கிறது.

சூரியன், மற்றக் கிரகங்கள் ஆகியவற்றின் ஆகர்ஷணத்துடன், சந்திரனின் ஆகர்ஷணமும் சேர்ந்துதான் அலைகளை எழுப்புகின்றன. சந்திரனை நோக்கி எழும்பி, குளிர்ந்து நிற்கும் தண்ணீர், கடற்கரையில் அலைபாய்ந்த பின்னர், மறுபடியும் திரும்பி விடுகிறது.

சந்திரனைப் பற்றிய மிக மிக அபூர்வமான குறிப்புகள் இவை.

✲

தென்னாப்பிரிக்க நரகம்

●

எஸ். ஜார்ஜியேவ்

ஜோஹன்னஸ்பர்க்கிலுள்ள தங்கச் சுரங்கங்களையடுத்துப் பல மைல் தூரத்துக்குத் தரிசு நிலங்களும், மலைகளும் அடர்ந்துள்ளன. பாடல்களிலும் போயர் யுத்தக் கதைகளிலும் போற்றப்படும் தங்கச் சுரங்கங்கள் இவைதாம்.

இப் பிரேதசங்களில் பிரம்மாண்டமான காம்பவுண்டுகள் வட்ட வடிவமாகவும், குதிரைலாட வடிவத்திலும் இருக்கின்றன. இந்தக் கட்டடங்களைச் சுற்றி உயரமான சுவர்கள் உள்ளன. இந்தச் சுவர்களைச் சுற்றி இரும்புக் கம்பிகள் வளைத்து நிற்கின்றன. இந்தப் 'பந்தோபஸ்துக்கள் போதாவென்று, வழியில் ஆயுதந் தாங்கிய வாயிற் காப்போன் வேறு. இதற்குள்தான் காவற் கைதிகள் போல் அந்நாட்டுச் சுரங்கத் தொழிலாளிகள் குடியிருக்கின்றனர். நகரங்களைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் கோழிக் கூட்டைப் போன்ற குடிசைகள் இருக்கின்றன. குப்பைக் குழியில் போடக்கூடிய சிறு சிறு இரும்புத் தகடுகளும், சிறு மரக் கட்டைகளும், உலர்ந்து உளுத்துப் போன மரக் கிளைகளும்தாம் அந்தக் குடிசைகளைக் கட்ட உபயோகிக்கப் பட்டவை. அந்தக் குடிசைகளில் கதவு, ஜன்னல், நாற்காலி, மேசை முதலியன கிடையாது. அங்கே துர் நாற்றம் வீசும். அருகில் எட்டின வரையில் தண்ணீர் கிடையாது. இத்தகைய குடிசைகளில் தான் வசிக்கிறார்கள் உழவர்கள்!—மனித இனத்தைச் சேர்ந்தவர்கள்!

அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் தலைவிரித்தாடும் தரித்திரத்துக்கு எதிர்மாறாகக் காட்சியளிக்கிறது ஜோஹன்னஸ்பர்க் நகரம். அது ஐரோப்பிய நகரங்களைப்போல நவ நாகரிக முறையில் அமைந்துள்ள நகரம். ஐரோப்பிய நகரங்களைப் போன்று அது காணப்பட்டாலும், ஐரோப்பா நெடுந்தொலைவில் இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்த எங்கு பார்த்தாலும் "ஐரோப்பியர்களுக்கு மட்டும்" என்று எழுதப்பட்ட பலகைகள், பஸ்களிலும், சினிமா டிக்கட்டு விற்கு மிடத்திலும், சிற்றுண்டிச் சாலைகளிலும் காட்சியளிக்கின்றன. பஸ்களிலும், சிற்றுண்டிச் சாலைகளிலும் சலுகையுடன் பிரயாணம் செய்யவும், உணவருந்தவும் ஐரோப்பியர்கள் அனைவருக்கும் உரிமையுண்டு. ஆனால் தென்னாப்பிரிக்க நிதியைச் சுரண்டி அனுபவிக்கப் பிரிட்டிஷ் மக்களுக்கு மட்டும்தான் ஏக போக உரிமையுண்டு.

1899–1902-ல் நடந்த போயர் யுத்தத்தில் வெற்றி பெற்ற பிரிட்

மாஸ்கோ நியூடைம்ஸில் வெளியான இக்கட்டுரையைப் படிப்பவர்களின் ரத்தம் கொதிக்கும். தென்னாப்பிரிக்கா என்னும் நரகத்தில், அந்த நாட்டில் பிறந்த மக்களே அந்நியர்களால் நாயினும் கேவலமாக நடத்தப்பட்டு நாளெல்லாம் உழைத்துச் சாவதை நினைத்தால், பிஜித் தீவில் இந்தியப் பெண்கள் பட்ட கஷ்டத்தை நினைத்துப் பாரதியார், 'அவர், விம்மி விம்மி விம்மியழும் குரல் கேட்டிருப்பாய் காற்றே', 'அதை மீட்டும் உரையாயோ?' என்று கதறியதைப் போல மனித உள்ளம் படைத்த எவனும் கதறுவான்.

டிஷார் ஆப்பிரிக்க மக்களின் வாழ்க்கையையும் அடிமைப் படுத்திவிட்டனர். பெயரளவில் மாத்திரம் தான் தென்னுப்பிரிக்கா பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளில் சம உரிமை பெற்ற ஒரு நாடாக விளங்குகிறது. பிரிட்டனின் பிடி தளராமல் இருப்பதற்குப் பெரிதும் பயன் படுவது தென்னுப்பிரிக்காவில் பிரிட்டன் போட்டிருக்கும் மூலதனம்தான். முதன் முதலில் வைரம், தங்கம் முதலியவற்றில் மட்டும் லாபம் சம்பாதிக்க ஈடு பட்ட பிரிட்டன், ஆப்பிரிக்காவின் மற்றப் பொருளாதாரத் துறையில் கவனம் செலுத்தவே இல்லை. இதன் காரணமாக ஆப்பிரிக்கா விவசாயத்திலும், கைத் தொழிலிலும் முன்னேருமல் உலகத்திலேயே மிகக் கேவலமான ஸ்தானத்தில் இருந்துவருகிறது. ஜோஹன்னஸ்பர்க்கில் விற்கப் பெறும் சாமான்கள் அனைத்தும் —மோட்டார் முதல் குழந்தைத் தொட்டில் வரையில்—இங்கிலாந்திலிருந்தோ அல்லது அமெரிக்காவிலிருந்தோ ஏற்றுமதி செய்யப்பட்டதாகத்தான் இருக்கும். நாட்டைச் சுற்றிப் பார்க்க வருகிற யாத்திரீகர்களுக்கு, அதிசயங்களையும் பார்க்கத் தகுந்த இடங்களையும் கொண்ட பிரசுரங்கள் கூட "இங்கிலாந்தில் செய்யப்பட்டது,'' என்ற முத்திரையைத் தாங்கிக்கொண் டிருக்கின்றன.

ஆதியிலிருந்து பிரிட்டன் அனுஷ்டிக்கும் கொள்கை என்னவென்ருல், பிரிட்டிஷார் உற்பத்தி செய்கிற சாமான்களுக்கு ஆப்பிரிக்கா ஒரு 'மார்க்கெட்'டாக இருக்க வேண்டும், இயற்கையிலேயே மிகுந்து கிடக்கிற தங்கம், வைரம், கம்பளி முதலியவற்றைச் சுரண்டிச் செல்லவேண்டும் என்பதுதான். லண்டன் நகரத்தைச் சேர்ந்த பிரபல வியாபாரியாகிய ஜான் மார்ட்டின் என்பவர் பல கம்பெனிகளில் பங்குதாரராக இருப்பதோடு, ஆப்பிரிக்காவில் வெளிவரும் பல பத்திரிகைகளின் கொள்கைகளை நிர்ணயிக்கும் அதிகாரமும் பெற்றிருக்கிருர். ஜான் மார்ட்டின், ஸ்மட்ஸைப் பற்றிப் பேசுகையில் தன்னுடைய 'பையன்' என்று குறிப்பிட்டுப் பேசுவாராம்.

பல திறப்பட்ட மக்கள் ஊழியம் செய்யும் ஒரு தங்கச் சுரங்கத்திற்குள் ஒரு முறை சென்ருல், அங்கு அதிகாரிகளும், முதலாளிகளும் தொழிலாளிகளை நடத்துவதில் ஓர் இனத்துக்கும் மற்ருேர் இனத்துக்கும் ஏற்றத் தாழ்வுகள் எவ்வளவு காட்டுகின்றனர் என்பது வெளிப்படும். ஜோஹன்னஸ்பர்க் செல்லும் வழியில் ஆப்பிரிக்கர் வாழும் இடங்களைப் பார்வையிட்டோம். அவை காவற் கூடங்களைக் காட்டிலும் கேவலமாக இருந்தன. தொழிலாளிகள் வசிக்கும் ஒரு பெரிய காம்பவுண்டுக்குள் ஐயாயிரம் தொழிலாளிகள் வசிக்கிருர்கள். அந்தப் பெரிய காம்பவுண்டு வாசலில் ஒரு கறுப்புப் போலீஸ்காரன் நிற்கிருன். அவனுக்குக் கட்டளையிட ஒரு வெள்ளைக்கார அதிகாரி. தொழிலாளி வெளியே வர வேண்டுமானல் 'அவுட் பாஸ்' வேண்டும். உணவு அளிக்கும் பொழுது தொழிலாளிகள் 'க்யூ' வரிசையில் நிற்கிருர்கள். பழங் காலத்தில் உபயோகத்திலிருந்த ஒரு பாத்திரம், ஒரு தகரக் குவளை, திருவோடு போன்ற ஒரு கிண்ணம், ஒவ்வொரு தொழிலாளியின் கையிலும்

இருந்தன. அவர்களுக்கு அளிக்கும் உணவும் சத்தில்லாத உணவுதான். சாதாரணமாக, பீன்ஸும் உருளைக் கிழங்கும்தான் அவர்களுக்கு உணவாகத் தரப்படுகின்றன. வாரத்தில் இரண்டு நாட்களுக்குக் கொஞ்சம் மாமிசம் தருகிறார்களாம். ஒவ்வொரு தொழிலாளியும் ஒரு உணவுக் 'கூபன்' வைத்திருக்கிறான். தினந்தோறும் அதைப் பார்வையிட்டுக் கையெழுத்திடும் அதிகாரி ஒரு வெள்ளையன். இந்தக் கூபன் புத்தகமே வேலையைக் குறிக்கும் ரிஜிஸ்டர் புத்தகமாகவும் பயன் படுகிறது.

பாத்திரத்தில் உணவு போடப்பட்டதும் தொழிலாளிகள் விரைவாக நடந்துசென்று, அங்கே ஹாலில் உட்கார்ந்து உணவு அருந்துகின்றனர். தொழிலாளிகளில் சிலரைத் தவிர மற்றவர்களிடம் கரண்டியே இல்லை. பெரும்பான்மையோர் தங்களுடைய வெறுங் கைகளினாலேயே உணவை எடுத்துச் சாப்பிடுகின்றனர்.

அவர்களுடைய ஆடைகளும் மிகக் கேவலமான நிலையிலுள்ளன. கிழிந்த, கந்தலான கால்சட்டையைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது. அங்கும் இங்குமாகச் சில சிறிய கந்தல்கள் கிடந்தன. அவை ஒரு காலத்தில் சட்டைகளாக இருந்திருக்கலாம் என்று தெரிந்தது. தொழிலாளிகள் அணிந்திருந்த பூட்ஸ்களும் அப்படித்தான் கிழிந்து, தேய்ந்து இருந்தன. பூட்ஸ் அணிந்திருந்தவர்களுடைய கட்டை விரல்கள் வெளிப்பட்டன. பலர், காலுக்கு ஒன்றுமே இல்லாமல் வெறுங் காலோடு வேலை செய்தனர்.

சுரங்கங்களின் உள்ளும், வெளியும் போலீஸ்காரர்கள், விலங்குகள் நிறைய வைத்துக் கொண்டு சுற்றி வருகிறார்கள்.

சுரங்கத்துக்குள் நாங்கள் இறங்கியதும், அங்கு தொழிலாளிகளை வேலைசெய்யத் தூண்ட அதிகாரியின் சாட்டையும் பிரம்பும் 'ரொம்ப ரொம்ப' அவசியம்தான் என்று கண்டுகொண்டோம். அங்குத் தொழிலாளிகள் வேலை செய்யும் நிலை, காண்பவரைக் கலங்கச் செய்யும். தொழிலாளிகளைத் துன்புறுத்தித்தான் வேலை வாங்குகின்றனர்.

சுரங்க முதலாளிகள், அந்த நாட்டு மக்களிடையே வேலைக்கு ஆள் பிடிக்கப் பல கங்காணிகளை வைத்திருக்கிறார்கள். வேலைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களை வைத்தியர்கள் பரிசோதனை செய்து பார்க்கிறார்கள். பரிசோதனைக்குப் பிறகு அவர்களுடைய சரீர உழைப்பு எவ்வளவு என்பதைக் குத்து மதிப்பாக மதிப்பிட்டு அவர்களுடைய மார்பில் தீட்டிவிடுகின்றனர். முதலில் அவர்களுக்குக் கொஞ்சம் பணத்தை அச்சாரமாகக் கொடுத்துவிட்டு, சுரங்கப் பிரதேசங்களுக்கு அனுப்பிவிடுகின்றனர். ஆகவே, முதலிலிருந்தே அந்தத் தொழிலாளிகள் முதலாளிகளுக்குக் கடன் பட்டவர்களாக ஆகிவிடுகின்றனர். முதலில். கொடுக்கப்படும் கடனைத் தொழிலாளிகளால் அடைக்க முடிவதே இல்லை. அவர்கள் வாங்கும் சம்பளம் அவர்களுடைய உணவுக்கும் உறங்கும் இடத்துக்குமே போதாதே! இந்நிலையில் தொழிலாளிகள் வேலை செய்ய வருவது மிகக் கடினம்தான். “காங்கோவிற்குத் தெற்கே” என்ற புத்தகத்தில்

ஸெல்வின் ஜேம்ஸ், முதலாளிகளும் போலிசாரும் 'மனித வேட்டை' யாடும் கொடுமையைப் பின் வருமாறு விவரித்துள்ளார்:

"வடக்கு டிரான்ஸ்வாலில் இந்த வேட்டை நடந்தது. பத்துப் போலிஸ்காரர்கள், சுரங்க வேலைக்கு ஆள் பிடிக்கும் கங்காணி ஒருவன், நான்கு பன்ட்டுக்கள் [பன்ட்டுக்கள் - தென் ஆப்பிரிக்காவின் ஒரு விதச் சாதியினர்.—ஆசிரியர், சக்தி] நான்—ஆகப் பதினறு பேர்கள் இருந்தோம். பன்ட்டுக்கள் உற்சாகத்துடன் இருந்தனர்......ஒவ்வொருவனும் தங்களுக்கு வரி கொடாத பத்துக் கறுப்பு மனிதர்களைத் தெரியும் என்றான்.

'இவர்கள் இல்லாவிட்டால் நமக்குக் கஷ்டமதான். இவர்கள்தான் நம் காரியத்தை எளிதாக்கி விட்டனர். இவர்களுக்குக் கொடுக்கும் பணம் செரிக்கும்!' என்றான் போலிஸ் தலைவன்.

'அவர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கிறீர்கள்?' என்று நான் கேட்டேன்.

இவர்கள் பிடித்துத் தரும் ஒவ்வொரு காப்பிரிக்கும் இரண்டு ஷில்லிங் ஆறு பென்ஸ் ஊதியம் பெறுகின்றனர்.

(காப்பிரி = தென் ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு சாதியினர். ஆசியாவிலுள்ள காப்பிரிஸ்தான் நாட்டின் ஆதிமக்கள். பன்ட்டுக்கள் என்று சொல்லப் படுகிறவர்களும் காப்பிரிகளைச் சேர்ந்தவர்களே—ஆசிரியர், சக்தி)

சில இரவுகளில் இரண்டு பவுன் கூடச் சம்பாதித்துவிடுவார்கள். ஒரு பன்ட்டுவுக்கு அந்தச் சம்பளம் பெரிதுதான்.

ஆள் பிடிக்கும் கங்காணி சளைக்காதவன். போலிசாருடன் தொடர்ந்து ஏழு இரவுகள் மனித வேட்டையில் ஈடுபட்டான்.

இது வரையில் கிடைத்திருக்கும் ஆட்கள் எல்லாம் படுகிழவர்கள். இவர்களைச் சுரங்கத்துக்கு வேலை செய்ய அனுப்பக்கூடாது. இன்று இரவு நல்ல ஆட்கள் கிடைக்கலாம். இந்தச் சாபிதாவில் உள்ள ஏழு பேரும் நாற்பது வயதுக்கு உட்பட்டவர்கள் தாம்.

......நகரத்துக்கு அப்பால் இரண்டு மைல்கள் தாண்டி ரஸ்தாவை விட்டுக் கிராமங்களுக்குள் சென்றோம். அந்தக் கிராமத்தில் குடிசைகளில் தாங்கள் வைத்திருந்த சாபிதாவுக்கு மேல் ஐம்பது ஆட்கள் வரி கொடாமல் இருக்கலாம் என்று சந்தேகித்தான் கூட வந்த பன்ட்டு.

'அவர்கள் அனைவரையும் பிடித்து விடுவோம்' என்றான் போலிஸ் அதிகாரி.

'எல்லாரையுமா?' என்று நம்ப முடியாமல் கேட்டேன் நான்.

'வரி கொடுத்ததற்கு ரசீது வைத்திராத அனைவரையும் பிடித்துவிட வேண்டும். இந்த இருட்டில் ரசீதை எங்கே கண்டு பிடிக்கப் போகிறார்கள்!' என்றான் போலிஸ் அதிகாரி.

......ஐந்து போலிஸ்காரர்கள் முக்கியமான இடங்களில் காவல் புரிந்தனர். 'வெறுமனே' ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனர். மற்றவர்கள் குடிசைகளை நோக்கி நடந்தோம். மக்கள் அனைவரும் நடுநடுங்கிப் போய்த் தப்ப வழி இல்லாமல் தவித்தனர்.

பெண்கள் கூச்சலிட்டனர், குழந்தைகள் அலறின—ஆண்கள் சபித்தனர். அரை மணிக்கு

அப்புறம் நாங்கள் அந்தக் குக்கிராமத்தை விட்டு வரும்பொழுது வயது வந்த மனிதன் ஒருவனும் அங்கில்லை. அனைவரையும் கூட்டிக் கொண்டோம்.

பண்டுக்கள், அவர்கள் தப்பி ஓடிவிடாமல் அனைவரையும் ஒன்று சேர்த்துக் கட்டிவிட்டனர். ஆயுதந் தாங்கிய போலிஸ்காரர்கள் அவர்களுக்கு இரு மருங்கிலும் நடந்து சென்றனர்.''

கேப் டவுனுக்குப் போகிற வழியில் காருக்குப் பெட்ரோல் போடுவதற்காக ஓர் இடத்தில் சற்று நேரம் தங்கினோம். அங்கு சில சிறு குடிசைகள் இருந்தன. அது ஒரு கிராமம் என்று அறிந்தோம். எப்படி வைத்திருக்கிறார்கள் பார்ப்போம் என்று அங்கே சென்றோம். அங்கு கண்ட காட்சியைச் சித்தரிக்க எழுத்தால் முடியாது. அங்கு மக்கள் படும் துயரம்! வாழும் வாழ்க்கை! குப்பைத் தொட்டியி லிருந்து எடுக்கப்பட்ட இரும்புத் தகடுகளால் காமா சோமாவென்று கட்டப்பெற் றிருந்தன குடிசைகள். சன்னலு மில்லை; கதவும் இல்லை. குடிசைக்குள் ஒரே அழுக்கும் கும்மிருட்டும். மேசை நாற்காலி ஒன்றும் கிடையாது. மக்கள் கீழேதான் படுத்து உறங்குகின்றனர். பெரியவர்கள் உடம்பை மறைத்துவிட்டதாக எண்ணிக் கிழிந்த கந்தலான அழுக்கு உடைகளை அணிந்திருக்கின்றனர். குழந்தைகள் உடையில்லாமல் பிறந்த மேனியுடன் அம்மணமாக விளையாடுகின்றன.

அவர்கள் உண்ணும் பிரதான உணவு சோளம்தான். சாப்பிடும்பொழுது சோளச் சோறு நிறைந்த பானையை மத்தியில் வைத்துவிட்டு, அதைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு ஒரே சமயத்தில் அனைவரும் அந்தப் பானையில் இருந்து உணவை எடுத்து உண்ணுகின்றனர்.

அநேகக் குடும்பத்தினர் மலையடிவாரத்தில் வசிக்கின்றனர். அந்தக் குடிசைகளைப் பார்த்தபொழுது, பழங்குடி மக்களின் குடிசைகளைத்தான் பார்வையிடுகிறோம் என்ற எண்ணம் உண்டாயிற்று. கேப் டவுன் நெருங்கிய பொழுது திராக்ஷைத் தோட்டங்களையும், சோள வயல்களையும் தாண்டிச் சென்றோம். பெரிய துறைமுகமும், திராக்ஷை உற்பத்தியும்தான் கேப் டவுனுக்குப் பெருமை அளிக்கின்றன. மேலும், இதுதான் ராஜிய விஷயங்களில் முக்கியத்துவம் வாய்ந்து விளங்குகிறது.

தென் ஆப்பிரிக்காவில் ஒரே ஒரு சர்வ கலாசாலைதான் இருக்கிறது. சர்வ கலாசாலை விதிப்படி ஐரோப்பிய ரல்லாதார் ஐவரோ அறுவரோதான், வைத்தியக் கல்லூரிக்கும், ஆசிரியக் கல்லூரிக்கும் அனுமதிக்கப்படுகின்றனர்.

தென் ஆப்பிரிக்கா முழுவதும் இம்மாதிரியான பாஸிச அடக்குமுறையும், இனப் பிரிவினையும் தான் தாண்டவ மாடுகின்றன. பொது இடங்களி லெல்லாம் 'ஐரோப்பியர்களுக்கு மட்டும்' என்று பலகைகள் தொங்குகின்றன. அவர்கள் பிறந்து வளர்ந்த நாட்டிலே அவர்களுக்கு உரிமை கிடையாது! அவர்கள் ஓர் ஐரோப்பியனுடன் ஒரே வண்டியில் பிரயாணம் செய்யக்கூடாது. உயிரோடு இருக்கும்பொழுது தான் இந்தக் கட்டுப்பாடுகள். இறந்த பிறகுமா இந்தத் தொல்லைகள் தொடரவேண்டும்! ஐரோப்பியர்களை அடக்கம் செய்யும்

கல்லறையின் பக்கத்தில் ஆப்பிரிக்கர்களைப் புதைக்கக் கூடாது!

நாங்கள் சென்றிருந்த சமயம் தான் தென் ஆப்பிரிக்கப் பாராளுமன்றம் கூடியது. பாராளுமன்றத்தின் 197 அங்கத்தினர்களில், 190 அங்கத்தினர்கள் 20 லட்சம் வெள்ளையர்களின் பிரதிநிதியாகச் சென்றிருக்கிறார்கள். ஆனால், பாக்கி எழுவர்தான் ஐரோப்பியர் அல்லாத 90 லட்சம் மக்களின் பிரதிநிதிகள். இந்த எழுவர் கூட வெள்ளையர்தாம்!

நான்கு கட்சிகள் பதவியைப் பகிர்ந்துகொண் டுள்ளன. ஐக்கியக் கட்சிதான் இப்பொழுது அதிகாரத்தில் உள்ளது. இரண்டாவதாகத் தேசியக்கட்சி; தொழிற்கட்சியும் டொமினியன் கட்சியும் முறையே மூன்றாவது நான்காவது ஸ்தானங்கள் வகிக்கின்றன.

ஐக்கியக் கட்சியில் சொத்துக்காரர்களும், நிலச்சுவான்தார்களும்தான் அங்கத்தினர்கள். சுதேசிகளுக்கு எதிராகத் தங்களுடைய ஸ்தாபனத்தை வலுப்படுத்தித் தங்களுடைய அரசாங்கத்தை நிர்மாணிக்க வேண்டியது தான் அவர்களுடைய கொள்கை. அந்நிய நாட்டுக் கொள்கைகளுக்கு இந்தக் கட்சி இங்கிலாந்தின் துணையை நாடுகிறது. இத்தக் கட்சியின் தலைவர்தான் பீல்டு மார்ஷல் ஸ்மட்ஸ். பெரிய நிலச்சுவான்தாரும், அடிமைகளை வைத்து வதைத்தவருடைய புதல்வருமாகிய ஸ்மட்ஸ் நிலச்சுவான்தாரின் ஆணவ ஆட்சியைத் தம் காலத்தில் புதுப்பிக்கப் பெரிதும் பாடுபடுகிறார்.

தொழிலாளிகளின் வளர்ச்சியைத் தடைப்படுத்த அவர்களுடைய பொருள்களையும், நிலபுலன்களையும் பறிமுதல் செய்வதில் மிகவும் கீர்த்தி பெற்றவர் ஸ்மட்ஸ்.

1919-ம் ஆண்டில் இவர் பிரதம மந்திரியாக வந்தார். 1922-ல் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்திருந்தபொழுது, அதைத் தகர்த்தெறிய வேண்டி விமானத்திலிருந்து குண்டு போடச் சொன்ன புண்ணியவான் இவர் தான். இம்மாதிரி, மனித சமூகத்துக்கு இழுக்குத் தேடும் வகையில் இவர் நடந்துகொண்டதால், 1924-ல் நடந்த தேர்தலில் தோல்வியுற்றார். அந்தப் பதவிக்கு ஜெனரல் ஹெர்ட்சாக் வந்தார்.

1939-ல் நாஜிகளை எதிர்த்துப் போர் செய்யத் தாமும் உதவி புரிய முன் வந்தார். இந்த யுத்த உதவியால் இவர் இழந்த பிரதம மந்திரி பதவி மீண்டும் கிடைத்தது.

யுத்தகாலத்தில்,எழும் தவிர்க்க முடியாத சில சம்பவங்களாலும், ஜெர்மானியப் படையெடுப்புப் பீதியினாலும், சுதேசிகளுக்குச் சில நன்மைகள் செய்வதாக வாக்குறுதி கொடுக்கவேண்டிவந்தது. 1942-ல் நிறத் துவேஷத்தை ஒழிப்பதாக வாக்களித்தார். ஆனால், இந்த வாக்குறுதியைக் கடைப்பிடிக்க முடியவில்லை. தான் செய்யப் போவதாக வாக்களித்த நன்மைகளுக்குப் பதிலாக, சுதேசிகள் பல இன்னல்களுக்குப் பாத்திரமாக்கப்பட்டனர்.

அகண்ட ஆப்பிரிக்கா என்று சொல்லிக்கொண்டு தென் ஆப்பிரிக்காவில் உள்ள மற்ற ஐரோப்பியர்களின் உதவியையும நல்லெண்ணத்தையும் பெறவே இம்மாதிரி பிரபலப்படுத்துகிறார். இந்த நோக்கத்துடன்தான் ஸ்மட்ஸ், தென்மேற்கு ஆப்பிரிக்

காவையும், தென் ஆப்பிரிக்க யூனியனில் சேர்த்துக்கொள்ள, ஐக்கிய நாடுகளிடம் அனுமதி கேட்டார்.

ஜனநாயக முறைக்கேற்றபடி முன்னேற்றப் பாதையில் ஸ்மட்ஸ் ஒரு சிறிதும் முன்னேற வில்லை. தாம் பிரதமரா யிருக்கும் அதிகாரத்தினால் பிற்போக்கான ஸ்தாபனங்களையும், பாஸிசக் கொள்கைகள் கொண்ட இயக்கங்களையும்தான் வளர்க்க உதவுகிறார். இன்று ஆப்பிரிக்கா வில் மறைமுகமாக நடந்துவரும் பாஸிச ஸ்தாபனங்களுக்கு ஒரு வித தடையு மில்லை எனலாம்.

தேசியக் கட்சி அரசாங்கக் கட்சியாகிய ஐக்கியக் கட்சியை எதிர்த்தாலும் பல விஷயங்களி லும் இந்தக் கட்சியும் பிற்போக் கான நிலையில்தான் உள்ளது. நீக்ரோக்களையும் இந்துக்களையும் அடக்கி ஆளுவதிலும்,முன்னேற் றப் பாதையில் செல்லும் ஸ்தாப னங்களை ஒடுக்க அவற்றின் சொத்துக்களைப் பறிமுதல் செய் யும் புனித கைங்கரியத்திலும் ஸ்மட்ஸ் அரசாங்கத்தோடு முழு மனத்தோடு ஒத்துழைக்கிறது தேசியக் கட்சி. டொமினியன் கட்சிகூட இதற்கு விலக்கல்ல.

பிறகு கேப் டவுனி லிருந்து டர் பனுக்குச் சென்றோம். டர்பன் ஒரு துறைமுகப் பட்டணம். இங்குதான் மக்கள் சுதந்திர மற்று, ஏழ்மையில் மூழ்கிக் கருத் தழிந்து வாடுகின்றனர். நிறத் துவேஷம் கூட இங்கு அதிக மாகக் காட்டப்படுகிறது. இங்கு வந்து இறங்கிய தினத்தன்று மிகக் கேவலமான அநாகரிகக் காட்சி ஒன்றைப் பார்த்தோம். சில பிரிட்டிஷ் மானுமிகள், மனி தன் மாடுபோல் இழுத்துச் செல்லும் ரிக்ஷா வண்டியில் உட் கார்ந்து கொண்டு, களைத்து ஓய்ந்துபோன நீக்ரோ ரிக்ஷா வண்டிக்காரனை, வேகமாக இழுத்துச்செல்லும்படி மாட்டை அடிப்பதுபோல் சாட்டை கொண்டு விரட்டி அடித்தனர்.

மறுநாள் நகரத்துக்கு இரண்டு மூன்று மைல்கள் தாண்டி ஓர் ஆஸ்பத்திரிக்குச் சென்றோம். நாங்கள் அங்கே கண்ட காட்சி மனத்தை உருக்குகிறது. நோயால் வாடும் மக்களுக்குச் சிகிச்சை ஒன்றும் தரப்பட வில்லை. வேதனை யோடு அவர்கள் வருந்தினர். நோயினால் வருந்தும் மக்களைப் பிறரிட மிருந்து பிரித்துவைத்தி ருப்பதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடு போல்தான் தோன்றி யதே ஒழிய, அது ஆஸ்பத்திரி போலத் தோன்ற வில்லை. மனத் தைப் புண்படுத்தும் வேதனை மிக்க அழு குரல்கள் குழந்தை கள் இருக்குமிடத்தி லிருந்து வந் தன. நாலைந்து பேர்கள்கூடச் சௌகரியமாக இருக்க முடியாத ஓர் இருட்டான அறையில் இரு பது முப்பது குழந்தைகள் அடைக்கப்பட் டிருந்தார்கள். சில குழந்தைகள் கட்டிலிலும், சில குழந்தைகள் கீழே விரித் திருக்கும், துர்நாற்றம் வீசும், ஈர, நைப்பான பாய்களிலும் படுத்திருந்தன.

அந்த நாட்டு மக்கள் ஏழ்மை யாலும், பசிப் பிணியாலும், நோயி னாலும் வாடி மடிகின்றனர் என் பதை டர்பன் நகரில்தான் தெரிந்துகொண்டோம். 1939-ல் எடுத்து வைத்திருந்த தஸ்தா வேஜிப்படி காச நோயால் வருந் திய 720 பேர்களில் 648 பேர் கள் இறந்தொழிந்தனர். சுதேச மக்களின் குழந்தைகளில் 50 சத விகிதம் குழந்தைப் பருவத்தி லேயே இறந்துவிடுகின்றன.

அங்குள்ள மருத்துவர்களின் அபிப்பிராயப்படி மக்களுக்கு வரும் நோய்க்குக் காரணம் போஷாக்குக் குறைவுதான் என்று அறிந்துகொண்டோம்.

சுதேச மக்களுக்குக் கல்வி வசதியே யில்லை. ஐரோப்பியர் களுக்கு மாத்திரம்தான் கல்வி வசதி உண்டு. ஓர் ஐரோப்பியக் குழந்தைக்கு 20 பவுனும், ஒரு சுதேசக் குழந்தைக்கு கேவலம் 3 பவுன் வீதமும்தான் செல விடப்படுகிறது.

முன்னால் குறிப்பிட்ட அதே புத்தகத்தில் செல்வின் ஜேம்ஸ் கல்வியைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:

"......டிரான்ஸ்வாலில் பன்ட்டூக்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் பள்ளிக்கூடத்தைப் பற்றி ஒரு கல்வி அதிகாரி சொன்னதாவது: 'கண்ணியமான ஒரு குடியானவன் தன்னுடைய ஆடு மாடுகளைக்கூட அங்கே கட்டுவதற்குக் கூசுவான்'".

ஜோஹன்னஸ்பர்க்கில் ஒரு பள்ளிக்கூடத்தில் இரும்புத் தகட்டினாலான ஒரு சில சிறு கூடங்கள் உள்ளன. அங்கு 1250 மாணவர்களும் 20 உபாத்தியாயர்களும் இருக்கின்றனர். அவற்றில் ஒரு கூடத்தில் 373 சிறு குழந்தைகள் ஒன்றாகக் கல்வி பயிலுகின்றனர்.

ஜோஹன்னஸ்பர்க்கில்தான் ஆட்டு மந்தைபோல் சிறிய இடத்தில் அதிக மாணவர்களை அடைக்கின்றனர். காற்று வெளிச்ச மில்லாத ஒரு சிறிய அறையில் 280 மாணவர்களைப் புளி அடைப்பதுபோல் அடைத்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கல்வி போதிக்க ஒரே ஓர் உபாத்தியாயர் தான். அந்தக் கும்பலில் ஒரு புறத்தில் குழந்தைகள் வாய்ப்பாட்டை உரத்த குரலில் கத்திப் படித்துக்கொண்டிருந்தன. மற்றொரு புறம் சரித்திரம் வாசிக்க முயன்றன மற்றக் குழந்தைகள்.

ஆர்டாண்டோவில் நால்வருக்காகச் செய்த பெஞ்சு ஒன்றில் ஒன்பது மாணவர்கள் நெருக்கியடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். இடம் இல்லாத மற்ற மாணவர்கள் வெளியிலும் படியிலும் உட்கார்ந்துகொண்டு சிலேட்டைத் தங்களுடைய முழங்காலில் வைத்துக்கொண்டு ஏதோ எழுத முயன்றுகொண்டிருந்தார்கள்.

இந்தக் கஷ்டத்துக் கெல்லாம் உள்ளாகிக் கல்வி கற்கச் செல்லும் சுதேசிக் குழந்தைகளும் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் படிப்பதே இல்லை. ஜனங்களில் பெரும்பான்மையோருக்கு எழுதப் படிக்கத் தெரியாது.

தென் ஆப்பிரிக்காவை ஆளுகின்றவர்களுடைய கொள்கையே சுதேசிகளைக் கல்வியறிவற்ற மூடர்களாகவும் சுமை தூக்கும் பிராணிகளாகவும் செய்வதுதான். இந்தக் கொள்கை எங்கு சென்றாலும் வெட்ட வெளிச்சமாகக் காணப்பட்டது. 'சுதேச மக்களை முன்னேற்றவும் அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்கவும்தான் அரசாங்கம் பாடுபடுகிறது' என்று ஸ்மட்ஸ் துரை சொல்லுவது எவ்வளவு பொய், எவ்வளவு ஜாலப்புரட்டு என்பது ஆப்பிரிக்காவுக்குச் சென்றுவரும் ஒவ்வொருவருக்கும் தெரியவரும்.

*

லம்பாடிகள்

"கல்யாணி"

"இந்தியர்களுக்குள்ளேயே மிகவும் திடகாத்திரமான அதிக பலமுள்ள மக்கள்" என்று நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அறிஞர் ஒருவரால் புகழப்பட்ட லம்பாடிகள் என்னும் வசீகரம் நிறைந்த நாடோடிக் கூட்டத்தினர், தக்ஷிண இந்தியா முழுவதும் பரவியுள்ளார்கள். அவர்களுடைய வலுக்குன்றாத உடற்கட்டை அட்டையிலுள்ள சித்திரத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

தக்ஷிணத்தில் வாழும் இம் மக்கள், இந்தியாவில் தாழ்ந்த நிலையில் உள்ள அநாகரிக மக்களுள் மிகவும் அதிசயம் நிறைந்தவர்கள். இவர்களின் நடை, உடை, பாவனை மிகவும் அதிசயமானவை. சிறிது காலத்திற்கு முன் வரை, களவு, கொலை மூலம் தங்கள் வயிற்றை வளர்த்து வந்ததனால் ஜனங்கள் இவர்களைக் கண்டு பீதியும் பயமும் அடைந்தார்கள். குழந்தைகளைக்கூட இவர்கள் இரக்கமின்றிப் பலியிட்டு வந்ததால் மக்களுக்கு இவர்களிடம் பயமும் உண்டு; வெறுப்பும் உண்டு.

இன்று சிறிது சிறிதாகத் தங்களுடைய நாடோடித் தன்மையை மாற்றிக் கொண்டு ஒழுங்காகப் பொது வாழ்வில் ஈடுபட்டு வருகிறார்கள். எருதுகளின் மேல் தானியங்களைச் சுமை ஏற்றி மலைப் பிரதேசங்களிலும் காட்டுப் பிரதேசங்களிலும் கரடுமுரடான பாதைகள் வழியாகக் கொண்டு செலுத்துவதில் பொதுவாக, எல்லோரும் ஈடுபட்டுள்ளார்கள். காடுகளில் போய் விறகு வெட்டி, தலைமீது சுமந்து சென்று அருகிலுள்ள நகரங்களில் விற்பதும் ஒரு முக்கிய தொழில்.

கிராமங்களுக்குச் சிறிது தூரத்தில் தனியான இடத்தில் குடிசைகள் கட்டிக்கொண்டு அங்கே வசிக்கிறார்கள். இவர்கள் குடிசையின் பெயர் 'தண்டா' என்பதாகும். இவர்களுக்குச் சொந்தமான ஆடு மாடுகளும் உண்டு. இவற்றைத் தங்கள் 'தண்டா'க்களுக்கு முன்பாகக் கட்டி வைப்பார்கள்.

உலகில், உடுத்தும் உடைகளிலும் அணியும் ஆபரணங்களிலும் பலவகை உண்டு; சில விசித்திரமானவை. லம்பாடிப் பெண்களுடைய ஆடைகளும் ஆபரணங்களும் அதிசயமானவை. இதை, அட்டைப் படத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். இப் பெண்கள் சேலை உடுத்தி அறியார்கள். தடித்த முரட்டுத் துணியாலாகிய பாவாடையையே இடையில் உடுப்பார்கள். மார்பில் ஒரு ரவிக்கையும் தலையில் ஒருமேலங்கியுமே இவர்களுடைய மொத்த உடை. இவர்களின் பாவாடைக்கு 'லுங்கா' என்று பெயர். இவர்கள் ரவிக்கையின் முன்புறத்திலும் தோள்களிலும் அழகாகப் பூவேலை செய்திருக்கும். இந்த ரவிக்கை பல

நாடோடிகளாக அலைந்து வாழும் லம்பாடி இனத்தவர்களைப் பற்றிய முக்கியமான குறிப்புகளும் முக்கியமான செய்திகளும் இக் கட்டுரையில் காணப்படுகின்றன. புரோகிதரைக் கிள்ளுவதிலிருந்து குழந்தைகளைக் கொல்லுவதுவரை எத்தனையோ விசித்திரங்களையும், விபரீதங்களையும் செய்கிறார்கள் இந்த லம்பாடிகள்—சூதுவாதற்ற மக்கள்!

திறங்களாலான கயிறுகளால் பின்புறத்தில் இழுத்துக் கட்டப் பட்டிருக்கும். அக்கயிறுகளின் நுனிகளை, மணிகளும் பல கரைகளும் அழகு செய்யும். இவர்கள் தலைமேல் போர்த்துக்கொண்டிருக்கும் துணியில்தான் பூவேலை அதிகம். ரவிக்கையின்மேல் மார்பை மறைப்பதற்குப் பயன்படும் இந்தத் துணி இடுப்பில் இழுத்துக் கட்டப்பட்டுப் பக்கத்தில் தொங்கிங்கொண்டிருக்கும்.

ஆடையைப் போலவே ஆபரணங்களும் எத்தனையோ தினுசுகளுடன் பார்ப்பதற்குக் கவர்ச்சியாயும், பிரமிப்பாயும், இருக்கும். நம்நாட்டுப் பெண்களிடம் போல பொன்னாலும் பொன் கலந்த பிறவாலும் ஆகிய நகைகளை இவர்களிடம் காண முடியாவிட்டாலும், பால் போன்ற வெண்மையான பல கரைகளாலும் பல நிறமான மணிகளாலும் ஆன பல நகைகளை அணிவதில் இவர்களுக்குப் பிரியம் அதிகம். இயற்கையில் தங்களுக்கென்றே அமைந்த அழகையும், முக வசீகரத்தையும், தோற்றத்தின் இனிமையையும் இவர்கள் அணியும் ஆபரணங்கள் ஒன்றும் கெடுத்துவிடுவதில்லை.

இவர்கள் இடையில் பல கரைகளாலான குஞ்சங்களும் சரங்களும் தொங்கிக்கொண்டிருக்கும். தலை மீது போர்த்துக் கொள்ளும் துணியின் ஓரம் முழுவதும் பல கரைகளாலும் காசுகளாலும் ஆன நீண்ட சரத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இந்த முன்னணியில் இருக்கும் பல கரைகளும் நாணயங்களும் முகத்தில் விழுந்து ஊசலாடிக்கொண்டிருக்கும் காட்சி, பார்ப்பவர்களின் கண்களுக்கு ஒரு பெரு விருந்தாகவே இருக்கும். கண்ணாடி மணிகளாலான 'செயின்'கள், குறைந்தது பத்து இருபது, இவர்கள் கழுத்தை அலங்கரிக்கின்றன. மணமான பெண்கள் தாலிக் கயிற்றைப் போன்று ஒரு வெள்ளி ஹாரத்தைக் கழுத்தில் அணிவார்கள். இந்த வெள்ளி ஹாரத்தின் உதவியால் ஒரு பெண் விவாகம் ஆனவளா ஆகாதவளா என்பதைக் கண்டுகொள்ளலாம். நம் நாட்டில் இப்பொழுது 'பாஷன்' என்று காதில் அணிந்துகொள்ளும் 'ஜிமிக்கி' இவர்களிடமிருந்தே கடன் வாங்கப்பட்டது என்னலாம். இவர்கள் அணியும் காதணிக்கு லம்பாடிகள் மொழியில் 'சீடா' என்று பெயர். 'சீடா' தந்தத்தால் ஆனது: பிடரி மயிரைக் கொண்டு சரடு திரிக்கப்பட்டது.

ஆனால், இந் நகைகளைவிட மதிப்பில் உயர்ந்தவை வேறு உண்டு. ஒரு லம்பாடிப் பெண்ணின் அருமையான சொத்து, அவள் அணியும் கை வளையே யாகும். அகன்ற பெரிய இவ் வளையல்கள் மரத்தாலோ, எலும்பாலோ, தந்தத்தாலோ ஆனவை. மணமான பெண்கள் கை முழுவதும் - தோளிலிருந்து மணிக்கட்டுவரை - இவ் வளையல்களை அணிகிறார்கள். கன்னிப் பெண்களும் விதவைகளும் இவற்றை மேல் கையில் அணிய மாட்டார்கள். மணமான பெண்கள் எலும்பாலும் தந்தத்தாலும் ஆன கால் கொலுசுகளை அணிவார்கள். இக் கொலுசுகளும், பொதுவாக, எல்லா நகைகளையும் போல உருவில் பெரியனவாகும். இவ்வாறாக, ஒரு லம்பாடிப் பெண் சராசரி எட்டு முதல் பத்து பவுண்டு நிறையுள்ள உலோகத்தையும் எலும்பையும்

நாள் முழுவதும் சுமந்துகொண்டிருக்கிறார்கள் - ஆபரணங்கள் என்ற பெயரால்!

இவர்களில் கன்னிப் பெண்களின் தலை மயிர் அலங்கரிக்கப்பட்டிருக்காது. ஆனால், மணமான பெண்கள் கூந்தலை வாரி, ஒன்றாக முடித்து கொண்டை போட்டு விட்டு, அக் கொண்டையில் தந்தம் அல்லது பித்தளையாலான 'தலைப் பில்லை'யை அணிவார்கள். 'குஜிரிகள்' என்னும் பளுவான நகைகள் கன்னப் பொறியிலிருந்து தொங்கிக் கொண்டு இருக்கும். மேலே கூறிய இரண்டும் திருமணத்தின் அடையாளங்கள். இவை இரண்டும் ஒரு பெண்ணிடம் காணப்படவில்லை யென்றால், அவள் விதவை யாவாள்.

லம்பாடிகளுடைய திருமணச் சடங்குகளில் ஆண்கள் கலந்து கொள்ள மாட்டார்கள். எனினும், இவற்றிலெல்லாம் முக்கிய பங்கெடுத்துக்கொள்ளும் ஆண் ஒருவன் இருக்கிறான். அவன் யாரென்றால், இக் கிரியைகளுக்கெல்லாம் தலைமைதாங்கிப் புரோகிதம் நடத்தும் பார்ப்பானே யாவான்! இவ் வினத்தவர்களின் சில பிரிவினர்க்கு, திருமணத்தை நடத்திவைக்கும் பார்ப்பானை முகத்தில் தட்டி, அவனைக் கிள்ளி விடுவதும் ஒரு சடங்காகும்! இதற்குக் காரணம் ஒரு புராணக் கதையில் அடங்கி இருக்கிறது: கல்யாணத்திற்கு முன்பாக தனது இரண்டு புதல்விகளை, கல் நெஞ்சுடனே காட்டில் கை விட்ட பார்ப்பனன் ஒருவனின் தீய நடத்தையைக் கண்டிப்பதற்காக இத் தண்டனை ஏற்படுத்தப்பட்டதாம்!

ஒரு சதுரத்தின் நடுவிலே வைக்கப்பட்டுள்ள நெல் குத்தும் உலக்கையை, மாப்பிள்ளையும் பெண்ணும் ஏழு தடவை தொழுதுகொண்டே சுற்றி வர வேண்டும்.

மண விழாவில் கேளிக்கைகளுக்கும் குறைவில்லை. தம்பதிகள் இருவரும் எதிரெதிரே உட்கார்ந்துகொண்டு ஒருவருக்கொருவர் சோற்று உருண்டைகளைக் கொடுத்துக்கொள்ளும் காட்சி, அங்குள்ள எல்லோருக்கும் வேடிக்கையையும் மகிழ்ச்சியையும் அளிக்கும். கல்யாணம் நடக்கும் நாள் முழுவதும் பாட்டுகளைப்பாடிக்கொண்டே இருப்பார்கள். எங்கும் இப்பாட்டுகளிலெல்லாம் வார்த்தையும் ஒலியும் வேறுபட்டாலும், அவை யாவும் கல்யாணப் பாட்டின் பொருளையே கொண்டிருக்கும். இக் கல்யாணப் பாட்டு இடதிற்கு இடம் மாறுபடும்—ஆனாலும் எல்லாம் வார்த்தை அடுக்குகளில் தான்.

ஓ பிள்ளாய்! நடம்மா நட;
சும்மா நட!

விவாகம் நடக்காதுன்னு ஜம்பம்
பண்ணினே, நட!

கல்யாணமும் நடந்துவிட்டது,
நட! உம், நட!!

ஜம்பமெல்லாம் நடக்காது
தெரியுதா, நட!

மாமன் கொடுத்த புட்டையும்
சாப்பிட்டே, நட!

கண்ணு இல்லே, நட! பெண்ணு
இல்லே, நட!!

இது மாதிரியாக மாங்கல்ய கீதம் மங்கலமாக இருக்கும்.

✲

நல்ல விருந்தாளி

சொந்த வீட்டை விட்டுக் கிளம்பாதவளே நல்ல விருந்தாளி.

—ஓர் அறிஞர்

ஏட்டிக்குப் போட்டி

●

வல்லபாய் பட்டேல்

1

மகாத்மா காந்திதான் ஆமதாபாத் தொழிலாளர் இயக்கத்துக்கு அஸ்திவாரம் போட்டார். மில் சொந்தக்காரர்கள் வெகுகாலப் போராட்டத்துக்குப்பின் மத்தியஸ்தம் என்ற நடவடிக்கையை ஒப்புக்கொண்டார்கள். தொழிலும் தொழிலாளர் நிலைமையும் அன்றிலிருந்து அபிவிருத்தியடைந்தன.

லாலா லஜபதி ராய், பண்டித நேரு, சுபாஷ் போஸ் போன்ற பெரிய பெரிய காங்கிரஸ் தலைவர்களெல்லாம் தொழிற்சாலை இயக்கத்தை வளர்த்திருக்கிறார்கள். ஆனால், இன்று இந்த ஸ்தாபனத்தில் ஆதிக்கம் வகிப்பவர்கள் நம் தலையையே வெட்டுவதற்கு முயற்சி செய்கிறார்கள்.

சென்ற சில காலமாக ஒரு பிரத்தியேகமான நிரந்தரத் தொழில் ஸ்தாபனம் நிறுவ வேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் யோசித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், அடிக்கடி சர்க்கார் அவர்களைக் கைது செய்ததும் இது விஷயமாகக் காங்கிரஸ்காரர்களிடம் இருந்த அபிப்பிராய பேதமும் சேர்ந்து, அந்தக் காரியத்தைத் தொடங்குவதற்கு எதுவில்லாமல் -செய்துவிட்டன. லாபத்தை உத்தேசித்துக் காங்கிரஸ்காரர்கள் தொழிற் சங்கத்தைக் கைப்பற்ற நினைக்கவில்லை. தொழிலாளர்களின் போராட்டங்களுக்கு உதவியளிக்கவே காங்கிரஸ்காரர்கள் விரும்புகிறார்கள்.

ஸிம்லா மகாநாடு, மந்திரி சபைத் தூதுகோஷ்டி விஜயம், இடைக்கால சர்க்கார் அமைப்பு—இந்த வேலைகளினால் தொழிலாளர்கள் விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் ஒன்றும் செய்ய முடியாமல் இருந்தனர். இப்போது, பிரிட்டிஷ் அரசாங்கம் இன்னும் பதினைந்து மாத காலத்தில் இந்தியாவை விட்டுப் போவதாகச் சொல்லிவிட்டதால், இங்கே தேசிய எதிர்ப்புச் சக்திகள் வேலை செய்யத் தொடங்கிவிட்டன.

செயல் முறையில் காங்கிரஸ்காரர்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இடையே பெரிய வேற்றுமை இருக்கிறது. லட்சியம் கிட்டுகிறது என்றால், செயல்முறை எப்படி இருந்தாலும் அதைக் கம்யூனிஸ்டுகள் பொருட்படுத்துவதில்லை. ஒவ்வொரு சர்க்கார் ஸ்தாபனத்திலும் கம்யூனிஸ்டுகள் நுழைந்துவிட்டார்கள். அவர்கள் வேலை நிறுத்தம் செய்யும் தூண்டிவிடுகிறார்கள். அதனால் உணவுப் பஞ்சம், துணிப் பஞ்சம் ஏற்பட்டதுடன் ரயில் வேக்களின் நடைமுறையும் பாதிக்கப்பட்டது. இன்னும்,

அகில இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரஸுக்குப் போட்டியாக 4—5—47 அன்று டில்லியில் தேசியத் தொழிலாளர் சங்கம் என்று ஒரு புதிய சங்கத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார் பட்டேல். கம்யூனிஸ்டுகள் ஆதிக்கம் வகிக்கிறார்கள் என்ற ஒன்றைத் தவிர, வேறு, தக்க ஆதாரமுள்ள நியாயமுள்ள காரணம் ஒன்றும் கிடையாது, இந்தப் புதுச் சங்கத்தைத் தொடங்குவதற்கு. அத்துடன் தொழிலாளர்களை வாட்டி வதைத்த முதலாளிகளைப் பற்றி ஒரு சிறு வாய்மொழிக் கண்டனத்தைக்கூட பட்டேல் தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அருமையான பற்கள் !

உங்கள் பற்கள் எத்தனை நாட்கள் புன்னகையை அழகுபடுத்தும் ?

ஒருவர் உள்ளத்தைக் கவர உங்கள் வசீகரப் புன்னகை மிகவும் எளிதானவழி என்பதை அறிவிர்களல்லவா. ஆகையால், உங்கள் பற்களை ஈறு வியாதிகள் பாழ்படுத்தாமல் காப்பாற்றிக் கொள்ளுங்கள். தினமும் தவறாமல் சுகமளிக்கும் எஸ். ஆர். டூத்பேஸ்டி★னால் பற்களை சுத்தம் செய்தால் அவை உறுதியான ஈறுகளில் அப்பழுக்கற்று வெண்மையுடன் விளங்குகின்றன.

★பல் வைத்தியர்கள் ஈறு வியாதிகளுக்கு கைகண்ட மருந்தெனக் கருதும் ஸோடியம் ரிஸினோலியேட் சேர்ந்தது.

GSR. 26-50 TM D. & W. GIBBS LIMITED, LONDON, ENGLAND

அடுத்த விளையாட்டுப் பந்தயத்தில்

அம்ருதா

ரத்த சுத்தி திராவகம்..

கலக்கம், ஆயாசமில்லாமல் நன்கு விளையாடி வெற்றி பெறச் செய்கின்றது.

நரம்புகளை முறுக்கேற்றுகிறது

353 A.E.

கேசரி குடீரம் லிட். மதராஸ்

கேஸரி குட்டீரம் லிமிட்டெட், மதருஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு ஏஜண்டுகள்:

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பெர்ஹாம்பூர், செகந்திராபாத், பெஜவாடா, மதுரை



இந்தியன் பாங்க்

லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,
நார்த் பீச் ரோட், மதராஸ்

மதராஸ் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், மவுண்ட் ரோட், திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாக்கம், எழும்பூர்.

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	... ரூ.	**72,00,000**
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	**53,00,000**
ரிஸர்வ் நிதி	... ரூ.	**60,72,602**

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

N. கோபால அய்யர்,
செக்ரெடரி.

IBN/101

சம்பளக் கமிஷனுடைய சிபார்சுகள் தொழிலாளர்களுக்குச் சாதகமாக இராதென்று சொல்லி வேலை நிறுத்தத்துக்குத் தயாராக இருக்கும்படி கம்யூனிஸ்டுகள் தொழிலாளர்களைத் தூண்டிவிடுவதால் தேசத்தில் தொழில் நிலை ஸ்தம்பித்துவிட நேரும். கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளை சென்னைப் பிரதமராயிருந்த ஸ்ரீ பிரகாசம், பம்பாய் பிரதமர் ஸ்ரீ. பி. ஜி. கேர் ஆகியோரின் அறிக்கைகளின் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

உணவும், உடையும் கிடைக்கவில்லை யென்றால் தொழிலாளர்களும், ஏழைமக்களும்தானே கஷ்டப்படுவார்கள்? ஆகவே, மக்களின் நலன் கருதும் ஒவ்வொருவரும், உற்பத்தியைத் தடை பண்ணும் எதையும் செய்யக் கூடாது. தொழில்கள் அபிவிருத்தி யடையாமல் இருக்கும் போது, தொழிற்சாலைகளைத் தேசியச் சொத்தாக்க வேண்டுமென்று சொல்லுவது விருதாத்தனம்.

2

புதிய ஸ்தாபனம் வெற்றி பெற வேண்டுமென வாழ்த்துகிறேன். இன்று மத்திய சர்க்காரையும், மாகாண சர்க்கார்களையும் நடத்துகிறவர்கள் பொது ஜனங்களைச் சேர்ந்தவர்கள். இதனால் புதிய ஸ்தாபனத்தைப் பற்றி மக்களின் அபிப்பிராயம் வரவேற்கப்படுகிறது.

அ. இ. தொ. சங்கத்துக்கு சர்க்காரின் நடவடிக்கைகளைப் பழிப்பதுதான் வேலை. புதிய ஸ்தாபனத்தை நாடெங்கும் பலப்படுத்த வேண்டும். படிப்படியாகத் தான் முன்னேற முடியும். சர்க்காரே, தன் உத்தியோகஸ்தர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டி யிருக்கிறது.

உத்தியோகஸ்தர்கள் தொழில் மந்திரியை அணுகி தங்கள் கோரிக்கைகளைத் தெரிவிக்க வேண்டும். அவசியம் நேர்ந்தால் மத்தியஸ்தத்தின் மூலம் வேற்றுமைகளைப் போக்கிக்கொள்ளலாம். உலகத் தொழிலாளர் மகா நாடுகளுக்கு இந்தியாவின் சார்பில் சென்றவர்கள் தங்கள் கட்சிக்குத்தான் பிரதிநிதித்துவம் வகித்தார்களே ஒழிய பொது மக்களுக்கு அல்ல. புதிதாக ஏற்படுத்தப்பட்ட இந்தியத் தேசியத் தொழிற் சங்கம் தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைக்கப் பாடுபடும். அதே சமயத்தில் பொறுப்பற்ற, நிறைவேருத கோரிக்கைகளைக் கேட்டுத் தொழிலுக்குக் குந்தகம் விளைவிக்காமல் பார்த்துக்கொள்ளும். பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள தொழிற் சங்கங்களைப்போலவே, சமஸ்தானங்களிலுள்ள தொழிற் சங்கங்களிலும் நம் கவனத்தைத் திருப்ப வேண்டும்; அவைகளை நாம் புறக்கணித்துவிட முடியாது.

ஒன்றுபடுங்கள்

உலக முதலாளிகளே ஒன்றுபடுங்கள்!

—எவ்வரிபடீனில் ஒரு கேலிச் சித்திரம்.

போட்டி ஒழிக!

●

என். எம். ஜோஷி

புது டில்லியில் சென்ற மே மாதம் 3-ம் தேதி, ஹிந்துஸ்தான் மஜ்தூர் சேவக் சங்கத்தாரால் கூட்டப்பெற்ற காங்கிரஸ்காரர்கள் மகாநாடு ஒன்று நடந்தது. இந்தக் கூட்டத்துக்கு இடைக்கால சர்க்காரின் உள்நாட்டு மந்திரியும், உப தலைவரும், சில மாகாணப் பிரதமர்களும், தொழில் மந்திரிகளும் விஜயம் செய்தனர். ஒரு புதிய அகில இந்தியத் தொழிலாளர் ஸ்தாபனம் நிறுவுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

புதிய ஸ்தாபனம் நிறுவுவதற்கான காரணங்களைக் கூறுகையில், பழைய தொழிற் சங்கக் காங்கிரஸைப் பற்றிச் சில தவறான குற்றச் சாட்டுகள் சுமத்தியிருக்கிறார்கள். இவைகளுக்குப் பதில் அளிக்கவேண்டியது அவசியமா யிருக்கிறது.

1920-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பெற்ற தொழிற்சங்கக் காங்கிரஸ் இன்று 8 லட்சம் அங்கத்தினர்களையும், 601 சங்கங்களையும் கொண்டிருக்கிறது. தொ.ச.கா. முழுக்க முழுக்க ஜனநாயக ஸ்தாபனம். எந்த அரசியல் கட்சிக்கும் உட்படாதது. உண்மையில் பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும், ஒரு கட்சியிலும் சேராத தனிப்பட்டவர்களும்கூடத் தொ. ச. கா.வில் இருக்கிறார்கள்.

இப்போது கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தின் கீழ் தொ. ச. கா. இருப்பதாகக் குற்றஞ் சாட்டியிருக்கிறார்கள். கம்யூனிஸ்டுகள் பெரும்பான்மையோரா யிருக்கிறார்கள் என்பது வாஸ்தவமே. ஆனால், தொ. ச. கா. வின் தீர்மானம் ஒவ்வொன்றும் தொழிற் சங்கத்தி லுள்ள எல்லோருடைய தீர்மானம்தானே ஒழிய, கம்யூனிஸ்டுகளால் செய்யப்பட்ட தீர்மான மல்ல.

மேலும், 1938-ல் தற்போது உள்ள முறைப்படி தொ. ச. கா. திருத்தி அமைக்கப்பட்டது. முதல் தொ. ச. கா.வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் முடிவுகளும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டவைகளே. அதற்குப் பிறகு நிறைவேறிய தீர்மானம் ஒவ்வொன்றும் காங்கிரஸ், சோஷலிஸ்டுக் கட்சிக்காரர்களின் முழுச் சம்மதத்தையும் பெற்றிருக்கிறது. அத்துடன் சங்க நிர்வாகிகள் தேர்தலும் ஏகமனதாகவே நடந்திருக்கிறது. இந்த ஒற்றுமை, கம்யூனிஸ்டுகள் தங்கள் பெரும்பான்மைப் பலத்தையே உபயோகிக்கவில்லை என்பதையும் எல்லாக் கட்சிகளுக்கும் பூரண இடம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதையுமே காட்டுகிறது. தொ. ச. கா.வில் பெரும்பான்மையோரா யிருப்பவர்கள்—அவர்கள் கம்யூனிஸ்டுகளாயினும், காங்கிரஸ்காரர்களாயினும் — சிறுபான்மைக் கட்சிகளுக்குச் சமரசத்துக்கும் பரஸ்பர ஒத்துழைப்புக்கும் இடம்

அகில இந்தியத் தொழிற சங்கக் காங்கிரஸின் காரியதரிசி ஸ்ரீ என். எம். ஜோஷி. எட்டு லட்சம் தொழிலாளர்களின் அன்பையும் மதிப்பையும் பெற்ற இவர், இந்தியத் தலைவர்களுடைய நன்மதிப்பையும் பெற்றிருக்கிறார். கஷ்டப்படும் தொழிலாளர்களுடைய ஸ்தாபனத்தையும் போட்டி போட்டுக் கிரைக் கடைக்கு எதிர்க்கடை திறக்கும் பட்டேலுடைய வாதங்களுக்குப் பதிலளிக்கிறார் ஸ்ரீ ஜோஷி.

கொடுத்து, ஜனநாயக ரீதியிலேயே நடந்திருக்கின்றனர் என்பதற்கு இதுவே உதாரணம். இந்தத் தன்மை புதிய சங்கத்திலே இருக்குமா?

ஓர் அரசியல் கட்சி, தொ.ச.கா.விலே பெரும்பான்மையா யிருக்கிற ஒரே காரணத்தால் அரசியல் விவகாரங்களில் தன் இஷ்டப்படி காரியங்களை நடத்திச் செல்ல முடியாது. "அரசியல், வேலை நிறுத்தம் சம்பந்தப்பட்ட பிரச்னைகளிலும், தொ. ச. கா. எந்த அந்நிய ஸ்தாபனத்துடன் உறவு கொள்ளுவது பற்றியும் தீர்மானம் செய்ய நாலில் மூன்று பங்கு அங்கத்தினர்களின் ஆதரவு இருக்க வேண்டியது அவசியம்," என்று தொ. ச. கா. வின் அமைப்பில் ஒரு சட்டம் இருக்கிறது. ஆகையினால் எந்தஒருகட்சியும் தனக்குச் சாதகமான முறையிலோ, அல்லது தன் கட்சிக்குப் பயன் தரும் விதத்திலோ காரியம் செய்ய நான்கில் மூன்று பங்குப் பலம் இருக்கவேண்டும். கம்யூனிஸ்டுகள்கூடத் தொ. ச. கா.வில் இவ்வளவு பலம் பெற்றிருக்க வில்லை. அ. இ. தொ. ச. கா.வின் பொதுக் குழுவிலும் காரியக் கமிட்டியிலும் கம்யூனிஸ்டு அங்கத்தினர்கள் 55 சத விகிதமே இருக்கின்றனர். தொ. ச. கா.வின் காரியாலய நிர்வாகிகள் 12 பேரில் 5 பேரே கம்யூனிஸ்டுகள். 1943-க்குப் பிறகே கம்யூனிஸ்டுகள் பெரும்பான்மையினராக ஆனார்களென்பதும், அதற்கு முன் காங்கிரஸ்காரர்களே பெரும்பான்மையினர் என்பதும் குறிப்பிடத் தக்கது. தொ.ச.கா.வின் அமைப்பும் செயல் முறையும், ஜனநாயக ரீதியிலே இருப்பதால், எந்தச் சிறுபான்மைக் கட்சியும் பெரும்பான்மைக் கட்சியாவதற்குத் தடை யேதும் கிடையாது. சிறுபான்மைக் கட்சி ஒன்றின் ஆதிக்கத்தில் இருக்கிறது என்ற காரணத்துக்காக, எந்தச் சங்கமும் தொ.ச.கா.வுடன் தொடர்பு வைத்துக்கொள்ளுவதைத் தடை செய்தது கிடையாது.

தொ. ச. கா.வின் மீது சுமத்தப்படும் இன்னொரு குற்றச்சாட்டு, அது பெயரளவில் சங்கம் என்று சொல்லிக்கொள்ளுகிறவற்றை யெல்லாம் சேர்த்துக் கொள்ளுகிறது என்பதாகும். இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரமே கிடையாது. அதிகாரம் பெற்ற ஒரு தணிக்கையாளரால் சரி பார்க்கப்பட்ட வரவு செலவு கணக்கை உடைய ஒரு சங்கம், கணிசமான அங்கத்தினர் எண்ணிக்கையும் கொண்டிருந்தால் தான் தொ. ச. கா.வுடன் இணைக்கப் பெறுகிறது. பேரேட்டில் பதிவு செய்யப்பட் டிருப்பதைக் கணக்கிடாமல், உண்மையிலேயே சந்தா கட்டும் சராசரி அங்கத்தினரைக் கொண்டே அங்கத்தினர் எண்ணிக்கை கணக்கிடப்படுகிறது. இந்தக் கணக்கீடு சர்க்கார் தொழிற் சங்கச் சட்டம் ஒப்புக்கொண் டிருப்பதையும்விடக் கண்டிப்பு வாய்ந்தது. காங்கிரஸ்காரர் உள்பட எல்லாச் சாராரும் அடங்கிய ஒரு நிரந்தரக் கமிட்டியே சங்கத்தின் அங்கத்தினர் எண்ணிக்கையை நிர்ணயிக்கிறது. இந்தக் கமிட்டியின் தீர்மானங்கள் எல்லாம் இன்று வரை ஏகமனதாகவே நிறைவேறியிருக்கின்றன. எந்தக் கட்சியும் இன்றுவரை தன்னுடைய பெரும்பான்மைப் பலத்தைப் பிரயோகித்து ஒரு சங்கத்துக்கு அனுமதி அளித்ததோ அன்றி மறுத்ததோ கிடையாது.

உலகத் தொழிலாளர் சங்க சம்மேளனம் போன்றதொரு சர்வ தேசியத் தொழிலாளர் ஸ்தாபனம் தொ. ச. கா.வின் நாணயத்தைப் பாரபட்சமின்றி விசாரிப்பதைத் தொ. ச. கா. வரவேற்கிறது.

புதிய ஸ்தாபனத்தைத் தொடங்குவதற்குச் சொல்லப்பட்ட இன்னொரு காரணம், அ. இ. தொ. ச. காங்கிரஸ் மத்தியஸ்தத்தை எதிர்க்கிறது என்பதாகும். இதவும் தவறு. கிரேட் பிரிட்டனில் இருப்பதைப் போல, மத்தியஸ்தம் வலுக்கட்டாயம் இல்லாத விதத்தில் இருந்தால், அந்த மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொள்ள, தொ. ச. கா. இன்றைக்கு மட்டு மல்ல, என்றைக்குமே எதிர்க்காது. நிர்ப்பந்த மத்தியஸ்தம், நிர்ப்பந்தத் தீர்ப்பளிப்பு, நீண்ட காலத்துக்கு அல்லது சில சமயங்களில் காலவரையறையே யில்லாமல் வேலை நிறுத்தத்தைச் சட்ட விரோதமானதாகப் பிரகடனப்படுத்துவது ஆகியவற்றைத்தான் தொ. ச. கா. எதிர்த்து வந்திருக்கிறது. எது எப்படி யிருந்தாலும், தொ. ச. கா. வேலை நிறுத்தத்தைக் கடைசி ஆயுதமாகவே கருதுகிறது. இந்தக் காரணத்தாலேயே, தொ. ச. கா. தொடங்கும் எந்த வேலை நிறுத்தத்துக்கும் நான்கில் மூன்று பங்கு ஆதரவு இருக்க வேண்டும் என்று தொ. ச. கா. வின் அமைப்புச் சட்டம் கூறுகிறது.

வேலை நிறுத்தம் சட்டவிரோதமானதெனப் பிரகடனப்படுத்தும் நிர்ப்பந்த மத்தியஸ்தம், தகராறுகளைத் தீர்க்கச் சரியான வழியல்ல என்றே பிரிட்டன், அமெரிக்கா உட்பட ஜனநாயக முற்போக்குள்ள நாடுகளிலும் உள்ள தொழிற் சங்கங்கள் கருதுகின்றன. பிரிட்டிஷ் மந்திரி சபையின் தொழில் இலாகாவிலிருந்து சமீபத்தில் வெளியிடப்பட்ட அறிக்கை கீழ்க்கண்டபடி கூறுகிறது: "வேலையில் நியமிக்கப்படும்போதே, தொழிலாளிக்கு வேலை நிறுத்தம் செய்யப் பூரண உரிமை உண்டு என்னும் நிபந்தனையும் உள்ளடங்கியே இருக்கிறது. இது பரஸ்பரம் சம அந்தஸ்து உள்ளவர்களுக்கிடையே செய்துகொள்ளப்படும் ஓர் ஒப்பந்தமாகும். தொழிலாளிகள் இந்தக் கொள்கைக்கு மதிப்புக் கொடுக்கவே செய்கிறார்கள். ஆகையால், கைத் தொழிலில் பிரத்தியேக முறையிலும், கூட்டு முறையிலும் தங்களுக்குள்ள உரிமைகளை வெளியிடும் ஒரு சாதனமாகவே வேலை நிறுத்தங்களை அவர்கள் கருதுகிறார்கள். எனவே, நிர்ப்பந்த மத்தியஸ்தத்தையும் வேலை நிறுத்தத் தடையையும் தொழில் உறவு முறையில் நிரந்தரமான ஏற்பாடுகளாகச் செய்ய முயன்றால் அது வெற்றி பெறும் என்று தோன்றவில்லை.

இரு தரப்பினரும் ஓர் உடன்பாடு செய்து கொள்வதற்கு நிர்ப்பந்த மத்தியஸ்தம் முற்றிலும் தடையா யிருக்கிறதென்று ஸிட்னிவெப் கூறியிருக்கிறார். உடன்பாட்டுக்கு இடமில்லையென்றால், தொழிற் சங்கங்களுக்கும் அவசியமே யில்லை. ஆகையினால், நிர்ப்பந்த மத்தியஸ்தம் தொழிற் சங்கத்தின் நியாயமான இயக்கத்துக்கே குழி தோண்டுகிறது. இந்த ஒரு காரணத்துக்காகவே-எதிரிகள் குற்றம் காட்டுவதுபோல எந்த அரசியல் நோக்கமும் இன்றி-தொ.ச.கா. நிர்ப்பந்த மத்தியஸ்தத்தை எதிர்க்கிறது.

தொ. ச. கா. வின் கொள்கை உற்பத்திக்குத் தடங்கல் விளைவிப்பதுதான் என்று குற்றம் சாட்டுவதைத் தொ.ச.கா. மறுக்கிறது. யுத்த பிற்காலத்தில் நிலவும் அதிருப்திகரமான நிலைமை காரணமாக அமெரிக்கா, பிரிட்டன் முதலிய சகல இடங்களிலும் நடப்பது போலவே இந்தியாவிலும் வேலை நிறுத்தங்கள் நடைபெறுகின்றன. இதற்குத் தொ. ச. கா. பொறுப்பாளி யல்ல. குறைகளை அநுதாபத்துடன் நோக்குவதும், அவைகளை நியாயமான முறையில் தீர்ப்பதுமே இந்தக் கஷ்டத்துக்குச் சரியான பரிகாரம். ஆனால், துரதிருஷ்டவசமாக, இந்த நிலைமையைத் தீர்ப்பதற்குத் தொழிலாளருக்குள் பிளவு ஏற்படுத்துவதே சுலபமான வழி என்று கலவரமடைந்த காங்கிரஸ் மந்திரி சபைகள் கருதுகின்றன. இதன் விளைவு என்னவென்று அவர்கள் பிற்பாடு தெரிந்துகொள்வார்கள். ஆனால், விஷமம் நடந்தேறிவிட்டது. இந்தப் புதிய ஸ்தாபனம், எந்தக் கட்சியையும் அரசியலையும் சேர்ந்த தல்ல என்று கூறப்படுகிறது. ஆனால், ஹிந்துஸ்தான் மஜ்தூர் சேவக் சங்கத்தின் தலைமைப் பீடம், புதிய ஸ்தாபனத்தின் அமைப்பை நிர்ணயிக்கையில், இது நடத்தும் தொழிலாளர் இயக்கங்கள் "1946, ஆகஸ்டு 13-ம் தேதி காங்கிரஸ் காரியக் கமிட்டி வெளியிட்ட அறிக்கையில் அடங்கியுள்ள கொள்கைகளின்படியே நடைபெறும்" என்று தெள்ளத் தெளிவாகக் கூறுகிறது. ஆகையினால், காங்கிரஸ் காரியக் கமிட்டியிடம் விசுவாசம் உள்ளவர்களே இந்தப் புதிய ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கலாம். இது இந்தியத் தேசியக் காங்கிரஸின் ஒரு பிரிவே என்பது தெளிவாகிறது. தொ. ச. கா.வைப் போல இதுவும் கட்சி அரசியலுக்கு உட்படாத தொழிலாளர் ஸ்தாபனம் என்பது பிதற்றல் என்றும் ஏற்படுகிறது.

மேலும், இந்திய சர்க்காரின் உள்நாட்டு மந்திரி தலைமை வகிக்க, மாகாணப் பிரதமர்கள், தொழில் மந்திரிகள் ஆகியோரின் முன்னிலையில் கூட்டப்பட்ட ஒரு மகாநாட்டில்தான் இந்தப் புது ஸ்தாபனம் நிறுவப்பட்டது என்பதும் முக்கியமானது. இதை நிறுவுவதில் மாகாண மந்திரிகள் எடுத்துக்கொண்ட பங்கிலிருந்து, இந்த ஸ்தாபனம் அரசாங்கத்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்டதே என்பதும், சுதந்தரமாக ஜனநாயக ரீதியில் இது இயங்க முடியாது என்பதும் தெளிவாகிறது. இந்த மாதிரி ஸ்தாபனங்கள் நிறுவ முற்படுவது இறுதியில் ஆபத்தான விளைவுகளை உண்டாக்கும். இப்படித்தான், சீனாவில் அரசாங்கத்தின் ஆதரவில் கிளம்பிய தொழிலாளர் இயக்கங்கள் கடைசியில் அரசாங்கத்தின் ஒரு பகுதியாகவே மாறிவிட்டன.

ஆகவே, தொ. ச. கா. வுடன் உறவு பூண்டிருக்கும் சங்கங்கள் தங்கள் உறவைக் கத்தரித்துக் கொள்ளா தென்று நாங்கள் நம்புகிறோம். இந்தப்புதிய இயக்கம் தொழிலாள வர்க்கத்தின் பலத்தைச் சிதற அடித்து, அவர்களுடைய ஜீவாதார நலன்களுக்கு உலை வைத்துவிடுமாதலால், இவர்களுடைய தவறான வழியைப் பின்பற்ற வேண்டா மென்று, பொதுவாக, தொழிலாளர் வர்க்கத்தையும், குறிப்பாக, தொ. ச. கா. வுடன் இணைக்கப்பெற்ற சங்கங்களையும் அகில இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரஸ் கேட்டுக்கொள்ளுகிறது.

முதலாளிகள் சங்கம்

●

வி. வி. பிரசாத்

புதிதாக அமைக்கப்பட்ட இந்தியத் தேசியத் தொழிலாளர் காங்கிரஸை நான் வரவேற்க முடியாது. இந்த விஷயத்தில் என்னைப் போலவே அபிப்பிராயப்படுகிறவர்கள் பலர் உண்டு. அவர்களில் காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்களும் சிலராவர்.

இன்று காங்கிரஸுக்காகப் பரிந்து பேசும் மிகப் பெரிய தலைவர்களில் தலைசிறந்த ஒருவர், முன்னால் காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினராக இருந்தவர். அவர் என்னிடம் கூறியதாவது: "ஸ்தாபன ரீதியில் தொழிலாளர் பிரச்னையைப் பற்றிப் புரிந்து கொள்ளும் சக்தி பட்டேலுக்குக் கிடையாது."

சர்வதேச அரசியல் விவகாரங்களைப் பற்றி விமர்சனம் செய்யும் ஒருவர் என்னைப் போலவே அபிப்பிராயம் கொண்டவர். அவர் தேசியத் தொழிலாளர் காங்கிரஸ் வெளி நாடுகளில் ஒரு பாதகமான அபிப்பிராயத்தைச் சிருஷ்டித்து விடும் என்று சொன்னார். சர்க்காரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் இந்தத் தொழிலாளர் ஸ்தாபனம் துரதிருஷ்ட வசமாக டாக்டர் லீயின் தலைமையில் நடைபெற்ற ஹிட்லர்—தொழில் அரங்கப்போல இருக்கிறது. இந்த ஸ்தாபனத்துக்குக் காங்கிரஸ் ஆதரவாளர்களின் ஆதரவு இருப்பதால், பத்திரிகைகளும் இந்த ஸ்தாபனத்துக்கு ஆதரவு கொடுக்கும். ஆனால் பொது மக்களோ, தொழிற் சங்க இயக்கத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களோ இந்தப் புது ஸ்தாபனத்துக்கு அதே மாதிரி ஆதரவளிப்பார்களா என்பது சந்தேகமே. ஒரு சிறந்த விமர்சகர், இந்தப் புதிய தொழிலாளர் சங்கம் அழிவதற்கு இரண்டு வருஷ காலம் ஆகும் என்று தவணை போட்டிருக்கிறார். அவருக்கு இது சம்பந்தமான அந்தரங்க விஷயங்களெல்லாம் தெரியும். காங்கிரஸ் கட்சியில் ஆதிக்கம் பெறமுயலும் சில சக்திகள் புதிய தொழிற் சங்கத்திலும் ஆதிக்கம் பெறுவதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருக்கின்றன. சுதந்தரம் கிடைத்து விட்டால் காங்கிரஸ் ஸ்தாபனம் கலைக்கப்பட்டுவிடும் என்கிறார் ஸர்தார் பட்டேல். இதைப் பார்க்கும்போது பட்டேலுக்கு ஆதிக்க ஆசை இல்லை என நமக்குக் காணப்பட்டாலும் பொது அபிப்பிராயம் அப்படி இல்லை. 1948 ஜுலைக்குப்பின் ஆதிக்கம் பெறுவதில் பட்டேல் இப்போதே ஈடுபட்டுவிட்டார் என்றே மக்கள் சந்தேகிக்கக் கூடும். இந்தச் சந்தேகத்தைப் பட்டேல் தான் போக்கடிக்க வேண்டும். காங்கிரஸ் ஸ்தாபனம் கலைக்கப்படும் சந்தர்ப்பத்தில் இந்தப் புதிய சங்கத்தை ஸ்தாபிப்பது விவேக மில்லாத காரியமும்கூட. தப்பானதென்று நிரூபிக்கப்பட்ட தீர்மானத்தை மாற்றுவதில், காந்திஜிக்கு இருப்பதைப் போன்ற தைரியம் இருக்க வேண்டும். லெனினுக்கு இப்படித் தைரியம் இருந்தது. இதனால் நேரக்கூடிய விஷமத்தனத்தை வல்லபாய் பட்டேல் சக்தியுடன் முன் வந்து தடுக்க வேண்டியது அவசியம்.

ஸ்ரீ வி. வி. பிரசாத், ஸ்வதந்திராவில் எழுதியதன் சாரம்.

சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன் பட்டேலைப் பற்றிப் புரொபஸர் ரங்கா பாராட்டிப் பேசும் போது பின் வருமாறு சொன்னார்:

"அவரே ஒரு குடியானவர் தான். அதனால் குடியானவர்களின் கஷ்டங்களையும், அவர்களின் பிரச்னைகளையும் அவரால் புரிந்துகொள்ள முடிகிறது. நான் ஏதாவது ஒன்றை அவரிடம் சொன்னால் அதைக் குடியானவனுடைய கண்ணோட்டத்துடனேயே அவர் நோக்குகிறார். கிரியும், என். எம். ஜோஷியும் தொழிலாளியின் நோக்குடன் விஷயங்களைக் கவனிக்கிறார்கள். இதுதான் இவர்களுக்கும் பட்டேலுக்கும் உள்ள வித்தியாசம்."

பட்டேலுக்கு விவசாயிகளிடம் உள்ள அனுதாபத்தை வற்புறுத்தவே ரங்கா இப்படிச் சொன்னார்.

ஸ்ரீ என். எம். ஜோஷி நல்ல முறையில் ஒரு காரியத்தைச் செய்திருக்கிறார். புதிய தொழிற் சங்கத்தைப்பற்றித் தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்து ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். இதைக்கண்டு சிலர் அவர் மீது பாய்ந்திருக்கிறார்கள். வெறும் கையாலாகாத சூரத்தனம் அது.

கம்யூனிஸ்டுகள், மக்கள் யுத்தம் என்ற தங்கள் கொள்கைக்கேற்ப யுத்த காலத்தில் அரசாங்கங்கத்துக்கு இடைஞ்சல்நேராத முறையில் தொழிற்சாலைகளை நடத்தி வந்தார்கள். ஆனால், அப்போது காங்கிரஸ்காரர்கள் தொழிற் சங்கத்தில் ஆதிக்கம் பெற்றிருந்திருப்பார்களானால், தொழிற்சாலை உற்பத்தியைக் கைவிட்டிருப்பார்கள். சுதந்தரமும் கிடைத்திருக்கலாம். அப்படியானால், இப்போது புதிய சங்கத்தில் ஆதிக்கம் பெற முயலும் தொழிற்சாலை முதலாளிகள் இப்போது இருக்கு மிடம் தெரியாமல் ஒழிக்கப்பட் டிருப்பார்கள். ஆகவே, முதலாளிகள் காங்கிரஸைத் தாங்கிப் பிடிதது அதற்கு ஆதரவு காட்டி, தொழிற் சங்கக் காங்கிரஸையும் கம்யூனிஸ்டுகளையும் தாக்குவதற்குப் பதிலாகக் கம்யூனிஸ்டுகளுக்கு நியாயப்படி நன்றி செலுத்தவேண்டும்.

*

நிழல் படம்தானே?

சென்னையில் ஒரு பத்திரிகாலயத்தில், சித்திரக்காரர் ஒருவர் ஒரு பெண்ணின் சித்திரத்தை வரைந்துகொண் டிருந்தார். அதைப் பார்த்த ஆசிரியர், குழந்தைப் படம் போடச் சொன்னதற்கு பெண்ணின் படத்தைப் போடுகிறீர்களே, என்று கேட்டாராம். அதற்குச் சித்திரக்காரர் சொன்ன பதில்:

"நிழல் படமாகத்தானே போடுகிறேன்; அது பெண் என்று தெரியாதல்லவா?"

பத்திரிகைகளுக்குள் போட்டி

'சுதேசமித்திரன்' பொன் விழாவின்போது, நகரங்களி லெல்லாம், அது 'காங்கிரஸ் தோன்று முன் தோன்றியது' என்று விளம்பரங்கள் ஒட்டப்பட்டிருந்தன. பிறகு அந்த விளம்பரங்களுக்குப் பக்கத்தில் 'தினமணி' விளம்பரங்களும் காணப்பட்டன. அவற்றில் 'தினமணி கிழடு தட்டிய தல்ல' என்று அச்சிடப்பட் டிருந்தது.

—ப. ரா

காஷ்மீரக் கவிதையின் மறு மலர்ச்சி

●

சிவதான் சிங் சோஹன்

காஷ்மீரத்தின் வனப்பு மிகுந்த பள்ளத்தாக்குகளும், உள்ளம் கவரும் இயற்கைக் காட்சிகளும், சிற்றோடைகளும், அருவிகளும் காட்டும் மாயா ஜாலங்கள் மனித உள்ளத்தை மயக்கும் அழகுபடைத்திருப்பது நாடறிந்த விஷயம். இந்த அழகு நிறைந்த பிரதேசம், எத்தனை எத்தனையோ கவிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் கற்பனைக்கு வளம் கொடுத்து, அற்புதமான, அமர சிருஷ்டிகளைச் செய்யச் செய்திருக்கிறது ஆனால், சமீப காலமாகக் காஷ்மீரத்தில் நடந்து வரும் பொதுஜனப் போராட்டம், காஷ்மீரத்தைக் குறித்த நம்முடைய பழைய கண்ணோட்டத்தை மாற்றிவிட் டிருக்கிறது.

இந்த ஸ்வர்க்க பூமியை, காஷ்மீரத்தை ஆளுபவர்கள், நரகமாக ஆக்கியிருக்கிறார்கள். காஷ்மீரிகளின் கலை, மொழி, இலக்கியம், கைத்தொழில் அத்தனையையும் நசுக்கி விட்டார்கள். ஆனால், காஷ்மீரிகளின் ஜீவத்துடி துடிப்பு மட்டும் இன்னும் இருக்கிறது. பல நூற்றாண்டு அடிமை வாழ்வுக்குப் பின்னர், காஷ்மீரிகள் இன்று ஒரு புது வாழ்க்கையை மேற்கொள்ள விழித்தெழுந்துவிட்டனர். அத்துடன், கடந்த காலத்தின் சிறப்பும், எதிர்காலத்தின் சுபிட்சமான நம்பிக்கையும் பின்னணியில் விளங்க, அவர்களுடைய கலையும் புத்துயிர் பெற்றுவிட்டது.

காஷ்மீர மொழியில் இன்று சம்ஸ்கிருத, பாரசீக, அராபி மொழிகள் கலந்து இருக்கின்றன. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்ட ஆரியர்களின் படையெடுப்பின் முன் காஷ்மீரிகள் பணிந்துவிட்டார்கள். சம்ஸ்கிருதம் அரசாங்க மொழி ஆயிற்று; அன்று முதல் 1500 வருஷங்கள் காஷ்மீரும் ஆரிய நாகரிகத்தில் தலை சிறந்த நாடாக ஆய்விட்டது. சம்ஸ்கிருதக் கல்விக்குக் காஷ்மீரம் கேந்திரஸ்தானமாயிற்று. தத்துவம், கவிதை முதலிய பகுதிகள் சம்ஸ்கிருதத்தில் வளர்ந்தன. இரண்டு பெரிய சம்ஸ்கிருத சர்வகலாசாலைகள் இருந்தன. இவையெல்லாவற்றுக்கும் மாறாக, காஷ்மீர இலக்கியத்தில் ஒரு வரி கூட எழுதப்படவில்லை — இந்த ஆயிரம் வருஷங்களில்.

கல்ஹணன் என்ற கவி (கி. பி. 1150) இயற்றிய ராஜ தரங்கிணி என்ற காவியம் காஷ்மீர அரசர்களின் பரம்பரையை வர்ணிக்கும் மகத்தான ஒரு சிருஷ்டியாகும். இதில் இரண்டொரு காஷ்மீர வார்த்தைகள்தாம் கலந்திருக்கின்றன. ஆனால், காஷ்மீர மொழியிலோ, சம்ஸ்கிருத வார்த்தைகளும், சொற்றொடர்களும் ஏராளமாகப் புகுந்துகொண்டன.

காஷ்மீரத்தின் கவிதைத் துறையில் ஏற்பட்டுள்ள மறு மலர்ச்சியைப் பற்றிக் கட்டுரை ஆசிரியர் தெளிவாக எடுத்துக் கூறுகிறார். நாட்டின் பொது வாழ்வில் உணர்ச்சி வேகம் தோன்றுவதும், கவிகள் புதிதாகத் தோன்றுவதும் எப்படி ஒன்றை ஒன்று சார்ந்திருக்கிறது என்பதை நியு லிட்டரேச்சரில் வெளிவந்த இக் கட்டுரை தெரிவிக்கிறது.

PANDYAN INSURANCE COMPANY LIMITED

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்: மதுரை

சிறந்த சேவை செய்து வருகிறது.

நெருப்பு, மோட்டார் விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

மொத்த ஆஸ்திகள் ரூ. 62,00,000

கிளைகள்: பம்பாய், அகமதாபாத், கல்கத்தா, ராவல்பிண்டி.

பிரதம ஏஜெண்டுகள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரை Etc.

எமது மகத்தான
இரண்டு புதிய இசைத்தட்டுகள்!
ஸ்ரீமதி எஸ். தர்மாம்பாள்
N. 18315
புள்ளி மயில்
நீயே யன்றி
கே. சுப்ரமண்யம்
N.18944
ராகம் - தானம் - பிலஹரி
ராகம் - தானம் - தன்யாஸி
எல்லா அத்தாட்சி பெற்ற
வியாபாரிகளிடமும் கிடைக்கும்
HIS MASTER'S VOICE
"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

14-ம் நூற்றுண்டு வரை சம்ஸ்கிருத ஆதிக்கம் இருந்தது. அதற்குப் பின் மொகலாய ஆதிக்கம் வரவே, பாரசீகம் அரசாங்க பாஷையாக ஆயிற்று. காஷ்மீர மொழி, பழையபடி, பாரசீகத்தையும் தழுவிக் கொண்டதும் ஏராளமான பழ மொழிகளும், குட்டிக் கதைகளும் காஷ்மீர மொழியில் இடம் பெற்றன.

14-ம் நூற்றுண்டுக்கு முந்திய காஷ்மீர இலக்கியத்தைப் பற்றி நமக்கு அதிகம் தெரியவில்லை. சுல்தான்—ஜெயின் உல். காலத்தில் தாதா சர்புத் என்ற கவிதை பெயர் தெரியாத ஒரு கவிஞரால் இயற்றப்பட்டது. காஷ்மீர மொழியில் அப்தின் என்பது தான் முதல் கவிதை என்று தெரிகிறது. லாலேச்வரி என்ற சந்யாசினி தான் முதல் காஷ்மீர கவி. இவருடைய கவிதைகள் இப்போதும் கிடைக்கின்றன. ஷேக் நூர்-உத்-உதீன், ஸாம் பண்டிட் என்ற கவிஞர்கள் இவளுக்குச் சம காலத்தவர்கள். இந்தக் காலத்தில், கவிதைகள் பெரும்பாலும் பெண்களாலேயே எழுதப்பட்டன. ஹப் கடூன் என்ற ராணியும் ஒரு கவி. ராஜா சுக ஜீவன் லாலின் (1786-94) ஆட்சிக் காலத்தில், திவாகர பிரகாஷ் பட்டர், ராம அவதார லீலை, லவ குச சரித்திரம் ஆகிய காவியங்களை இயற்றினர். சுத்தமான காஷ்மீரியில் எழுதப் பெற்ற இவை காஷ்மீரி இலக்கியத்தில் இன்றைக்கும் முக்கிய ஸ்தானம் வகிக்கின்றன.

19-ம் நூற்றுண்டில் கிருஷ்ணவதார லீலை என்ற சிறந்த நூலைச் செய்த பண்டித பரமானந்தர் கிருஷ்ண பக்தி என்ற கவிதைப் பாடசாலையையும் நிறுவினர். பிரகாஷ் பட்டர், பரமானந்தர் ஆகியோரின் சிருஷ்டிகளால் பாரசீக மொழியின் ஆதிக்கம் இருப்பது லேசாகத் தெரிகிறது. ஆனல், இவை காஷ்மீர மண்ணில் ஒட்டிய—இயற்கையான சிருஷ்டிகளே. கிருஷ்ண ரஜ்ஜாவின் சிவ புராணம் சம்ஸ்கிருத - காஷ்மீரியில் எழுதப்பெற்றுள்ளது.

நூறு வருஷங்களுக்கு முன்பு உயிர் வாழ்ந்த மகமது காமி என்ற கவிஞர்தான், நவீனக் காஷ்மீரக் கவிதையின் பிதா. பாரசீகக் கவிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, இவர், யூசப் ஜுலேகா, லைலா மஜ்னு, ஷிரின் குஸ்ரோ முதலியவைகளை இயற்றினர். சுத்தமான காஷ்மீரியில் இருந்ததால், இவருடைய சிருஷ்டிகளை மேல் வகுப்பார் விரும்பவில்லை. மகமது காமியைப் பின்பற்றி எழுதிய பலர், காஷ்மீரி மொழியைப் பெரும்பாலும் பாரசீக வார்த்தைகள் நிறைந்ததாகச் செய்துவிட்டனர். சயத் - உத் - உதீனின் தானக் உஜாரும், ஸானதி பண்டிட்டின் நிசாப்பும் இந்தக் காலத்தில் வெளியான, குறிப்பிடத்தக்க சிருஷ்டிகளாகும்.

1879-ல் பண்டிட் ஈச்வரகாந்த் என்பவர் காஷ்மீரி இலக்கணத்தைச் சம்ஸ்கிருதத்தில் செய்தார். 1895-ல் இந்த இலக்கணப் புத்தகம் வெளியாயிற்று. 1893-ல் ஜே. ஹட்டன் ஓனிகா என்பவர் காஷ்மீர தேசத்தில் உலவும் கதைகளையும், நாட்டுப் பாடல்களையும் தொகுத்து வெளியிட்டார்.

அரசியல் எழுச்சியும், தேசிய விழிப்பும் காஷ்மீர இலக்கியத்துக்குப் பல புதிய சிருஷ்டி கர்த்தாக்களைக்கொடுத்திருக்கின்றன.

புதிய காஷ்மீரத்தின், இலக்கியத்துக்குத் தொண்டு புரிபவர்களில், குலாம் முகமத் மஹ்ஜூர், ஆஸாத், மிர்ஸா குலாம பெக் ஆகியோர் முக்கியமானவர்கள்.

பள்ளிக்குச் செல்லும் சிறுவனும், தவிடு புடைக்கும் ஸ்திரீயும், படகு ஓட்டுகிறவனும், வேலை செய்யும் தொழிலாளியும் பாடும் பாட்டு நிச்சயமாக மஹ்ஜூரின் கவிதைகளில் ஒன்ருகவே இருக்கும். அவ்வளவு பிரபலமானவர் மஹ்ஜூர். பாலியத்தில் மிகவும் கஷ்டப்பட்டவர் இவர். அந்தக் காலத்திலேயே இவருடைய கவிதைகள் மிகப் பிரபலமானவை. காஷ்மீரத்துக்கு வெளியே உள்ள சில கவிஞர்களுடன் இவர் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டிருந்ததைக் கண்டு, காஷ்மீரத்தை விட்டு அவரை வெளியேற்றியது அரசாங்கம். ஒரு சமயம், ரவீந்திரநாத தாகூர் மஹ்ஜூரின் கவிதைகள் சிலவற்றைப் படித்துவிட்டு, இவரை, "காஷ்மீரத்தின் வார்ட்ஸ்வொர்த்" என்று சொல்லியிருக்கிருர். அதற்குப் பின்னரே மஹ்ஜூரின் பெயர் அநேகருக்குத் தெரிந்தது. புகழும் தேடிக்கொண்டு வந்து சேர்ந்தது.

காஷ்மீரி இலக்கியத்தைத் தீவிரமாக விமர்சிப்பவர்கள், மஹ்ஜூரைவிட அவருடைய சிஷ்யரான ஆஸாத்தின் கவிதைகளில்தான் அதிக வேகமும், ஜீவனும் இருப்பதாகச் சொல்லுகிருர்கள். இவருடைய கற்பனை மிகவும் வளம் பெற்றது; புரட்சிகரமானது.

மஹ்ஜூரின் கவிதைகளில் விடுதலைத் தாபத்தையும், பழைய மதக் கொள்கைகளை எதிர்த்து நிற்கும் ஒரு போக்கையும் காணலாம். சின்னஞ் சிறிய சந்தங்களில், அழகழகான உவமைகளுடன் விளங்கும் இந்தக் கவிதைகளில் பாமர மக்களின் நாடித் துடிப்பைப் பார்க்க முடியும். ராஜாளி போய், கோகிலத்தின் ஆட்சி வரும் புதிய காஷ்மீரத்தைப்பற்றிப் பாடினுல், அந்த உவமையின் அர்த்தத்தை வெகு எளிதில் எந்தப் பாமரனும் புரிந்து கொள்கிருன். விவசாயிகளின் நடுவே வாழ்ந்த மஹ்ஜூர், அவர்களுடைய தொந்தரவுகளையும், துக்கங்களையும், நம்பிக்கைகளையும், ஏமாற்றங்களையும்பற்றி மிக நன்ருக அறிந்திருக்கிருர். ஆகவே, தம்முடைய காதல் கவிதைகளிலும், தேசியப் பாடல்களிலும், மக்களின் வாழ்க்கையை அப்படியே பிரதிபலிக்கச் செய்கிருர்.

மஹ்ஜூருக்கும் ஆஸாத்துக்கும் உள்ள வித்தியாசம், அவர்களுடைய வாழ்க்கை நிலையினுல் ஏற்பட்டது. ஆஸாத் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர். அவர் ஏழையேயானுலும், நடுத்தர வகுப்பாரின் ஏழ்மைதான் அது. அரசியல் அறிவு நிரம்பப் பெற்ற இவர், காஷ்மீரத்தின் பிச்சைக்காரர்களையும், நோயாளிக் குழந்தைகளுடன் மருந்துக்கு ஏங்கி நிற்கும் தாய்மார்களையும் பற்றிப் பாடுகிருர். நடுத்தர வகுப்பாரின் விடுதலைத் தாபம்தான் இவரிடம் இருக்கிறது. புரட்சிகரமான புத்துணர்வுடன், முன்னேற்றத்துக்கான அறிகுறிகளும் இவரிடம் இருக்கின்றன. ஆனுலும், இவருடைய கவிதை, காஷ்மீரத்தின் 90 சத விகித படிக்கத் தெரியாத பாமர மக்களுக்கு ஏற்றதாயில்லை யென்பது உண்மையே.

இந்த இருவரிடமும் சேராமல், தனிப் பாதை வகுத்துக்கொண்டவர் மிர்ஸா பெக். இவர் அரசாங்க மந்திரி ஒருவரின் சகோ

தார். இவருடைய கவிதையில் எக்களிப்பும், இசையும், நடனமும் நிறைந்திருக்கும். 'விளக்கின் மங்கிய ஒளி', 'மின்னலின் ஒளி வீச்சு' போன்ற அமானுஷிக விஷயங்களை விவரிக்கப் புகுந்திருக்கிறார் இவர். இப்போது இவர் யாப்பிலக்கணக் கட்டுப்பாடற்ற கவிதைகளை இயற்றுகிறார். அழகல்லாத ஒன்றிலிருந்து அழகைச் சிருஷ்டிப்பதே கலையின் நோக்கம் என்பது இவர் கொள்கை. அழகை ரசிக்கும் ஒரு சிறு கூட்டமே இவருடைய கவிதைகளைப் போற்றுகிறது. ஆனாலும், இவருடைய கவிதைகளுக்கு அலாதி மதிப்பு இருக்கத்தான் செய்கிறது

காஷ்மீர இலக்கியத்தில் இந்த மூன்று பேரும் உன்னதமான ஸ்தானம் பெற்றிருக்கிறார்கள். ஆனால், காஷ்மீர மக்களின் உள எழுச்சி நாளுக்கு நாள் பெருகுவதால், புதுப் புதுக் கவிஞர்கள் அதிசயமான கற்பனை உள்ளத்துடன் பிறந்துகொண்டே யிருக்கிறார்கள். காஷ்மீரத்தின் எதிர்கால இலக்கியத்தைச் சமைக்க வல்லவர்கள் இவர்களே.

✲

முத்தாய்ப்பு

சாமான் வாங்க வந்தவர்,

"கொட்டைப்பாக்கு இருக்கிறதா?" என்று கேட்டார்.

"இல்லை" என்றான் கடைக்காரன்.

"தேங்காய் எண்ணெய்?"

"கிடையாது"

"நெருப்புப் பெட்டி"

"பேசாதீர்கள்!"

"அட, ராமா! என்னதான் இருக்கிறது இங்கே?"

"ஒன்றுமே யில்லை"

"பின்னே, கடையைப் பூட்டிக்கொண்டு வீட்டுக்குப் போவது தானே?"

"பூட்டுக் கிடைக்கவில்லையே!"

நாவல் கதாநாயகி

நியூயார்க் தினசரி யொன்றில் கீழ்க்கண்ட விளம்பரம் வெளியாயிற்று:

"ஒரு லட்சாதிபதிக்கு மணமகள் தேவை; பெண், —அவர்களின் நாவலில் வரும் கதா நாயகியைப் போலச் சாமர்த்தியமும் அழகும் வாய்ந்தவளாக இருக்க வேண்டும்."

ஒரே நாளில் அந்தக் குறிப்பிட்ட நாவலின் பிரதிகள் அனைத்தும் விற்றுப் போயின.

—கிமெடீ ரேபார்ன்

பக்ஷணம்

●

யஷ் பால்

1942-ம் வருஷத்தில் நம் தேசியத் தலைவர்கள் ஒரு சுதந்தரப் போராட்டத்தைத் தேசம் முழுவதும் ஆரம்பிக்கத் தீர்மானித்தார்கள். அந்தப் போராட்டத்தை இவர்கள் தொடங்கு முன்னரே எல்லாரும் கைது செய்யப்பட்டுவிட்டார்கள். இது மக்களுக்கு ஆவேசத்தை ஊட்டி, அந்நிய ஆட்சியை எதிர்த்து ஒரு பிரமாதமான புரட்சியைச் செய்யத் தூண்டியது. இதன் விளைவாக, உள்ளூர் ஜில்லாச் சிறையில் கைதிகள் நிரம்பினார்கள்.

இந்தக் கைதிகளில் இருவரை —விசேஷர் சிங்கையும் ரயஸத்கானையும்— சிறை அதிகாரிகளுக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது.

இருவரும் காயமடைந்தவர்கள். விசேஷர் சிங்குக்குத் தொடையில் ஒரு குண்டு பாய்ந்திருந்தது; ரயஸத்கானின் தோள் பட்டையை ஒரு குண்டு துளைத்திருந்தது. சிறையைச் சேர்ந்த பிரிட்டிஷ் சிவில் ஸர்ஜன், அவர்களை 'ஆபரேஷன்' செய்து, குண்டுகளை வெளியே எடுத்தார். 'ஆபரேஷன்' செய்யும்போது, சிவில் சர்ஜன் வெறுப்புடன் முகத்தைச் சுளித்துக்கொண்டார். ஓர் அலக்ஷ்ய பாவத்துடன், சிப்பந்திகளை நோக்கி, "இந்தப் போக்கிரிகள் துரைமார்களை அவர்களுடைய பங்களாவுக்குள்ளேயே வைத்து எரித்துவிட்டனர். போலிஸ் ஸ்டேஷனுக்கும் நெருப்பு வைத்தார்கள்" என்றார்.

காயங்கள் ஆறுவதற்கு முன்னரேயே, விசேஷர் சிங், ரயஸத்கான் ஆகிய இருவருக்கும் கால் விலங்கு போட்டு வைத்தார்கள். இத்தகைய பயங்கரமான குற்றவாளிகளை எப்படி நடத்துவது என்பதற்கு உதாரணம் காட்டுவது போல, செஷன்ஸ் நீதிபதி தம்முடைய விசாரணையைச் சிறையிலேயே நடத்தினர். அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இங்கிலீஷ்காரர்களின் நியாய முறைக்கு ஏற்ப, மரண தண்டனை பெற்றவர்களின் சார்பில் ஹைகோர்ட்டில் அப்பீலும் பதிவு செய்யப்பட்டது. ஹைகோர்ட்டார் தண்டனையைத் தள்ளுபடி செய்வார்களா அல்லது ஊர்ஜிதம் செய்வார்களா என்பது முடிவாகத் தெரியவில்லை. எனவே, கைதிகள் இருவரும், கெட்டியான இரும்புத் தாழ்ப்பாள்கள் போடப்பட்ட இரட்டைக் கதவுகள் உள்ள சிறையிலே தனியாக அடைக்கப்பட்டார்கள்.

காருண்ய அரசாங்கத்தை எதிர்த்துப் புரட்சி செய்யத் துணிச்சலும், போலிஸ் ஸ்டேஷனை எரிக்கத் திமிரும் கொண்ட இந்தக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டதை, சீக்கிரத்திலேயே உள்ளூர்த் துரைமார்கள் அறிந்துகொண்டார்கள். மேலே சரமாரியாகப் பொழிந்த குண்டுகளை லட்சியம் செய்யாமல், இந்தக் 'காலிகள்' அதிகாரிகளையும் அவர்களுடைய பங்களாக்களையும் எரித்திருக்கின்றனர். சர்க்க

இது, ஹிந்தி மொழியில் கதையெழுதும் சிறந்த ஆசிரியரான ஸ்ரீ யஷ் பாலின் ஆவேசம் ஊட்டும் கதை. மனிதனை மனிதன் பக்ஷணம் பண்ணும் கொடுமையை விவரிக்கும் இக் கதை, நியூ லிட்டரேச்சர் பத்திரிகையிலிருந்து எடுத்தது.

காலை வேளையில் ஒரு இந்திய ரோஜா தோட்டத்திலேற்படக் கூடிய குதூகல உணர்ச்சியை வினோலியா ஒயிட் ரோஸ் சோப் உங்களுக்குத் தருகிறது. இச்சோப்பின் மிருதுவான செழிப்பாயுண்டாகும் நுரை மிகவும் நேர்த்தியான சருமத்தையும் ஒழுங்காக சுத்தம் செய்கிறது — மேலும் அதன் நறுமணம் உங்களைச் சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச் செய்கிறது. உங்கள் அழகை அதிகப்படுத்த இச் சோப்பைவிட மேன்மையானதோ, தகுதியானதோ வேறு கிடையாது. வினோலியா ஒயிட் ரோஸை உங்கள் இஷ்டத்திற்குரிய சோப்பாகக் கொள்ளுங்கள்.

வினோலியா ஒயிட் ரோஸ் சோப்

VWR. 19-111 TM VINOLIA CO., LIMITED, LONDON, ENGLAND

மனோஹரன் ஸ்டோர்ஸ்

தந்தி: "HARANTALKY"	181, கீழ வாசல் மதுரை	போன் நெ. 219

கீழ்க்கண்ட ஜவுளிகளின் ஸ்டாக்கிஸ்டுகள் :

மோஹன் ராம் கம்பெனியாரின் சேலைகள், வேஷ்டிகள்

✲

M. K. C. "சிங்கம் மார்க்"

பனியன்கள், ஸ்லிப் ஓவர்ஸ், அண்டர்வேர்ஸ் சின்டஸ் வகையரா

✲

சென்னை இன்டோ-லங்கா டிரேடர்ஸின்

30-இஞ்ச், 44-இஞ்ச் டோரியா வாயல்கள்

(சுத்த கைத்தறி ஜவுளிகள்) கண்களைக் கவரும் நவ நாகரிக டிஸைன்களின் பற்பல ரகங்களில் கிடைக்கும்

✲

மொத்த & சில்லரை ஆர்டர்களுக்கு எழுதவும்

ஸில், கூட்டில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் புலிகளைப் பார்க்க வரும் ஜனங்களைப் போல ஆவல் கொண்ட இந்தத் துரைமார்களும், துரைசானிகளும், இந்தக் கைதிகளைப் பார்க்கத் தமாஷாக அடிக்கடி வருவது உண்டு. எனினும், இந்தப் பார்வையாளர்களின் முகத்தில் ஆவலைவிட வெறுப்புத்தான் அதிகம் குடிகொண்டிருந்தது. அவர்கள் இருக்கும் அறைப் பக்கத்தில் வரும்போதெல்லாம், சிவில் சர்ஜனல் "கொலைகாரர்கள்!" என்ற வார்த்தையை உச்சரிக்காமல் இருக்கவே முடியாது. இந்த வார்த்தை அவருடைய வாய்க்கு மிகவும் அருவருப்பைத் தந்தது; அதனல், அந்தச் சிறைகளின் பக்கத்தில் அவர் காரித் துப்பிவிட்டு போவார்.

வெள்ளை எஜமானர்களின் குறிப்பை உணர்ந்து, இந்திய அதிகாரிகளும், கொஞ்சமும் சளைக்காமல், அவர்களைக் கடுமையாக நடத்தினர். வேறு எந்தக் கைதியும் இவர்களிடம் நெருங்கத் துணியமாட்டான். சிறை அதிகாரிகளுக்கும், காவலாளிகளுக்கும் இவர்களைப் பார்த்தாலே மனித உணர்ச்சி அத்தனையும் போய்விடும்.

விசேஷர் சிங்கும், ரயஸத்கானும் தங்கள் குற்றத்தின் பயங்கரத்தைப் பூரணமாக உணர்ந்திருந்தார்கள். பச்சாதாபமோ, மன்னிப்போ கிடைக்கும் என்ற நம்பிக்கையை அவர்கள் இழந்திருந்தார்கள். தாங்கள் பிராணத் தியாகிகளாகப் போகும் தினத்தை எதிர்நோக்கி, தேச பக்தி மிகுந்த கீதங்களைப் பாடிக்கொண்டிருந்தார்கள் அவர்கள். ஆனல், ஒரே ஒரு விஷயம் மட்டும் அவர்கள் மனசை அழுத்திக்கொண்டேயிருந்தது; அவர்களுடைய இந்தியச் சகோதரர்கள் ஏன் இவர்களைக் கண்டு பயப்படுபவர்களாகவும், வெறுப்பவர்களாகவும் இருக்க வேண்டும்? பிரிட்டிஷ்காரர் அப்படியிருந்தால் பரவாயில்லை. ஆனல், இவர்களுடைய சொந்த நாட்டையே சேர்ந்தவர்கள்—யாருடைய விடுதலைக்காக இவர்கள் தங்கள் உயிர்களையும் பணயம் வைத்தார்களோ அவர்கள்—இப்படி விரோத மனப்பான்மை காட்டுவது ஏனென்று விளங்கவேயில்லை. யாருடைய அரசாங்கத்தை இவர்கள் எதிர்த்துப் புரட்சி செய்திருந்தார்களோ, அந்த இங்கிலீஷ்காரர்களைப் பார்ப்பதே அபூர்வம். ஆனல், நிர்வாகம் முழுவதும் இவர்களுடைய நாட்டைச் சேர்ந்த ராஜ பக்தர்களாலேயே நடத்தப்படுகிறது. உண்மையான எதிரி எங்கே இருக்கிருன்?

இந்தக் 'கொலைகாரர்'களின் பால் துரைமார்களுக்கு உள்ள கோபத்துக்கு எல்லையில்லாமற் போய்விட்டது. ஹைகோர்ட் இவர்களுடைய தண்டனையை ஊர்ஜிதம் செய்தபோது, இந்தக் கைதிகள் விசாரணைக் கூண்டிலே கையைப்பிசைந்துகொண்டு நிற்பதைப் பார்த்து மகிழவென்று பல இங்கிலீஷ்காரர்கள் கோர்ட்டுக்கு வந்திருந்தனர். குற்றவாளிகளின் தலைக்கு மேலே தூக்குக் கயிறு தொங்கிக்கொண்டிருந்த போது, அவர்களுக்கு எதிரே நின்றுகொண்டிருந்த 'விரோதி'களின் முகங்கள் சினத்தினல் சிவந்தன. கொடுமைக்கும் அடக்கு முறைக்கும் விட்டுக்கொடுக்காமல், அவர்கள் தொண்டையின் பலம் முழுவதை

யும் பிரயோகித்து, "புரட்சி ஓங்குக! பாரத மாதாவுக்கு ஜே!" என்று கோஷமிட்டனர். தங்களைச் சுற்றி அசைவற்று நின்றிருந்த உடனொத்த இந்தியரை நோக்கினார்கள். யாருக்காக அவர்கள் தங்கள் உயிரைப் பலி கொடுக்கிறார்களோ, அந்த இந்தியர்கள் அல்க்ஷ்பமாக ஒரு சம்பந்தமும் இல்லாதவர்களைப் போல நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களுடைய ரத்தம்தான் தங்கள் உடலிலும் ஓடுகிறது என்பதைக் காட்டும் அநுதாபத்துக்கான எந்த அறிகுறியும் காணோம். 'விரோதிகள்'தான் நற நறவென்று பல்லைக் கடிப்பதன் மூலம், தங்கள் உணர்ச்சிகளை மறைக்காமல் வெளிப்படுத்தினார்கள்.

விசேஷர் சிங், ரயஸத்கான் ஆகியோரின் உறவினர்கள், செத்த சடலங்களைப் பெற்றுப் போகச் சிறைக்கு வந்தார்கள். அமைதிக்குப் பங்கம் நேருமென்று சொல்லி, அவர்களுடைய வேண்டுகோளை, ஜில்லாக் கலெக்டர் தள்ளிவிட்டார். சிவில் ஸர்ஜன் ஜெயிலரை வரவழைத்துச்சவங்களைச் சிறைக்குள்ளேயே புதைக்கும்படி உத்தரவிட்டார். அத்துடன் அவர்களைப் புதைத்த இடத்திலே "கீரையை விதைத்துவை!" என்றும் பல்லைக் கடித்துக் கொண்டே சொன்னார்.

கீரை வெகு விரைவில் வளர்ந்தது; இடுகாட்டின் செழிப்பான மண்ணில் வெகு சீக்கிரத்தில் வளர்ந்தது. கீரை முற்றியதும், ஊரிலுள்ள துரைமார்களுக்கும், அவர்களுடைய கிளப்புக்கும் அதை அனுப்புமாறு சிவில் சர்ஜன் உத்திரவிட்டார். தியாகிகளின் கல்லறைகளின் மேலே வளர்ந்த கீரை, துரைமார்களின் வீடுகளில் சமைக்கப்பட்டு, பரிமாறப்பட்டது. மாலைநேரமானதும் சிறை மூடப்பட்டது. கைதிகள் எல்லாரையும் அவர்களுடைய சிறைகளுக் குள்ளே அடைத்தார்கள். கட்டாந்தரையிலே படுத்துக்கொண்ட அவர்கள் ஒவ்வொருவரும் அந்தக் கீரைக் கறியைப் பற்றி எண்ணினார்கள். "இந்த ஆங்கிலேயர்கள் இந்தியர்களை எடுத்து விழுங்கிக்கொண்டிருக்கிறார்கள்" என்று மனசுக்குள்ளே எண்ணினார்கள்; ஆனால், அவர்களுடைய உதடுகள் இறுக மூடிக்கொண்டன. தாங்கள் நினைப்பதைச் சொல்லுவதற்கு அவர்கள் துணியவில்லை. அப்புறம் அது துரைமார்களின் காதுக்கு எட்டி, பிறகு......!

சிறையிலுள்ள ஒவ்வொரு சிறை அதிகாரியும் கூட இதையே சிந்தித்தான்; ஜெயிலரும், வைத்தியரும் மேலே மின்சார விசிறி சுற்ற, மெத்தைப் படுக்கையில் படுத்தவாறே, தலையணையில் தங்கள் முகங்களைப் புதைத்துக்கொண்டார்கள். இந்தச் சம்பவம் அவர்கள் உள்ளத்தில் ரத்தம் கசியச் செய்தது. கம்பவுண்டர், குமாஸ்தா, வார்டர்—எல்லோரும் தங்கள் படுக்கைகளில் முகத்தை மறைத்துக்கொண்டு படுத்தார்கள். மாதம் இருபது ரூபாய் சம்பளத்தில் புதிதாக வேலைக்கு வந்திருக்கும் காவல்காரன் உட்பட எல்லாரும் கண்களை மூடிக்கொண்டு, ஆங்கிலேயர்கள் இந்தியர்களைக் கபளீகரம் பண்ணுவதைக் கண்டு துடித்தார்கள். ஆனால், அவர்களுடைய மன வேதனை சொல்லிலே வெளி வரவில்லை.

கலவரங்கள் அடங்கியதைக் கொண்டாட, பிரிட்டிஷ் கிளப்பில் ஒரு பெரிய விருந்து நடந்தது. அடக்க ஒடுக்கத்துடன் சுதேசி ஆட்கள், பளபளத்த தட்டுகளிலிருந்து அந்தக் கீரையை எடுத்துப் பரிமாறினார்கள். அந்தக் கீரையின் கதையை அவர்களும் கேட்டுத்தானிருந்தார்கள். அதைக் கண்டு அவர்கள் உள்ளம் கரைந்தது. அவர்கள் பெருமூச்சு விட்டார்கள்; ஆனால், நாக்கை அடக்கிக் கொண்டார்கள். அவர்களுக்குச் சினம் பொங்கிற்று; ஆனால், ஒரு கையைக் கூட அசைக்கவில்லை. புரட்சிக் கனல் உள்ளுக்குள் கனன்று கொண்டே வந்தது.

✲

நியூயார்க்கில் அந்நிய நாட்டினர்

1776-ம் வருஷம் வரைக்கும் நியூயார்க் நகரம் மிகவும் சிறிய பட்டணமாகவே இருந்தது. அப்போது ஆங்கிலேயர்களும், டச்சுக்காரர்களும் மட்டுமே வசித்து வந்தனர். இப்போது நியூயார்க் உலகத்தின் இரண்டாவது பெரிய நகரமாக விளங்குகிறது. சுமார் 75 அந்நிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அங்கே வசிக்கிறார்கள். மனித வர்க்கத்தின் சகல பாஷைகளையும் அநேகமாக நியூயார்க்கில் பேசுகிறார்கள்.

1847-ம் வருஷம்தான் முதல் முதலில் அந்நியர்கள் நியூயார்க்குக்கு வரத் தொடங்கினார்கள். 1905-ம் வருஷத்தையடுத்து, வருஷத்துக்குலட்சம் அந்நியர்கள் எல்லிஸ் தீவு வழியாக நியூயார்க்குக்குள் பிரவேசிக்கத் தொடங்கிவிட்டார்கள். இப்போது இருபது வருஷமாகக் குடியேற்றம் மிகவும் குறைந்து விட்டது.

அயர்லாந்தின் தலைநகரமான டப்ளினில் இருப்பதைவிட அதிகமாக நியூயார்க்கில் ஐரிஷ்காரர்கள் இருக்கிறார்கள். ரோம்நகரில் எத்தனை இத்தாலியர்கள் இருக்கிறார்களோ, அத்தனை இத்தாலியர்கள் நியூயார்க்கில் இருக்கிறார்கள். நியூயார்க்கின் மொத்த ஜனத் தொகை 70,00000; இதில் 21,50,000 பேர் அந்நிய நாட்டினர்.

நியூயார்க் நகரத்திலுள்ள பிற நாட்டவர்களும் அவர்களின் எண்ணிக்கையும் பின்வருமாறு:—

1.	செக்கோஸ்லோவேகியர்கள்	57,000
2.	கிரேக்கர்கள்	53,000
3.	போலிஷ்காரர்கள்	4,12,000
4.	பிரெஞ்சுக்காரர்கள்	19,000
5.	இத்தாலியர்கள்	10,95,000
6.	ஹங்கேரியர்கள்	1,23,000
7.	இந்தியர்கள்	150
8.	யுகோஸ்லேவியர்கள்	11,000
9.	ஆர்மீனியர்கள்	22,000
10.	நார்வேக்காரர்கள்	54,000
11.	டச்சுக்காரர்கள்	11,000
12.	சீனர்கள்	24,000

மீதி 2,78,850 பேர்களில் யூதர்களும், ஐரிஷ்காரர்களும் அதிக அளவிலும் ருஷ்யா, ஜெர்மனி, ருமேனியா, அரேபியா, ஸ்வீடன் முதலிய நாட்டவர்கள் குறைந்த அளவிலும் இருக்கிறார்கள்.

வினைதீர்க்கும் விளையாட்டு

●

சி. ந. வைத்தீஸ்வரன்

நமக்கு அடிக்கடி வயிற்று வலியோ, நெஞ்சு வலியோ வந்து கொண்டே இருந்தால் டாக்டரிடம் போகிறோம். அவர் நாடி பிடித்துப் பார்க்கிறார்; குழாயை வைத்துப் பார்க்கிறார்; வயிற்றை அமுக்கிப் பார்க்கிறார்; நெஞ்சைத் தட்டுகிறார். சில வேளைகளில் கண்ணையும், நாக்கையும் சோதிப்பதோடு தீர்மானித்துவிடுகிறார். கொடிய நோயாயின் ரப்பர் குழாயை விழுங்கச் சொல்லி ஜீரண ரசத்தைச் சோதிக்கிறார், எக்ஸ்ரே படம் பிடிக்கிறார். இத்தனையும் ஆன பிறகு கஷாயமோ, பஸ்பமோ, சர்பத்தோ கொடுக்கிறார். இல்லாவிடில் ஊசி போடுகிறார். இல்லாவிடில் விலை யுயர்ந்த ரேடியம் வெளிச்சத்தைக் காட்டிச் சிகிச்சை செய்கிறார். இவற்றி லெல்லாம் நம்பிக்கை யில்லாதவர்கள் தொட்டி ஸ்நானம் செய்கின்றனர். வலி கண்ட இடத்தில் களிமண் பூசிக் குணம் பெறுகின்றனர். இப்படிப் பற்பல உடற் கோளாறுகளுக்குப் பற்பல வகை வைத்தியங்கள் இருக்கின்றன.

சங்கரனுக்கு வயது பதினொன்று. நல்ல தேகக் கட்டு; ஒரு நோயும் இல்லை. புத்திசாலி தான். ஆனால் பள்ளிக்கூட மாணவர்களின் பேனா, பென்சில், ரப்பர் முதலியவற்றைத் திருடிக் கொள்வான். கண்டுபிடித்துக் கேட்டால் வம்பு பண்ணாமல் திரும்பவும் கொடுத்து விடுவான். இவனுடைய தந்தை ஒரு லக்ஷப் பிரபு. இந்த ரோகத்தைத் தடுக்க சாதாரண மருத்துவரிடம் மருந்து இல்லை.

லீலாவுக்கு வயது ஐந்து. சாதாரணக் குழந்தைகளைப் போல் புத்திசாலிதான். தொழிலாளியின் குழந்தை. எந்தத் தண்ணீரையும் குடிக்கும். சேற்றுத் தண்ணீரையும், கழுவு தண்ணீரையும் கூடக் குடித்துவிடும். இவ்வாறு குடிப்பதில் ஒரு தனித் திருப்தி. இதற்கு விமோசன முண்டா என்று சாதாரண டாக்டர்களிடம் போனால் கையை விரித்துப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியைத்தான் காட்டுவார்கள்.

கிட்டுக்கு வயது பன்னிரண்டு. உடற்கோளாறு ஒன்று மிருப்பதாக டாக்டர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. நன்றாக ஓடி ஆடுகிறான். ஆனால் வகுப்பில் சுறுசுறுப்பாக இருக்க மாட்டான். மற்றக் காரியங்களில் புத்திசாலித் தனத்தை நன்கு காட்டுகிறான். இத்தனை வயதாகியும் படுக்கையில் மூத்திரம் பெய்வது நின்றபாடில்லை. கேலி பண்ணினாலும் சரி, நிந்தித்தாலும் தண்டித்தாலும் சரி இந்தத் துர்ப் பழக்கம் நிற்கவில்லை. சாதாரண டாக்டர்கள் என்ன சொல்கிறார்கள்? பழைய பல்லவியேதான்.

அப்படியானால் இதைப் போன்ற ரோகங்களுக்கு விமோ

குழந்தைகளிடம் நமக்குப் புரியாத சில கெட்ட குணங்கள் இருப்பது உண்டு. அவைகளைப் போக்குவதற்குத் தடிக் கம்பு உபாயத்தைக் கையாளுவதுதான் சிலாகிக்கத் தக்க மார்க்கம் என்று எல்லோரும் கருதுகிறார்கள். ஆனால் கட்டுரையாளர் இங்கே கூறும் வேறு சில புது உபாயங்களையும் படித்தும் பார்க்கவேண்டியது அவசியம்.

Godrej கோத்ரேஜ்

'CHAVI' BRAND சாவி மார்க்

டாய்லெட் (ஸ்னை) ஸோப்புகளால்

சுகாதாரம் - ஆரோக்யம் - அழகு

உங்கள் தேகத்தை சுத்தமாய் வைத்துக்கொள்ளவும், தேகாரோக்கியத்தை மிளிரச் செய்யவும், அழகின் நிரந்தரமான வசீகரமும் சுத்தமும் கூடிய தாவர எண்ணெய்களும் மூலிகை சாமான்களும் சேர்க்கப்பட்டு, அத்துடன் புஷ்பங்கள் பூத்துத்தொங்கும் வயல்களேயும் பள்ளத்தாக்குகளேயும் ஞாபக மூட்டக்கூடிய நறுமணம் வீசும் வாசனைகளும் சேர்க்கப்பட்டுள்ள கோத்ரெஜ் டாய்லெட் (ஸ்னை) ஸோப்புகள், சுத்தம் செய்யவும் உங்களுக்கு புத்தம் புதிய உணர்ச்சியைக் கொடுக்கவும் இயற்கையான சர்ம அழகை அளிக்கவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன.

கோத்ரெஜ் ஷேவிங் ஸோப்பும், (ஸ்டிக் ரவுண்டும்) கூட செய்கின்றனர்.

கோத்ரெஜ் ஸோப்ஸ், லிமிடெட்

மதராஸ்: 164, பிராட்வே ; எர்ணுகுளம்: 9/278, ஜெவ் தெரு.

உயர்தரமான கைக் கடிகாரங்கள்

ஸ்விட்ஸர்லந்தில் செய்யப் பட்டவை. உயர்ந்த வேலைப்பாடுள்ளவை. ஒவ்வொன்றும்மூன்று வருடங்கள் உத்தரவாதம். படத்தில் காண்பதைவிட அழகானவை. ப்ளாஸ்டிக் ஸ்ட்ராப் அல்லது சங்கிலியுடன் அழகிய பெட்டியில் வைத்து சப்ளை செய்யப்படும்.



No. W—101

பளபளப்பான குரோமியம் கேஸ் (ஜுவெல் இல்லாதது) ரு. 28/-
உயர்தரம் ,, 4-ஜுவெல்கள் ரு. 38/-
,, ,, 7 ,, ரு. 40/-
,, ரோல்ட் கோல்ட் (10-வருடம் உத்தரவாதம்) ரு. 58/-
15-ஜுவெல்கள் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ரு. 68/-
,, ரோல்ட் கோல்ட் (10-வருடம் உத்தரவாதம்) ரு. 88/-

No. W—102

பளபளப்பான குரோமியம் (ராஸ்கோப் மூவ்மெண்ட்) ரு. 30/-
உயர்தரம் ,, 4-ஜுவெல்கள் ரு. 40/-
,, ,, 7 ,, ரு. 44/-
" ரோல்ட் கோல்ட் (10-வருடம் உத்தரவாதம்) ரு. 60/-
15-ஜுவெல்கள் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ரு. 70/-
,, ரோல்ட் கோல்ட் (10-வருடம் உத்தரவாதம்) ரு. 90/-

No. M—103

பளபளப்பான குரோமியம் 4-ஜுவெல்கள் ரு. 42/-
உயர்தரம் 7-ஜுவெல்கள் ரு. 45/-
,, ரோல்ட் கோல்ட் (10-வருடம் உத்தரவாதம்) ரு. 62/-
15-ஜுவெல்கள் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ரு. 72/-
,, ரோல்ட் கோல்ட் (10-வருடம் உத்தரவாதம்) ரு. 92/-

மேல்கண்ட வகைகளில் லேடி, சைசிற்கு 12½% அதிகம். பாக்கிங் போஸ்டேஜ் 0–12–0 தனி. ஒரே சமயத்தில் இரண்டு கடிகாரங்களுக்கு ஆர்டர் செய்தால் தபால் செலவு இனும். ஆர்டர் செய்யும்பொழுது கடிகாரத்தின் நம்பர் எழுதவேண்டும்.

பயோனிர் வாட்ச் கம்பெனி
போஸ்ட் பாக்ஸ் நம்பர் 11428, கல்கத்தா
ஷோ ரூம்: 318-A சித்தரஞ்சன் அவென்யூ

ஸ்திரீகளின் ஆரோக்கியத்திற்கு

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

அருணை

கர்பாசயரோக நிவாரணி

அருணை ஸ்திரீகளின் தேக சுகத்திற்கு அவசியமான சிறந்த டானிக். முறைப்படி தவறாமல் உபயோகித்தால் ஆரோக்கியத்தை விருத்தி செய்து வாழ்க்கையை நன்கு ரசிக்கச் செய்யும்.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்.
தி-நகர் . . . . மதராஸ்.

EASTERNS 376.

சனமே இல்லையா? உண்டு. எங்கே? பெரும்பாலும் நம் நாட்டில் இல்லை. பம்பாய், கல்கத்தாவில் மட்டும் இதற்கு மருத்துவ சாலைகள் இருக்கின்றன. ஆனால், மேனாடுகளில் இவைகளை நன்கு ஆராய்ந்து தக்க சிகிச்சைகள் செய்கின்றனர். எப்படி? நாடி பிடித்தும், குழாய் வைத்தும், படம் பிடித்துமா? இல்லை. விளையாட்டு நிலையங்கள் ஏற்பாடு செய்து அவைகளின் மூலம் தகுந்த சிகிச்சைகளைத் தருகின்றனர்.

இந்த விளையாட்டு நிலையங்களுக்குத் தலைவர்கள் சாதாரண டாக்டர் பரீக்ஷை மட்டுமல்ல, உள இயல் பரீக்ஷையிலும் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள். முக்கியமாகக் குழந்தை மனத்தை நன்குணர்ந்தவர்கள். இவர்களுக்கு இவ்வறிவுப் பட்டத்தோடு குண அமைதியும் அவசியம் இருத்தல் வேண்டும். இவர்களிடம் சிகிச்சைக்கு வருகின்ற குழந்தைகளிடம் ஒரு தனி அன்புடையவர்களாய் இருக்க வேண்டும். குழந்தை தன்னை வைதாலும், அடித்தாலும், தன்னுடைய நிலையத்திலுள்ள விளையாட்டுச் சாமான்களைத் தூள் தூளாக்கினலும், தன் முகத்திலே துப்பினலும்கூடக் கொஞ்சமேனும் கோபத்தையோ வெறுப்பையோ பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்பதையோ, காட்டிக் கொள்ளாத அவ்வளவு மன அமைதி வேண்டும். எல்லாவற்றுக்கு மேலாக ஆழ்ந்த பொறுமை வேண்டும். இத்துணையும் சுலபமாகப் பெறுவதில்லை. இத்தகைய டாக்டர்கள் தங்களுடைய உள்ளங்களையே பண்பாக்கிக்கொள்ள உளப் பகுப்புச் சோதனைக்குள்ளாக்கி, (psycho-analysis) தங்களுடைய மனத்தில் தோன்றும் போலி டம்பங்களையும், தப்பபிப்பிராயங்களையும், உளச் சிக்கல்களையும் விடுவித்துக் கொள்கின்றனர். ஆதலால், குழந்தைகளிடம் குற்றமே காண்கிறது என்ற சாதாரண மனப்பான்மையை அறவே மாற்றி அமைத்துக் கொள்கின்றனர். தன்னிடம் வருகின்ற ஒவ்வொரு குழந்தையிடமிருந்தும் தான் ஒன்று கற்றுக் கொள்ள முடியும் என்ற அடக்கம் பொருந்தியவராக இருக்கிறார். இவருடைய பணி, குழந்தை மனத்தில் தோன்றும் பல சிக்கல்களைத் தாமாகவே விடுவித்துக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டியதுதான். அவ்வாறு செய்பவர் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும்.

இத்தகைய டாக்டருக்குத் துணையாக, "சமூகத் தொண்டர்" என்று ஓர் அம்மையார் இருப்பார். இவரும் உளநோய் நூலில் தேர்ச்சி பெற்றவராக இருப்பார். கோளாறுக் குழந்தைகள் (Problem Children) என்று கருதப் படுகின்றவர்களின் பெற்றோரும் பெரும்பாலும் கோளாறுப் பெற்றோர்கள் என்பதற்கு ஐயமில்லை. பெற்றோருக்குள் தத்தம பால்யத்தில் குறை நீங்காத உளக் கோளாறுகள் நீடித்துக் குழந்தைகளையும் பாதிக்கும்படியாக நிலைத்துவிடுகிறது. ஆதலால் குழந்தை, சிகிச்சை அடையும்போது பெற்றோருடைய உள வாழ்வையும், சூழ் நிலையையும், அவர்களுடைய பால்யத்தையும் பொதுவாக அவர்களுடைய மனப்பான்மையையும் சமூகத் தொண்டர் அறிந்து வந்து டாக்டருக்குத் தெரிவிப்பார். நோகவே டாக்டரிடம் பெற்றோர்

தெரிவிப்பது என்றால் அவ்வளவு முன்வந்து தெரிவிப்பதற்குச் சற்றுத் தயங்குவார்கள். மேலும் சிகிச்சையின் பலனைக் குழந்தையின் வீட்டிலும், பள்ளிக்கூடத்திலும் சென்று ஆராய்ந்து வந்து தொண்டர் தெரிவிப்பார். இப்படிப் பல முறையில் குழந்தையுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவும், பல குழந்தைகளையும் சோதிப்பதற்கும், சமூகத் தொண்டரின் துணை டாக்டருக்கு அவசியம்.

பொதுவாக இரு வகை விளையாட்டுகள் இருக்கின்றன. கால் பந்து, கைப் பந்து, தடுப்புப் பந்து போன்றவையும், கிளித்தட்டு, சடுகுடு போன்றவையும் சட்ட திட்டங்களுடன் ஆடக்கூடியவை. *ப்ரௌடிகள் ஏற்படுத்தின சட்டங்களின் வரம்பைக் கடக்காது ஆட வேண்டும். இவை ஒரு வகையில் உடற்பயிற்சிக்கும், உளக் களிப்புக்கும் இடந் தருகிறது. ஆனால், குழந்தைகள் தாமாகவே வண்டிக்காரன் போலும், சமையற்காரன் போலும், அம்மா அப்பாவைப் போலும் விளையாடும் பொழுது சட்ட திட்டம் ஒன்றுமே அனுசரிப்பதற்கு இடம் இல்லை. இந்த விளையாட்டில் கற்பனா சக்திக்கும், மன எழுச்சிக்கும் இடம் இருக்கிறது. கைத தடியைச் சவாரி செய்கின்ற குதிரை என்று குழந்தை கற்பனை பண்ணிக்கொண்டு பட்பட் டென்று சாட்டையால் அடிக்கும் பொழுதும், பொம்மைக் குழந்தை தொட்டிலில் தூங்காத பொழுது "அழுதையா பார் பூச்சாண்டிக்குக் கொடுத்துடுவேன்" என்று பயமுறுத்தும்பொழுதும் குழந்தையின் மனக் கிணற்றில் சுரக்கின்ற ஊற்றுக்கள் என்னென்ன வென்று ஒருவாறு அறிய முடியும். ப்ரௌடிகளின் மனக் கோளாறுகளை விடுவிக்க வேண்டுமானால் அவர்களுடன் சம்பாஷித்தும், அவர்களுடைய கனவுகளை ஆராய்ந்தும் ஒருவாறு செய்ய முடியும். ஆனால், சிறு குழந்தைகளின் கனவை அறிவதோ அவர்களுடன் நேரடியாக நீண்ட காலம் தொடர்ச்சியாகச் சம்பாஷிப்பதோ எளிதான காரியங்க ளல்ல. குழந்தைமையில் இரண்டரை ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுவரை நடைபெற்ற சம்பவங்கள் நம் ஞாபகத்துக்குக் கொண்டு வருவது பெரும்பாலும் அசாத்தியமே. ஆனால், இந்தச் சம்பவங்களை நேரடியாக அறிய முடியாவிட்டாலும் குழந்தைகள் தாமாகவே பேசுவதிலும், விளையாடுவதிலும் வரைவதிலு மிருந்து மறைமுகமாக இவர்கள் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்து கிடக்கும் கோளாறுகளை அறிய முடிகிறது. இதற்காகவேதான் விளையாட்டு நிலையங்கள் அமைப்பித்து வினை தீர்க்க முயலுகின்றனர்.

இத்தகைய வினை தீர்க்கும் விளையாட்டு நிலையக் காட்சியை நேரில் நாமும் காண்போம்.

இது ஒரு பெரிய நிலையம். இது ஆசிரியர் கல்லூரியுடன் இணைக்கப்பட்டது. அனுபவ முடைய உள இயலாரும் அனேக துணைச் சிறுமியரும் இதில் பங்கெடுத்துக் கொண்டனர். வாரம் இரு முறை இந்த நிலையத்தை மாலையில் திறந்து வைத்தனர். சுமார் நூறு குழந்தைகள் இங்கு வருகின்றனர். இவர்கள்

* ப்ரௌடிகள் என்ற சொல் வயது வந்தவர்கள் (Adults) என்ற பொருளில் உபயோகிக்கப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. —ஆசிரியர், சக்தி

மூன்று முதல் பதினுன்கு வயது வரை உள்ளவர்கள். பெரும் பாலும் ஏழை மக்கள், பள்ளிக் கூடங்களில் விஷமக்காரர்கள், அடங்காப் பிடாரிகள், வீடுகளில் சமாளிக்க முடியாத தறுதலைகள் என்று கருதப்பட்டவர்களே இக் குழந்தைகள். தனித்தனி அறைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் விதவிதமான விளையாட்டுச் சாமான்கள் இருக்கின்றன. சில அறைகளில் கைத் தொழில் கருவிகளும் பண்டங்களும் இருக்கின்றன. குழந்தைகள் வந்தவுடன் அவரவருக்கு இஷ்டமான விளையாட்டில் இறங்குகின்றனர். ஆங்காங்குள்ள துணை ஆசிரியர்கள் குழந்தையே விரும்பி வேண்டினுல் ஒழிய குறுக்கிட்டுத் தடுப்பதோ உதவி செய்வதோ இல்லை. ஏதாவது ஒன்றைக் கெடுத்தாலும் கண்டிப்பதில்லை. அதோ குழந்தைகள் கொஞ்சம் முன்னதாகவே வந்து விட்டனர். ஒவ்வொருவரும் கை கால்களைச் சுத்தம் செய்து கொள்ளுகின்றனர். எட்டு வயது மீனு துண்டைத் துவைக்க ஆரம்பித்துவிட்டாள். விசாலத்துக்கு வயது ஐந்துதான். சல்லிப் பாளையிலே தண்ணீர் நிரப்பி மணல் தட்டை நனைக்கிருள். சிசுக்கள் அறையில் பெரிய வீடு ஒன்று கட்டியாகிறது. கதவு ஜன்னல் எல்லாம் வைத்துவிட்டனர். இதற்குள் ஆறு குட்டிகள் புகமுடியும். ஒன்பது வயது பாபுவும், அதே வயது ஜானகியும் இதைக் கவனித்துக் கட்டுகின்றனர். சின்னச் சின்னக் குட்டிகளெல்லாம் செங்கல் சுமக்கின்றனர், வீடு கட்ட.

கைத் தொழில் அறையில் இருவர் மாவை நன்ருகப் பிசைந்து கல்மேல் போட்டு ரொட்டி சுட்டுக்கொண்டிருக்கின்றனர். ஒரு கூட்டம் முன்னே காகிதத் துண்டுகளைப் போட்டுக் கொண்டே அறை அறையாகச் செல்கின்றது. பின்னே இவர்களைத் தொடரும் கூட்டம் துண்டுகளைப் பொறுக்கிக்கொண்டே செல்கின்றது. நான்கு வயதுக் குழந்தைகள் இங்கு மங்கும் ஓடோடி வேடிக்கை பார்த்து நிற்கின்றனர்!

இந்தக் காட்சியைக் கண்ட நமக்கு 'இது என்ன பைத்தியம், இத்தனை பணத்தையும் இந்த விளையாட்டிலே செலவழித்துக் குழந்தைகளைக் குட்டிச் சுவராக ஆக்குகிருர்கள். இது வினை தீர்க்கும் விளையாட்டா, வினை தேடும் விளையாட்டா?' என்று சந்தேகம் தோன்றிவிடுகிறது. வினை தீர்த்த "கேஸ்" ஒன்றைக் கவனிப்போம்.

பிரேமாவுக்கு வயது ஐந்தரை இருக்கும். நல்ல அழகு; முகத்திலே தேஜஸ்; மனக் கற்பனை உடையவள்; பேச்சிலே ஒரு கம்பீரம்; நல்ல தெளிவான உச்சரிப்பு. ஆனல், பள்ளிக்கூட மாணவிகளின் புத்தகங்களைக் கிழித் தெறிகிருள்; ஆசிரியரையும் நண்பர்களையும் அடிக்கிருள்; கிள்ளுகிருள். தன்னை ஒத்த வயதுடைய மாணவர்களுடன் கலக்கவே மாட்டேன் என்கிருள். பெரியவர்களுடன் என்ருல் உறவாடுகிருள். பள்ளிக்கூடத்திலிருந்து "டிஸ் மிஸ்" செய்யப்பட்டுவிட்டாள்.

வீட்டிலும் பெரிய தகாறுதான். அழுகையும், ஆங்காரமும் பொறுக்க முடியாது. ஒரே குழந்தை. ரொம்பச் செல்வமாக வளர்க்கப்பட்டவள். இவள் முன்னிலையிலே தாய் தந்தையர்

இவளை வளர்க்கும் முறையில் வேறுபட்ட அபிப்பிராயங்களைப் பற்றி வாதாடுவார்கள். சிறு வயதில் இவளுக்கு வயிற்றுவலி வருவதுண்டு; அத்துடன் மலச் சிக்கலும் கூட. சரிவர தினமும் கொல்லைக்குப் போகமாட்டாள். போக வேண்டுமென்றால் பிரேமா கண்ணீர் சொட்டுவாள். ஐயோ மகளே என்று தாயும் கண்ணீர் வடிப்பாள். இந்தக் குழந்தை விளையாட்டு நிலையத்துக்குக் கொண்டு வரப்படுகிறாள். பல வாரங்கள் வந்து போகிறாள்.

முதலில் விளையாட ஆரம்பிக்கிறாள். ஆசிரியர் போல் பாவனை செய்கிறாள். வெகு கண்டிப்பு; முன் கோபம்; எல்லாம் பிழையில்லாமல் நடைபெற வேண்டும். வைத்தது சட்டமாக நடைபெற வேண்டும். இப்படி யெல்லாம் மனக் கற்பனையில் விளையாடின பிரேமா உடனே மாறிவிட்டாள். எஜமானத்துவத்தை அவள் விரும்பவில்லை. கண்டிப்பான ஆசிரியர் பதவியை விட்டுவிட்டுப் பச்சைக் குழந்தைபோல் நடிக்க ஆரம்பித்து விட்டாள். கையாலாகாத குழந்தை எனப் பாவித்தாள். அன்பையும் ஆதரவையும் பெரியோர்களிட மிருந்து எதிர் பார்த்தாள். கம்பீரமான கனத்த தொண்டை மாறிக் கொஞ்சிக் குலாவும் சிறு குழந்தைக் குரலாயிற்று. "நான் தவழும் குழந்தை" என்று தரைமேல் படுத்துத் தவழுவாள். மழலைச் சொல்லைப் பேச ஆரம்பிப்பாள். தனக்கே பாடிக்கொள்வாள். தளர் நடையில் நடக்க முயற்சி செய்வாள். வினை தீர்க்கும் மருத்துவர் கையைப் பிடித்து நிற்கப்பார்ப்பாள். தள்ளு வண்டியில் வைத்துத் தள்ளச் சொல்லுவாள். இவ்வாறு அவள் கொஞ்சமும் கூச்ச மில்லாமல் குழந்தை போல் விளையாட வேண்டுமானால் வினை தீர்ப்போரிடம் எவ்வளவு நம்பிக்கை யிருக்க வேண்டும்! இவ்வாறு வயது வந்த குழந்தை பால் குடிக்கும் குழந்தை போல் நடந்து கொள்வானேன்; இன்னும் வளர்ச்சியில் முதிர்ச்சி பெறாத குழந்தையைப் பெற்றோர் வயது வந்தவளென்று கருதி பெரியோர்களைப் போல் நடந்து கொள்ள வேண்டுமென்று எண்ணினர்; வற்புறுத்தினர். ஆனால், குழந்தையின் மனம் இன்னும் குழந்தைமை எல்லையைத் தாண்டவில்லை. அந்த எல்லைக்குள் விளையாடவேண்டிய விளையாட்டுகளைப் பெற்றோர் அங்கீகரிக்கவில்லை. குழந்தைமையைச் சீக்கிரத்தில் மறைக்க முயன்று குழந்தை உள்ளத்தை ஒடுக்கினர். அதன் பயனாக மேலே கண்ட கோளாறுகளில் தன் மன ஒடுக்கத்தைக் காட்டிக் கொண்டது. அந்த மன ஒடுக்கம் 'பிற்போக்கு விளையாட்டினால்' (Regressive Play) வெளியாயிற்று. வயதுக்குத் தகாத பருவத்தையும் அதன் இயல்லையும் நாம் குழந்தை மேல் வற்புறுத்துவதினால் ஏற்படும் வினைக்கு மருந்து பிற்போக்கு விளையாட்டு. பல நாட்களுக்குப்பிறகு அதைத்தந்ததும் குழந்தைகுணம் அடைந்தது.

இப்படிப் பற்பல விளையாட்டுகளால் மன வினையைத் தீர்க்கும் மருத்துவ நிலையங்களை, நம் சர்க்கார் ஏற்படுத்த வேண்டியது அவசியம்.

✲

இந்தியாவில் வருஷத்துக்கு 760 கோடி சிகரெட் செலவாகிறது.

—நல்வழி

குழந்தை அலங்காரத்தில் இருப்பவர் யார்?



படம் : என். ராமகிருஷ்ணு

" பங்களாக் கட்டிருக்கேன், பாரு ! "

சக்தி



படம் : என். ராமகிருஷ்ணு

" பிஞ்சில் பழுப்பதுவோ ? பிராயத்தை வெல்வதுவோ ? "

சக்தி

சென்னை நகரசபையில் ராஜன் பாபு



அ. நி. சபையில் ஆச்சாரியர் நால்வர்

சர். டி. விஜயராகவாச்சாரி, சர். வி. டி. கிருஷ்ணமாச்சாரி,
சி. ராஜகோபாலாச்சாரி, டி. டி. கிருஷ்ணமாச்சாரி



படம்: ஆர். பூர்ணையா

'கான மயிலாட...

படம்: கே. முத்துராமலிங்கம்

...கண்டிருந்த வான்கோழி'



ஜே. சி. குமரப்பா

சக்தி

ஜே. சி. குமரப்பா

கிராமவாசி

ஸ்ரீ. ஜே. சி. குமரப்பா என்ற ஜோஸப் கார்னீலியஸ் குமரப்பா பூர்வத்தில் திருநெல்வேலிக்காரர் என்றாலும், பிறந்தது தஞ்சாவூரில்தான். ஸ்ரீ. எஸ். டி. கார்னீலியஸ் தம்பதிகளின் ஐந்தாவது குமாரராகவும், ஒன்பதாவது சந்ததியாகவும் 1892-ம் வருஷம் ஜனவரி மாதம் நால்ரம்தேதிபிறந்தார் குமரப்பா. இந்தியாவின்பொருளாதார சாஸ்திரத்தில் அசகாய சூரர்களாக இருப்பவர்களில் குமரப்பாவும் ஒருவர். கிராமங்களின் அடிப்படையில் இந்தியாவின் அரசியல் பொருளாதாரம். நாகரிகம் முதலியவைகளை அமைக்க விரும்பும்குமரப்பாகிராம வாழ்வையே கடைப்பிடித்திருக்கும் மகாத்மா காந்தியின் பரிபூரண அபிமானத்தையும், அன்பையும் பெற்றிருப்பது ஆச்சரிய மல்ல.

குமரப்பா முதலில் சென்னை டோவ்டன் காலேஜிலும், நியூயார்க்கில் உள்ள ஸிராக்யூஸ் சர்வகலாசாலையிலும், அதே நகரிலுள்ள கொலம்பியா சர்வ கலாசாலையிலும் கல்வி பயின்று எம். ஏ. பட்டம் பெற்றார்.

1918, 1919-ம் வருஷங்களில் லண்டனிலுள்ள ஒரு பிரிட்டிஷ் கம்பெனியில் பிரதானமான பதவி வகித்துவிட்டு இந்தியாவுக்கு வந்தார். வந்து பம்பாய் நகரில் கணக்குப் பரிசோதகராகவும் 1919-லிருந்து 1929 வரை ஒரு வர்த்தகக் கல்லூரியில் போசிரியராகவுமிருந்தார்.

மகாத்மா காந்தியின் வேண்டுகோளின் பேரில் 1929, 1930-ம் வருஷங்களில் ஐம்பது கிராமங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு, அவற்றின் பொருளாதார நிலைமைகளையும், குறைகளையும் ஆராய்ந்தார். 1930 மேயிலிருந்து, 31 ஜனவரி வரை மகாத்மாஜியின் 'யங் இந்தியா' பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் அமர்ந்து பணியாற்றினர். அப்போது காந்திஜி உப்பு சத்தியாக்கிரகம் தொடங்கியதற்காகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அப்புறம் 'யங் இந்தியா' பத்திரிகை பறிமுதல் செய்யப்பட்டது. குமரப்பாவுக்கும் ஒரு வருஷம் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது. கராச்சி காங்கிரஸ் ஏற்படுத்திய ஒரு 'செலக்ட் கமிட்டி'க்கு குமரப்பாதான் 'கன்வீனர்'. இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையே இருந்த நாணய மாற்றைப் பற்றி அக் கமிட்டி தயாரித்து 1931 ஜூலையில் வெளியிட்ட அறிக்கைக்கு 'பொதுக் கடன்' என்று பெயர்.

வட்டமேஜை மகா நாட்டுக்காகக் காந்திஜி லண்டன் சென்றிருந்தபோது, குமரப்பா மறுபடியும் 'யங் இந்தியா'வின் ஆசிரிய பீடத்தில் அமர்ந்தார். காந்திஜி இந்தியா திரும்பியதும் கைது செய்யப்பட்டார். குமரப்பாவுக்கும் இரண்டுவருஷக் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. 1934-ல் இவர் தண்டனை காலம் முடிந்து வெளியே வந்ததும் பீஹார் பூகம்ப நிவாரண மத்திய பொருளாதாரக் கமிட்டியின் பரிசோதகராகவும், அதன் நிர்வாகக்

'கிராம உத்யோக' பத்திரிகை யாசிரியரும், பொருளாதார சாஸ்திரியுமான ஸ்ரீ. ஜே. சி. குமரப்பாவின் வாழ்க்கைக் குறிப்புகள்.

கமிட்டியில் ஓர் அங்கத்தினராக வும் நியமிக்கப்பட்டார். 1934-ல் மகாத்மாஜியின் தீர்மானப்படி அகில இந்தியக் கிராமக் கைத் தொழிற் சங்கம் ஏற்படுத்தப் பட்டது. அதற்கு இன்று வரை யும் குமரப்பா காரியதரிசியாக இருந்து வருகிறார்.

1938-ல் மத்தியமாகாண, பீரார் அரசாங்கங்களின் வேண்டு கோளின்படி தொழிற் சங்கக் கமிட்டியின் தலைவராக அமர்ந்து 600 கிராமங்களைச் சுற்றிப் பார்த்து அவற்றின் நிலைமையைப் பற்றி நாலு வால்யூம்களில் ஓர் அறிக்கை தயாரித்துச் சமர்ப்பித் தார். 1939-ல் எல்லைப்புறச் சர்க் காரின் வேண்டுகோளின்படி, அங்கே சென்று அம் மாகாணத் துக்கு ஒரு பொருளாதாரத் திட் டம் தயாரித்துக் கொடுத்துவிட்டு வந்தார்.

1942-ல் பாதுகாப்புக் கைதி யாக சிறை வைக்கப்பட்டு, சர்க் காரின் பணப் பெருக்கக் கொள் கையைக் கண்டித்து எழுதியதற் காக 1943-ல் இரண்டு வருஷச் சிறைத் தண்டனை விதிக்கப்பட் டார்.

இவர் எழுதிய புத்தகங்க ளாவன :

(1) மதார் தாலுகாவின் நிலைமை.

(2) பொது நாணயமாற்றும் நம் வறுமையும்.

(3) நிவாரண வேலையை நிறை வேற்றிய ஸ்தாபனமும் அதன் கணக்குகளும்.

(4) கிராம இயக்கம்.

(5) ஏசுநாதர் போதனை.

(6) கிறிஸ்தவமதம் — அதன் பொருளாதாரமும், வாழ்க்கை முறையும்.

(7) காகிதப் பணப் பெருக்கம். அதன் காரணங்களும், நிவா ரணங்களும்.

(8) நிரந்தரப் பொருளாதார அமைப்பு.

இப்போது குமரப்பா "கிராம உத்யோக்' என்ற மாதப் பத்தி ரிகையின் ஆசிரியராக இருக் கிறார்.

இது வார்தாவி லிருந்து, அகில இந்தியக் கிராமக் கைத் தொழிற் சங்கத்தினரால் வெளியிடம் பெறும் பத்திரிகையாகும்.

*

கண் துடைக்கும் வேலை

ஒரு தினசரிப் பத்திரிகையில் விளம்பரம் ஒன்று கொடுக்க வென்று ஒருவர் வந்திருந்தார். தம் மனைவியின் செல்லப் பூனை காணமற்போய் விட்டதென்றும், அதைக் கண்டுபிடித்துத் திருப்பிக் கொண்டுதருபவருக்கு 25-பவுன் சம்மானம் அளிப்பதாயும் சொன்னார் அவர்.

"ஏ, அப்பா! ஒரு பூனைக்காக இவ்வளவு பணம் தருவது ஆச் சரியமா யிருக்கிறதே!" என்றார் விளம்பரக் குமாஸ்தா.

"இந்தப் பூனை விஷயம் வேறு. நான்தான் அதைக் குளத்தில் அமுக்கிக் கொன்றுவிட்டேனே!" என்றார் வந்த மனிதர்!

—ஸண்டே டெஸ்பாச்

இயந்திரத் தொழில் வளர்ச்சி

எம். இஸ்மத்பாஷா

இருநூறு வருஷ பிரிட்டிஷ் ஆட்சியில் நம் நாடு சொல்லொணாத் துயருக்கு ஆளாகியிருக்கிறது. பிரிட்டிஷ் தொழிற்சாலைப் பண்டங்களுக்குச் சந்தையாக நம் நாடு பயன்பட்டு வந்ததால், நம் நாட்டிலேயே எவ்வித இயந்திரத் தொழிலும் அபிவிருத்திடையாமல் தடுப்பதே பிரிட்டனின் கொள்கை. யுத்த காலத்தில் மிகவும் அவசியமாக விமானம், மோட்டார் கார், ஆயுதங்கள் போன்றவை தேவைப்பட்ட போதிலும், அவற்றை நம் நாட்டில் உற்பத்தி செய்வதற்கு பிரிட்டன் நமக்கு அனுமதி தரவில்லை. ஓட்டை உடைசல்களைச் செப்பனிடுவதற்கும், குண்டூசி, குதிரை லாடம், சிப்பாய் உடுப்பு போன்றவற்றை உற்பத்தி செய்வதற்குமே அனுமதி கொடுத்தது. இவ்விதம், நம் நாட்டில் கன இயந்திரத் தொழில்கள் விரைவாக வளர்ச்சியடைவதற்கு ஏற்பட்ட சந்தர்ப்பத்தையும் பிரிட்டன் பறித்தது.

ஆனால், ஏற்கனவே யுத்தத்துக்கு முன்பு நம் நாட்டில் அபிவிருத்தி யடைந்திருந்த சிற்சில சிறிய தொழிற்சாலைகளிலிருந்து முடிந்த அளவுக்கு அதிகமாக யுத்த காரியங்களுக்காகப் பண்டங்களைச் சுரண்டிச் செல்லுவதென்று தீர்மானித்தது. இந்தக் கொள்கையின்படி ரொக்கமாகக் காசு கொடுக்காமல், வெறும் ஸ்டர்லிங் கடன் பத்திரங்களை எழுதிக் கொடுத்துவிட்டு சுமார் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள பண்டங்களை யுத்த காலத்தில் மூட்டை கட்டிச்சென்றது. லக்ஷக் கணக்கான ரூபாய்க்கு இந்தியத் தொழிற்சாலைகளுக்கு இந்திய சர்க்கார் கொடுத்த யுத்த ஆர்டர்களை உடனுக்குடன் பூர்த்தி செய்வதற்கு, ஏற்கனவே இருந்து வந்த இயந்திரங்களையே முன்னைவிட அதிக நேரம் ஓட்டியும், முன்னைவிட அதிக ஆட்களை அமர்த்தியும் தொழிற்சாலை முதலாளிகள் உற்பத்தியைப் பெருக்கினார்கள். இப்போது யுத்தத் ஆர்டர்கள் நின்ற பிறகு, அந்தத் தொழிற்சாலைகள் இயந்திர சாதனங்களின் அதிகரிப்பால் விஸ்தரிக்கப் படாமலிருக்கும் போது, உபரியாக வேலைக் கமர்த்தப் பட்டவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமானால், உடனடியாகப் புதிய தொழிற்சாலைகளை நிர்மாணிக்க வேண்டும். மேலும், இருநூறு வருட பிரிட்டிஷ் ஆட்சியினால் ஏற்கனவே வேலை யில்லாமல் திண்டாடும் சகலருக்கும் வேலை கொடுப்பதோடு, எந்த அந்நிய நாட்டின் பிடிப்புக்கும் நம் நாடு உட்பட்டுக் கிடக்காதவாறு உத்திரவாதம்தேட வேண்டுமானால், உடனடியாக நாட்டை வெகு விரைவில் இயந்திரத் தொழில் மயமாக்க வேண்டும்.

இந்தியாவின் தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு, பண்டித நேரு தலைமையில் தொழில் திட்டக் கமிட்டி தயாரித்த திட்டம் சுபிட்சம் அளிக்கக்கூடிய திட்டமாக இருந்தது. ஆனால், இன்று இந்திய முதலாளிகள், பிரிட்டிஷ் முதலாளிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, நேரு திட்டத்தையே தூக்கி எறியச் சதி செய்வதால் ஏற்படும் ஆபத்துக்களையும் அவைகளை நிவர்த்திக்கும் மார்க்கங்களையும் ஆசிரியர் கூறுகிறார்.

இந்த அவசியத்தை எல்லோரும் உணருகிறார்கள். ஆனால் எவ்விதம் வெகு விரைவில் இக் காரியத்தைச் சாதிப்பது என்பதிலேயே இன்று தகராறு ஏற்படுகிறது. கையில் கோடி கோடியாக யுத்த காலத்தில் பணம் சம்பாதித்து வைத்திருக்கும் ஆலை முதலாளிகள் அபிப்பிராயமும் கடந்த 60 வருடங்களாக நாட்டின் சுதந்தரத்துக்காகப் போராடி வருகிற காங்கிரஸ் மக்களின் அபிப்பிராயமும் இன்று முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவை.

1931-ம் வருடத்தில் கராச்சியில் கூடியபோது காங்கிரஸ் மகாசபை இதைப் பற்றித் திட்டவட்டமாகத் தன் கருத்தை வெளியிட்டது. தேசத்தின் பாதுகாப்புக்கு அத்தியாவசியமான விமானம், கப்பல், இராணுவ தளவாடங்கள், இரயில்வே போக்கு வரத்து, நிலக்கரி, மின்சார உற்பத்தி முதலிய இயந்திரத் தொழில்களையும், தொழிற் சாலைகளுக்கு வேண்டியிருக்கும் இயந்திர சாதனங்களை உற்பத்தி செய்கிற தொழில்களையும், நாட்டில் சிருஷ்டிக்க வேண்டும் என்றும், அவற்றை அபிவிருத்தி செய்யும் பொறுப்பைத் தனி நபர்களின் கையில் விட்டுவிடக் கூடாது என்றும் கூறிற்று. பண்டித நேருவைத் தலைவராகக் கொண்ட தேசியத் தொழில் திட்டக் கமிட்டி 1939—40-ல் இந்தக் கருத்தை மீண்டும் ஊர்ஜிதம் செய்தது. அக் கமிட்டி திட்டம் போட்ட இயந்திரத் தொழில் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான நான்கு தேவைகளைக் கீழ்க் கண்டவாறு வகுத்துக் கூறிற்று.

(1) நாட்டுக்குப் பரிபூரண சுதந்தரமும் சுயேச்சையும் வேண்டும். வெளி நாட்டு ஆதிக்கங்கள் யாவும் பரிபூரணமாக ஒழிக்கப்பட வேண்டும். (2) சில குறிப்பிட்ட ஜீவாதாரமான இயந்திரத் தொழில்களில் ஏகபோகமாக ஆதிக்கம் செலுத்துகிற அந்நிய நாட்டு நலன்களை நம்முடைய அரசாங்கம் வாங்கிக் கொள்ள வேண்டும். மேலும், தேசிய முக்கியத்துவமுள்ள இயந்திரத் தொழில்களை அந்நிய நாட்டினர் தங்களுக்குச் சொந்தமென்று பாத்தியதை பாராட்டக் கூடிய விதத்தில், அத் தொழில்களில் புகுத்த அந்நிய நாட்டு மூலதனம் இங்கு வருவதற்கு நாம் சாதாரணமாக அனுமதிக்கக் கூடாது. (3) கேந்திரமான இயந்திரத் தொழில்களும், தேசப் பாதுகாப்புக்கு அவசியமான தொழில்களும், பொதுஜனப் போக்குவரத்துச் சாதனங்களும் அரசாங்கத்துக்குச் சொந்தமாக்கப்பட வேண்டும். மற்ற முக்கியமான தொழில்களின் அபிவிருத்தியைத் திட்டமிட்டுக் கட்டுப்படுத்தி இடத்துக் கிடம் ஏற்றத் தாழ்வின்றிப் பார்த்துக்கொள்ள வேண்டும். (4) இந்தியாவில் இவ்வளவுக்கு மூலதனம் கிடைக்காவிட்டால், வெளி நாடுகளிலிருந்து மூலதனத்தைக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்படலாம். அப்படி வாங்க வேண்டியிருந்தால், தனி நபர்கள் மூலம் வாங்கக் கூடாது; அரசாங்கமே கடனாக வாங்க வேண்டும்.

இந்தத் திட்டத்தைப் பார்த்த தேச பக்தர்கள் எல்லோரும், நம் நாடு யாருக்கும் அடிமையாகாது என்று சந்தோஷப்பட்டார்கள்.

பண்டித நேருவின் தலைமையில் முன்னைவிட உறுதியாகத் திரண்டார்கள். தேசியத்

சக்தி

மாப்பிள்ளை என்ன விலை?

பார்வதி என்ன பாட்டி, உங்கள் பேத்தியைப் பெண் பார்க்க யாரோ வந்திருந்தாப்லே இருக்கே? கல்யாணம் நிச்சயமாயிடுத்தா?

பாட்டி அந்த வயிற்றெரிச்சலே ஏன் கேக்கறே! என் பேத்தி, பார்க்கறத்துக்கு அழகாயில்லையாம். தலையிலே மயிர் நிறைய இல்லையாம். அதனாலே, பேசினதுக்கு மேலே ஆயிரம் ரூபாய் கூடக் கொடுத்தாத்தான் கல்யாணம் பண்ணிக்கு வாளாம்!

பார்வதி அழகுதான்! இந்த மாதிரி மனுஷாளோடே சம்பந்தம் பண்ணவே கூடாது. நான் சொல்றபடி செய்யுங்கோ. ஒரு பாட்டில் **ஜாப்கோ ஸ்னோவும்** ஒரு பாட்டில் **ஜாப்கோ ஹேர் க்ரோயரும்** வாங்கிக் கொடுத்து உங்கள் பேத்தியைத் தவறாமல் தினம் உபயோகிச்சுண்டு வரச் சொல்லுங்கோ. கொஞ்ச நாளில் அவள் எவ்வளவு லக்ஷணமாகி விடறாள்னு பாருங்கோ!

(ஒரு மாதத்திற்குப் பின்)

பாட்டி அம்மா பார்வதி, நீ சொன்னபடியே என் பேத்தி ஜாப்கோ ஸ்னோவையும் ஹேர் க்ரோயரையும் உபயோகிக்க ஆரம்பித்தாள். கொஞ்ச நாளில் அவள் முகம் நல்ல லக்ஷணமாயிடுத்து. தலையிலே யும் கறுகறுனு மயிர் அடர்த்தியா வளர்ந்துடுத்து. நேத்திக்கி ஒரு பிள்ளையாண்டான் வந்தான். வரதக்ஷிணையே வேண்டாம், பெண்ணைக் கொடுத் தாப் போரும்னு சொல்லிட்டான்! நீ மஹராஜி யாய், பதினாறும் பெத்து...

பார்வதி (சிரித்துக் கொண்டே) பாட்டி, பாட்டி வேண் டாம்! இந்த ரேஷன் காலத்திலே பதினாறு குழந் தைகளை வச்சுண்டு நான் எப்படி சமாளிப்பேன்!

அற்புத மருந்துகள்

மூலிகைகளி லிருந்து தயாரிக்கப் படுபவை. பயனில்லையேல் பணம் வாபஸ்.

செமினியா :—(வைடமின் டானிக்) வீரியத்திற்கும், மன சுறுசுறுப்புக்கும் கை கண்ட மருந்து. கெட்ட ரத்தம், சருமக் கோளாறு, தூக்கமின்மை, மன, தேகச் சோர்வு முதலியவற்றுக் குத் தலை சிறந்த மருந்து. நரை மயிரை யும் நிரந்தரக் கறுப்பாக்குகிறது. ஒரு முழு முறைக்கு ரூ. 7-0-0

குஷ்டம், வெண்குஷ்டம் :— இதை உபயோகித்து ஹக்கீம்ஸ் டாக்டர்கள் நாட்டு வைதியர்களால் குணப்படுத்த முடியாத நோயிலிருந்து சுகம் பெறலாம். விலை ரூ. 3-0-0

நரை மயிர் நிவாரணி :— ஆயுர் வேத முறையால் தயார் செய்யப் பட்ட எங்கள் பிரைனியா வாசனைத் தைலம் உங்கள் நரை மயிருக்கு இயற்கையான கரு வர்ணத்தை அளிக்கிறது. மூளைச் சோர்வை ஓட்டி ஞாபக சக்தியை விருத்தி செய்கிறது. நரை மயிர் கொஞ்சமாக இருந்தால் ரூ. 2-8-0 அதற்கு மேற்பட்டிருந்தால் ரூ. 3-8-0 எல்லாம் நரையாயிருந்தால் ரூ. 5-0-0

N. B. பார்சலில் எங்கள் பார்மஸி யின் பெயர் இல்லா விட்டால் அதை வாங்காதீர்கள்.

பீகார் மாகாண மாஜி மந்திரி குரு ஷலாய்லால் எழுதுகிறார் :

பிரைனியா தலை மயிர்த் தைலத்தை உபயோகித்து, பயனடைந்தேன். குணப்படுத்தும் தன்மை நிறைய இருக்கும் இம் மருந்து மூளையைக் குளிர்ச்சியாக இருக்கச் செய்வதுடன் தலை வலியையும் உடனே போக்கு கிறது. குளித்த பிறகும் கூடத் தைலத்தின் மணம் போவதில்லை. இதைப் போன்ற தைலத்தை நான் பார்த்ததே இல்லை. நரை மயிருக்கு இது மிகவும் உபயோகமானது.

SHRI AYURVEDIC PHARMACY,
P. O. No: 36, Katrisari
(Gaya), India

சக்தி

மாத வெளியீடு

●

தனிப் பிரதி 'தபால்'	0	8
ஆறு மாதம்	3	8
ஒரு வருஷம்	6	0
2 வருஷம்	11	0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப் பிரதி	0	9
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	7	0
2 வருஷம்	13	0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப் பிரதி	0	10
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	8	0
2 வருஷம்	15	0

●

சக்தி காரியாலயம்
சென்னை 14

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

தொழில் திட்டக் கமிட்டி, கேந்திரமான தொழில்களை அபி விருத்திசெய்யும் பொறுப்பை மக்களின் சர்க்காரே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கூறியதற்குக் காரணமில்லாம லில்லை.

சாதாரணமாக, இயந்திரத் தொழில்கள் இரண்டு வகைப் படும். ஒன்று, கன இயந்திரத் தொழில், அல்லது பொருளுற் பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்யும் தொழில். மற்றொன்று இலேசான தொழில், அல்லது அன்றாட உபயோகப் பண்டங் களை உற்பத்தி செய்யும் தொழில். இவ் விரண்டில் கன இயந்திரத் தொழில்களை நிர்மாணித்து அபி விருத்தி செய்வதற்கு ஏராள மாக மூல தனம் வேண்டும். இலேசான இயந்திரத் தொழில் களை வளர்க்க அவ்வளவு பணம் வேண்டியதில்லை. நாடு விரைவில் இயந்திரத் தொழில் மயமாக வேண்டுமானால், இரண்டு தொழில்களும் சேர்ந்தாற்போல் அபிவிருத்தி செய்யப்பட வேண் டும். அரசாங்கமே இந்தப் பொறுப்பை ஏற்று நடத்தினால் தான் இது சாத்தியம்.

இதைவிட்டு, தனி நபர்களிடம் இப்பொறுப்பை விட்டுவிட்டால், அவர்கள் முதலில் கன இயந்திரத் தொழில்களைப் பற்றியே கவலைப் படமாட்டார்கள். இலேசான இயந்திரத் தொழில்களில் கொஞ்சங் கொஞ்சமாக லாபம் சம்பாதித்து, சிறுகச் சிறுக மூல தனத்தைப் பெருக்கி, ஏராளமாக மூலதனம் கையில் குவிந்த பிறகே கன இயந்திரத் தொழில்களை ஆரம்பிப்பதில் கவனம் செலுத்து வார்கள். இதனால் இயந்திரத் தொழில் மயமாக்குவது என்ற வேலை வெகு விரைவில் பூர்த்தி யாகாமல் தடைப்படும்.

மேலும், தேசப்பாதுகாப்புக்கு அவசியமான கேந்திரமான இயந்திரத் தொழில்களைத் தனி நபர்களுடைய கையில் விட்டு விட்டால், அவர்கள் ஒருபோதும் சும்மா யிருக்க மாட்டார்கள். தங்கள் கையிலுள்ள இந்த ஆதிக்க பலத்தைக் காட்டி, நாட்டின் பொதுஜன சர்க்காரை எடுத்ததற்கெல்லாம் பயமுறுத்து வார்கள். அவர்களுடைய சுய நலத்தைப் பாதிக்கக்கூடிய எவ்வித காரியத்தையும் செய்ய முடியாதவாறு அரசாங்கத்தை பொம்மையைப்போல் ஆட்டு வார்கள். இதை உலகில் பல்வேறு நாடுகளில் பண்டித நேரு பார்த் திருக்கிறார்.

ஆகவே, நேருவின் தொழில் திட்டக் கமிட்டியின் வழியைப் பார்த்து தேச பக்தர்கள் குதூ கல மடைந்ததில் ஆச்சரியமில்லை. ஆனால், இன்று இந்திய இயந்திரத் தொழில் முதலாளிகள் இந்தத் திட்டத்தை அடியோடு தகர்த் தெறிகிறார்கள். அவர்கள் கூறுவ தாவது :

"நம் தேசத்தை இயந்திரத் தொழில்மயமாக்கும் வேலையைக் குறைந்த செலவில் செய்து முடிக்க வேண்டும். அந்நியப் பண உதவியையும், வேலை நுட்ப மறிந்த நிபுணர்களின் உதவியை யும் பெறுவதாலேயே இது சாத்தியமாகும்."

இவ்விதம் கூறுவதோடு அவர் கள் நிற்காமல், பிரபல பிரிட்டிஷ் தொழில் முதலாளிகளுடனும், அமெரிக்கத் தொழில் முதலாளிக ளுடனும் தனித் தனியாகப் பல ஒப்பந்தங்களைச் செய்து வருகின் றனர். இந்த ஒப்பந்தங்களில்

காணப்படும் பிரதான அம்சங்களாவன: (1) இந்தியாவில் ஆரம்பிக்கப்படும் புதிய தொழிற் சாலைகளில் பிரிட்டிஷாரும் மூலதனம் போடுவார்கள் (2) பிரிட்டிஷார் பொறுப்பில் அந்தத் தொழில்களை அபிவிருத்தி செய்யும் வேலை விடப்படும். (3) பிரிட்டிஷ் நிபுணர்கள் உதவி செய்வார்கள். (4) கம்பெனியின் நிர்வாகத்திலும், லாபத்திலும் பிரிட்டிஷாருக்கு நல்ல பங்கு உண்டு.

மேலும், இந்த ஒப்பந்தங்களை நன்கு ஆராய்ந்து பார்த்தால், மோட்டார் கார், விமானம், கப்பல், ரஸாயன மருந்து வகைகள் போன்ற முக்கியமானவற்றின் உற்பத்தியை உண்மையில் எப்போது இந்தியாவில் ஆரம்பிப்பது என்பதை நிச்சயிக்கும் அதிகாரம் கூட பிரிட்டிஷார் கையிலேயே விடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. தங்கள் பண்டங்களுக்கு இந்தியாவை வெறும் சந்தையாகப் பயன்படுத்துவதிலேயே சிரத்தை கொண்டுள்ள பிரிட்டிஷார், அவற்றின் உற்பத்தியை இந்தியாவிலேயே ஆரம்பிக்கும் தேதியை முடிந்த அளவுக்கு அதிக காலத்துக்கு ஒத்திப் போடுவதிலேயே கவனம் செலுத்துகின்றனர் என்றும் தெரிகிறது.

இவ்விதம், பொருளாதாரத்தில் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள இயந்திர ஆலை முதலாளிகள் பண்டித நேரு சந்தேகப்பட்டது போலவே இப்போது இடைக்கால சர்க்காரின் முற்போக்கான காரியங்களை எதிர்ப்பதாகத் தெரிகிறது. உதாரணமாக, தென் ஆப்பிரிக்காவில் இந்தியர் படும் அவதியைப் பற்றி ஐக்கிய தேச சபையில் சோவியத் யூனியனுடன் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் சேர்ந்து நின்று போராடியதை—பண்டித நேருவின் கொள்கையை—அவர்கள் ஆக்ஷேபிக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. பிரிட்டனுடன் அரசியலிலும் இராணுவத்திலும்கூட ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதாகச் சொல்லப்படுகிறது.

இந்தப் போக்கு, இந்திய இயந்திரத் தொழில் வெளிநாட்டார் ஆதிக்கமின்றி சுயேச்சையாக விரைவில் அபிவிருத்தி யாவதற்குப் பதில், விரைவான அபிவிருத்தியைத் தடுக்கும். பண்டித நேருவின் தேசியத் தொழில் திட்டக் கமிட்டி காட்டியுள்ள வழியை மீண்டும் தேசம் ஊர்ஜிதம் செய்ய வேண்டியது அவசியம். அப்போதுதான் எல்லோருக்கும் வேலை, உணவு, உடை, என்ற தேசிய இயக்கத்தின் லக்ஷியத்தை விரைவில் அடைய முடியும்.

✲

இது எப்படி?

இப்போது மிகப் பிரபலமாயிருக்கும் ஒரு சினிமாக் கதாசிரியர் 1929-ல் தமக்கு வந்த ஒரு கடிதத்தை இப்போதும் மிக அருமையாக வைத்திருக்கிறார். இவருடைய சிறு கதை யொன்றைத் திருப்பியனுப்பிய ஆசிரியர், அத்துடன் கூடவே வைத்து அனுப்பியிருந்த கடிதம்தான் அது. கீழ்க்கண்டபடி எழுதப்பட்டிருக்கிறது அதில்:

"தங்களுடைய சிறு கதையின் கருத்து மிகவும் நன்றாயிருக்கிறது. ஆனால், இது ஏற்கெனவே வந்ததாக இல்லையே!"

—பேஜண்ட்

சிரிக்கத் தெரியுமா —சிரிக்க

●

ரேனு ஈ. ராபின்ஸன்

மனப்பூர்வமான சிரிப்பு; நாகரிகச் சிரிப்பு அல்ல, இக்காலத்தில் வேண்டியது. உதடு பிதுங்க வாய் விரியச் சிரிப்பது பண்டைக் காலத்துக் குரியதென்று எண்ணிவிடாதீர்கள். அப்படி அல்ல; முற்காலத்தைவிட இக் காலத்தில்தான் உண்மையான சிரிப்புச் சிரிக்கத் தெரியாதவர்கள் சிரித்துப் பழக வேண்டும். இப்போது மக்கள் சிரிப்பது வெறும் உதட்டுச் சிரிப்புத்தான். அதைச் சிரிப்பென்றே சொல்லக்கூடாது. இருதயத்தி லிருந்து மனம் குளிர்ந்து சிரிக்கும் சிரிப்பை நாம் இப்போது அவ்வளவாய்க் கேட்பதும் இல்லை, பார்ப்பதும் இல்லை. ஆனல், கட்டாயப்படுத்தி வரும் சிரிப்பு, கள்ளச் சிரிப்பு, 'கொக் கொக்'கென வெறும் சத்தம் கேட்கும் சிரிப்பு, உதட்டுச் சிரிப்பு இவைகள்தான் நாம் சாதாரணமாய்க் கேட்கிறோம்.

நம் சொந்த உடல் நலனைக் கருதியாவது நாம் ஒவ்வொருவரும் எப்படிச் சிரிக்கவேண்டுமென்று அறிவது அவசியம். உடலுக்கே சிரிப்பு அவசியம். சிரிப்பு ஒரே சமயத்தில் பல தசைகளுக்கு அப்பியாசம் கொடுக்கிறது. சிரிப்பு இல்லாவிட்டால் அப்படிப்பட்ட தசைகளுக்கு அப்பியாசமே இராது. விசேஷமாக முகத்திலேயுள்ள தசைகளுக்குச் சிரிப்பைத் தவிர வேறெந்த உடற் பயிற்சியும் செய்ய முடியாது. சிரிப்பு இரத்த ஓட்டத்தைக் கிண்டிவிட்டு வேகமாய் ஓடச் செய்கிறது. அது தொண்டைச் சதைகளை இளகச் செய்து, தொண்டையையும் சத்தத்தையும் நல்ல நிலைமைக்குக் கொண்டுவருகிறது. சுவாசக் குழாய்களுக்கும் அதிக நன்மையைக் கொண்டுவருகிறதென்று கூறப்படுகிறது.

சிரிப்பு ஆகாரத்தை ஜீரணிப்பதற்கு மிகுந்த உதவி அளிக்கிறது. ஆகையால், ஆகாரம் உட்கொள்ளும்பொழுது சந்தோஷமாகப் பேசிச் சிரித்துச் சாப்பிடுங்கள். உங்கள் பிள்ளைகளும் அப்படியே செய்யட்டும். இருபதாம் நூற்ருண்டின் நாகரிகம் நம்மை மனிதர்களாக அல்ல, வேறு பிராணிகளாக மாற்றிவிட்டது. துக்கம் நிறைந்த, பாடனுபவிக்கிற, கவலையுள்ள, அதிருப்தியான, வியாதி நிறைந்த பிராணிகளாகி விட்டோம். உண்மையான சந்தோஷத்தைக் கண்டடையவும், இழந்துபோன சுகத்தை மறுபடியும புதுப்பிக்கவும், அல்லது இருக்கும் சுகத்தைப் பாதுகாக்கவும் கொஞ்ச நேரமாவது நமக்கு இளைப்பாறத் தெரிய வேண்டும்.

சிரிப்பும் இளைப்பாறுதலுƒ இரட்டைப் பிள்ளைகள். முகத்திலுள்ள தசைகளை இளகவிடாமல், கட்டியாக இறுக்கி வைத்துக் கொண்டு சிரித்துப் பாருங்கள். உதடுகள்தான் ஒரு முழ நீட்டத்திற்குப் பிதுங்கும். சிரிப்புக்கு இறுக்கம் உதவாது; தளர்ப்பு வேண்டும். தளர்ப்பு, சிரிப்பை உண்டாக்க ஏதுவாகிறது.

கலகலப்பான சிரிப்பு கள்ள மற்ற மனத் தூய்மையின் வெளியீடு. தவிரவும் அது உடலுக்கு ஆரோக்கியம் தரும் மருந்தாகவும் இருக்கிறது. சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் சிரிக்க வேண்டும், என்று உபதேசிக்கிருர் ஆசிரியர். நல்வழியிலிருந்து.

மன மகிழ்ச்சி ஒரு மருந்துதான்; இல்லையென்று எண்ணிவிடாதீர்கள். மகிழ்ச்சிக்கும் சிரிப்புக்கும் கவலைக்கும் சம்பந்தம் ஒன்றுமே இல்லை. அவைகள் நேர்மாறானவை. மகிழ்ச்சியும் சிரிப்பும் நம் அன்றாடப் பாரங்களை எளிதாக்குவதோடு, கஷ்டநஷ்டங்களிலும் துக்கங்களிலும் சொல்லொணாச் சந்தோஷத்தையும் கொண்டுவருகின்றன.

துன்பங்கள், சஞ்சலங்கள் சேர்ந்து நம் சிரிப்புத் தசைகளை எல்லாம் இறுகக் கட்டியிருக்கும் போது, சிரிப்பு எப்படித் தோன்றும் என்று அநேகருக்குத் தெரிவதில்லை. அவைகள் மத்தியிலும் நாம் சிரிக்க வேண்டும். சிரிக்கத் தெரியாவிட்டால் சிரிக்கப் பழக வேண்டும். சிரிப்பு வராவிட்டாலும் கட்டாயப்படுத்திச் சிரித்துப் பாருங்கள். இப்படி வராத சிரிப்பையும் வந்த பாவனையில் பல தினங்கள் சிரித்து வந்ததால் நாம் சிரிக்கக் கற்றுவிட்டோம். பின் நம் சிரிப்பு இயற்கையாகவே வந்துவிடும்; மனம் பூரித்த சிரிப்பாகவும் இருக்கும். எப்போதும் சிரிப்பாய்ச், சந்தோஷமாய் இருப்பவர்களைக் கவனியுங்கள், அப்படி என் சிரிக்கிறார்கள், எப்படிச் சிரிக்கிறார்கள் என்பதைக் கேட்டுப் பாருங்கள். அந்நியரிடம் கேட்கக் கூச்சமாயிருந்தால் உங்கள் சொந்தச் சிநேகிதரிடம் கேட்டுப் பாருங்கள். அவர்களிடமிருந்து நீங்கள் எப்படிச் சிரிக்கலாம் என்று படித்துக்கொள்ளலாம்.

பிள்ளைகள் சிரிப்பதை உற்றுப் பாருங்கள். அவர்கள் சிரிக்கும் சிரிப்பை மனித வார்த்தைகளால் விஸ்தரிக்க முடியாது. கவலையற்ற சிரிப்பு; சுகமான சிரிப்பு; கண்டதெல்லாம் சிரிப்பு; கேட்டதெல்லாம் சிரிப்பு; வயிறு குலுங்கக் குலுங்கச் சிரிப்பு. நாம் ஏன் அப்படிச் சிரிக்கக்கூடாது? நாம் தெருவிலிருக்கும் பிள்ளைகளோடு சும்மா சிரிப்போம். அப்படிச் செய்தால் என்ன நடக்கிறது என்று பார்ப்போம். நம் முகத்தில் காணும் அநேகக் கவலைக் கோடுகள், துக்கக் கோடுகள் எல்லாம் மறைந்தோடிப்போம். சிறு பிள்ளைகளின் சிரிப்பில் ஒரு தனி அழகு இருக்கிறது.

சிரிப்பு ஒரு பெரிய தொத்து நோய். துன்பங்கள் மத்தியில் சந்தோஷச் சிரிப்புச் சிரியுங்கள்; கவலைக் கண்ணீர் வேளைகளில் மன மகிழ்ச்சியாக இருந்து பாருங்கள். அப்படி இருக்கும் போது, நீங்கள் உங்களைப் பார்க்கிற எல்லோருக்கும் ஆனந்தம் கொண்டுவருவதோடு, சந்தோஷத்தையும் சிரிப்பையும் அவர்கள் ஜீவியத்தில் கொண்டுவருவீர்கள்.

சிரிப்பு உங்களைக் கிழவர்களாக்கிவிடாது. சிரிக்கச் சிரிக்க யௌவனம் ஆகலாம். சிரிப்பு வாலிபத்திற்கு அடையாளம். சிரிப்பு நம் உடல் நலனை மட்டும் பொறுத்தது அல்ல; நம் மன நிலைமைகளையும் பாதிக்கும். சிரிக்க முடியாவிட்டால் கிழ வயது உங்களை மேலிட்டதென்று அறிய வேண்டும். கவலையைப் போக்குவது சிரிப்புத்தான். ஆகையால் சும்மா, வாய்விட்டுச் சிரியுங்கள். அது நன்மையைத் தரும்.

✲

வித்தியாசம்

"எண்ணங்களைச் சம்பவங்களாக்குவது அரசியல்; சம்பவங்களை எண்ணங்களாக்குவது இலக்கியம்"

—ஓர் அறிஞன்

கண்ணைக் கவரும் அழகான
பட்டுப் புடவைகள்
ப்ரொகேட்கள்,
ப்ளவுஸ்கள்,
விவாகத்திற்குகந்த
உயரிய உடைகள்
எல்லா வகைகளுக்கும்
பெயர் பெற்ற இடம்

★

கேவல்ராம்ஸ்
ஓயிட் ஷாப்
9—13, ராட்டன் பஜார்
சென்னை

★

போன்: 2776
தந்தி: "LONGSTAND."

KEWALRAM'S

கிளைகள்:

சாரிங்கிராஸ் ... ஊட்டி
கிங்ஸ்வே ... செகந்திராபாத்
கேவல் ஸன்ஸ் ... லாகூர்

ஈரல் குலை கட்டி வியாதிகள் குணப்படுத்த முடியும்.

ஈரல் குலைகட்டி வியாதிகளைக் கண்டு பய ப்படக் கூடிய காலம் போய்விட்டது. வியாதி மிகவும் முற்றிவிட்டாலொழிய ஓர் அரிய உயிரைக் காப்பாற்ற முடியும்.

கீழ்கண்ட அறிகுறிகள் சந்தேகிக்க கூடியவை

அடிக்கடி ஜ்ரம் ஏற் படுதல், மலச்சிக்கல், அதிக மலப்போக்கு, வாந்தி, பசியின்மை, வயறு பொருமல், சோர் ந்து இருத்தல், அடிக்கடி சிறு சிறுத்தல்.

ஆரம்பத்திலேயே ஜாக்கிரதை வேண்டும்

அசட்டை செய்தோ, சரியான சிகிச் சைத் தவறினாலோ ஆபத்தாய் முடியும்.

ஜம்மியின்

லிவர்க்யூர்

உபயோகியுங்கள்

குழந்தையின், ஈரல் குலைக்கட்டிக்கு ஜம்மியின் லிவர்க்யூர் உபயோகியுங்கள். எல்லா விடங்களிலும் விற்கப்படுகின்றன

ஜம்மி வெங்கிட்டரமணய்யா & சன்ஸ்

மைலாபூர் — மதராஸ்.

கிளைகள்:— பம்பாய், கல்கத்தா, டில்லி, திருச்சிராப்பள்ளி, பெங்களூர், கும்பகோணம்.

அவசிய குடும்ப-சஞ்சீவி

333

ஸான்டலக்ஸ்

நறுமண சரும-ரக்ஷணி

PUBLICITY: UNICON, MADRAS.

ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட்ஸ்

'சத்வைத்தியசாலை' நஞ்சன்கூடு

ஜ்வரேக்

எவ்வித ஜ்வரங்களுக்கும்

குழந்தைகளுக்கு

→ **காஸ்மஸ்** கஸ்தூரி மாத்திரை

→ **கர்ஜன்** கோரோஜனை மாத்திரை

→ **பாலக்ஸ்** பேதியாக மாத்திரை

கூலெக்ஸ்

உஷ்ண சமன ஸ்நான தைலம்

பல் உபாதைகளை கண்டிக்க

I.D.L. மெடிகேடட்

நஞ்சன்கூடு பல்பொடி

கூந்தல் வளர்ச்சிக்கு

நீங்களே தைலம் செய்ய

காஷ்மீர்குஸும்

60 வருஷ

நம்பிக்கை பெற்ற

ஓர் சிக்கன முறை

ஆதித்யா ஏஜன்ஸீஸ்

54, பந்தர் தெரு :: மதராஸ்.

சிறந்த மைசூர் ஊதுவத்திகள்

பிரேமலீலா

அகர், ஜவ்வாது, ஜெயலக்ஷ்மி

சோல் ஏஜண்டுகள் :

யுனைடெட் கன்ஸர்ன்

54, பந்தர் தெரு : மதராஸ்

மதுரை: 42, தெற்காவணி மூலவீதி

கோவை: 234, ராஜா தெரு

பம்பாய்: 277, தேவதார் ரோடு, மாடுங்கா

தேனீக்கள் பாஷை

●

"கானடா"

தேனீக்கள் அவைகளுக்குள் பேசிக் கொள்கின்றனவா? நெடு நாட்களாகவே இந்தக் கேள்விக்குப் பதில் காண விஞ்ஞானம் முயற்சி செய்து வந்தது. ஏனெனில் கட்டுப்பாடுடன் வேலை செய்யும் இந்த ஜந்துக்கள் அவசியமான செய்திகளைத் தங்களுக்குள் பரிமாறிக்கொள்ள ஒரு வழியைக் கையாள வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. ஆஸ்திரியா நாட்டு விஞ்ஞானியாகிய புரொபசர் கே. வி. பிரிச் இந்த விஷயத்தில் ஈடுபட்டு ஒரு முடிவு காண்பதற்குமுன் தேனீக்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளுகின்றன என்பதற்கு அத்தாட்சி ஒன்றும் இல்லாமலிருந்தது.

இன்று தேனீக்களுக்கென்று ஒரு தனி பாஷை உண்டு என்று டாக்டர் பிரிச் கண்டுபிடித்துள்ளார். ஜாடைகள், ஆட்டங்கள் முதலியவைகளின் மூலம் தேனீக்கள் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று பேச முடிகிறது என்று கண்டுபிடித்துள்ளார் விஞ்ஞானி பிரிச்.

ஒரு தேனீ புதிய புஷ்பங்கள் இருக்கும் இடத்திலிருந்து தேன் குடித்துத் திரும்பும் பொழுது, மற்றத் தேனீக்களுக்கும் தான் புதிதாகக் கண்ட புஷ்பக்கொத்து எங்கே இருக்கிறது, எந்தத் திக்கில் இருக்கிறது, தேன் கூட்டிலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்பனவற்றைத் தெளிவாகக் கூறுகிறது. மற்றத் தேனீக்களும் அந்த அடையாளங்களைக்கொண்டு புஷ்பம் இருக்கும் இடத்திற்குப் போக முடிகிறது என்று அறிவிக்கிறார் பிரிச்.

இந்தப் புது மாதிரியான தேனீ பாஷை நாம் இதுவரையில் புரிந்துகொள்ளாத பல புதுமைகளை விளக்குகிறது......

ஆராய்ச்சியாளர்கள் தேன் நிறைந்த பல பூக்களை, மலர்கள் இல்லாத ஒரு தோட்டத்தில் வைத்தார்கள். பூக்களை வைத்த ஒரு மணி நேரத்திற்கெல்லாம், கால் மைலுக்கு அப்பால் உள்ள தேன் கூட்டிலுள்ள ஒரு தேனீ புஷ்பங்களைத் தேடிப் பறந்து வரும்பொழுது இந்தப் பூக்களைக் கண்டுவிடுகிறது. உடனே இந்தத் தேனீ நேரே தேன் கூட்டிற்குச் சென்று மற்றச் சகாக்களையும் உடன் அழைத்துக்கொண்டு நேரே தங்குதடையில்லாமல் பூக்கள் இருக்கும் இடத்திற்கு வந்துசேருகிறது.

தேனீ ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பல நிபுணர்கள் முதல் தேனீதான் மற்றவைகளை அழைத்துச் சென்றது என்று கருதினார்கள். அப்படி அல்ல, என்று டாக்டர் பிரிச் மறுத்தார். எப்படி என்றால், முதல் தேனீ மீது ஒரு வர்ணத்தைப் பூசிவிட்டார்; மற்றத் தேனீக்கள் வந்தபொழுது முதலில் வந்த, வர்ணம் பூசப்பெற்ற தேனீ வரவில்லை.

தேன் கூட்டிற்கு வெளியே நாம் காண்பனவற்றை வைத்துக்கொண்டு நம்மால் ஒன்றையும் கண்டுபிடித்துவிட முடியாது.

மனிதர்களுக்குப் பேசத்தெரியும்; மிருகங்களுக்கும் மற்றப் பிராணிகளுக்கும் பேசத் தெரியாது; கத்தத்தான் தெரியும், என்ற வெகுஜன நம்பிக்கையை இந்தக் கட்டுரை பொய்ப்பிக்கிறது. தேனீக்கள் பேசுகின்றன. எப்படிப் பேசுகின்றன என்பதைத் தெரிவிக்கிறார் "கானடா."

தேனைக் குடித்து வருகிற சுறு சுறுப்பான தேனீ நேரே கூட்டிற்குள் சென்று சிறிதும் தாமதிக்காமல் ஆவன செய்ய வேண்டுவதில் ஊக்கம் கொள்ளுகின்றது என்று காரணம் காண்பித்தார் பிரிச். தேன் கூட்டுக்குள் ஒருவித கூட்டம் நடைபெற வேண்டும்; விசாரணைக் குழு ஒன்றும் வேலை செய்யும். அந்தக் குழுவினிடத்தில் ஒவ்வொரு தேனீயும் தாக்கல் கொடுக்க வேண்டும்.

இந்தப் புதிரை விளக்கவேண்டுமல்லவா? அதற்காகக் கண்ணாடியால் ஒரு தேன்கூடு கட்டினார். "இந்த அதிசயப் பிராணிகள் தாங்கள் எங்கிருந்து உணவைத் தேடிக்கொண்டு வந்தன என்பதை மற்றவைகளிடம் சொல்ல முடிகிறது என்பதை நான் கண்டுபிடித்தேன். இந்த நூதனச் செய்தி அறிவிப்பு எவ்வளவு சரியாக, தவறில்லாமல் இருக்கிறது என்பதை மனிதர்கள் உணர முடியாது" என்று சொல்லுகிறார் பிரிச்.

வெளியே சென்று தேன் கொண்டுவந்த தேனீ, கூட்டுக்குள் சென்றவுடன் நாட்டியம் ஆடத் தொடங்குகிறது. இந்த நடனத்தை மற்றத் தேனீக்கள் ஆவலோடு கவனிக்கின்றன. "இரண்டு விதமான நடனங்களை நான் பார்த்தேன்; முதல் நடனத்தில், தேனீ இடது புறமும் வலது புறமுமாக வட்டமடிக்கின்றது. சில சமயங்களில் முழு வட்டம் போடுகிறது; ஆனாலும், பாதியோ முக்கால் வட்டமோ சென்ற பிறகு மீண்டும் திசையை மாற்றிச் சுற்றுகிறது.

இரண்டாவது நடனத்தில் ஓர் அரை வட்டத்தில் ஓடுகிறது; பிறகு தான் முதலில் இருந்த இடத்துக்கு ஓடிவருகிறது. வரும் பொழுது தனது பின் பகுதியை 'ரம்பா' நாட்டியத்தில் ஆட்டுவது போல ஆட்டுகிறது. அம்மாதிரியே தன் பின் புறத்தை ஆட்டிக்கொண்டு வேறு திக்கில் ஓடுகிறது.

கால் அசைவுகளையும், மற்றும் பல வேறுபாடுகளையும் கொண்ட மேற்சொன்ன இரண்டு நடனங்களின் மூலம்தான் தேனீக்கள் பேசிக்கொள்கின்றன."

தங்களுக்குப் பொழுது போக்குக்காகத்தேனீக்கள் பேசுகின்றன என்று நாம் எண்ணக்கூடாது. இம்மாதிரி அங்க சேஷ்டைகள் எல்லாம் உணர்ச்சியை வெளிக் காட்டும் சாதனங்கள்; அதற்கேற்ப மற்றவைகளும் அதற்குப் பதில் கொடுக்கின்றன. தங்களுடைய் கூடு நன்ருக அமைந்தால் தாங்களும் வாழலாம். அந்தக் கூட்டின் நன்மையைப் பற்றிய விஷயங்களைத் தங்களுக்குள் அறிவித்துக் கொள்ளத்தான் அங்க சேஷ்டைகள் பயன்படுகின்றன.

சக்கர நடனத்தாலும் ரம்பா ஆட்டத்தாலும் உணவு கிடைக்கும் இடத்தின் தூரத்தை அறிவிக்கிறது. உணவு கிடைக்கும் இடம் சுமார் 50 கஜத்துக்குள்ளாக இருந்தால் சக்கர நடனம் ஆடி அறிவுறுத்துகிறது. அதற்கு மேற்பட்ட தூரத்தில் உணவு இருந்தால் சதுர நடனம் ஆடி அறியச் செய்கிறது. சக்கர நடனத்தின் மூலம் 'தேன் கொண்டு வருவது எவ்வளவு சுலபம்; சும்மா இப்படிப் பறந்தால் போதும்;தேன் கூட்டுக்குப் பக்கத்தில்தான் பூக்கள் இருக்கின்றன' என்று தனது சகாக்களுக்கு உணர்த்துகிறது. மற்ற நடனங்களால் தூரத்தில் உள்ள

பூக்களைக் குறிக்கிறது. மற்றும் பலஜாடைகளால் தூரம் எவ்வளவு என்பதையும் குறிக்கிறது.

தூரத்தைத் தன்னுடைய வாலை ஆட்டுவதால் அறிவிக்கின்றது. பின்புறத்தை ரம்பா நடனத்தில் ஆட்டுவதுபோல் வெட்டி வெட்டி ஆட்டுவதால் ஒவ்வொரு முறை பின்புறம் ஆடும்பொழுது உணவுக்காக, தேனீக்களின் கால, தூர அளவுப் பிரகாரம் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும் என்று அறிந்துகொள்ளுகின்றன. பிரிச், தேனீ ஒவ்வொரு முறையும் வாலை ஆட்டும் பொழுது கடிகாரத்தின் துணை கொண்டு அந்தக் கால அளவை அளவிட்டறிந்தார். அந்தக் கால அளவு சிறிதும் மாறுபடாமல் ஒவ்வொரு முறையும் சரியாக அமைகிறது. ஆகவே, இந்த நடனத்தின் மூலம் தூரத்தைச் சரியாக அளவிட்டுக் கூறுகிறது தேனீ.

சரிதான்; எந்தத் திக்கை நோக்கிப் பறக்க வேண்டும் என்பதைத் தேனீக்கள் எப்படி அறிகின்றன? தேனீக்கள் சூரியனைத் தான் திசைகாட்டும் கருவியாக உபயோகிக்கின்றன என்று கண்டுள்ளார் பிரிச். சூரியன் இருக்கும் இடத்தை நடனத்தின் மூலம் காட்டுகிறது. சில சமயங்களில் ஆடிக்கொண்டிருக்கும் பொழுது திடீரென்று ஆட்டத்தை விட்டு நேராக ஓடுகிறது. இதன் மூலம் திசைகளை அறிந்து கொள்ளுகின்றன தேனீக்கள்.

மோப்பம் பிடிப்பதன் மூலமும் தேனீக்கள் தங்களுக்குள் விஷயத்தை விளக்கிக் கொள்ளுகின்றன. இதை எப்படிக் கண்டார் என்றால், ஒரு சமயம் செயற்கைப் பூக்களில் ஒருவித வாசனை சர்பத்தை ஊற்றி வைத்திருந்தார். ஒரு தேனீ இதைக் குடித்துவிட்டுக் கூட்டுக்குள் சென்றதும், அந்த வாசனை சர்பத்தை எடுத்துவிட்டு, வெறும் சர்க்கரைப்பாகை ஊற்றி வைத்துச் சில பூக்களையும் சர்பத் இல்லாமல் அதே வாசனையை சிலவற்றிலும் வைத்து விட்டார்.

என்ன நடந்தது தெரியுமா? நேரே சர்பத் இல்லாமல் வாசனை கலந்து வைத்திருந்த பூக்களுக்குப் பறந்து சென்றன; ஆனால், அங்கே தேன் இல்லாமல் ஏமாற்றமடைந்தன. சர்பத்துள்ள, வாசனை இல்லாத பூக்களை அவைகள் நாடவில்லை.

பிராணிகளைப் பற்றிய ஆராய்ச்சிகளிலேயே இது மிகவும் அதிசயமான ஒன்று. தேனீக்கள் தங்களுடைய அறிவைக் கொண்டுதான் அம்மாதிரியான நடனங்கள் ஆடுகின்றன என்று சொல்லவில்லை, அவைகளை ஏதோ ஒரு இயற்கைச் சக்திதான் தூண்டுகிறது என்று முடிவு கூறுகிறார். இவையாவும் இயற்கையின் லீலாவிநோதங்கள் தான். பாஷைகளிலேயே மிகப் பழங்கால பாஷையாகிய தேனீப் பாஷையைத் தங்களுடைய அறிவு கொண்டு ஆராய்ந்து தெரிந்து கொண்டுள்ளார்கள் விஞ்ஞானிகள்.

✲

தேனீக்கள் மணிக்குப் பதினைந்துமைல் பறக்கும். இருபத்தைந்து மைல் வரை பறக்கவும் முடியும்.

—நல்வழி

விட்ட குறை

●

குழு. அழகிரிசாமி

தமிழ்ச் சங்கத்தில்:

கபிலனுக்கு சாஸ்திரங்கள் ஓதுகிறபடி கன்மபலன் பிறப்பு தோறும் தொடரும் என்று நம்பிக்கை கிடையாது. பாவவித்து பிரபஞ்சத்தின் இன்றுள்ள நிலை நீடித்திருக்கும்வரை செடியாகி மரமாகி, அப்புறம் மரம் வீழ்ந்து சாய்பராகி, அந்த மரம் தன் நினைவாக வைத்துச் சென்ற அந்த வித்துக்கள் பழையபடியும் செடிகள் மரங்கள் என்ருகி—இப்படி எண்ணற்ற வடிவங்களில் ஒன்றே பலவாகக் காட்சியளித்து நிலை நிற்கும் என்பதில் அவனுக்கு ஐயமில்லை. ஊழியின் வெந்தீயிலும் அவை பிழைத்துப் பின் தங்கி நின்று, பழையபடியும் உலகில் கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும் மரங்களாகவே கிளைக்கும் என்று அவனுக்கு நம்பிக்கை கிடையாது. ஆனல், 'ஊழிவரை அந்தப் பாவத்தின் கிளைப்பும் கலிப்பும் நடந்தேறி, பற்றிப் படர்ந்து பிரபஞ்சத்தைக் கவியாமல் தடுத்துவிட யாருக்குத்தான், ஊழியையே சிருஷ்டிக்கும் அந்த ஊழிக்கூத்தனுக்குத்தான் இயலும் காரியமா?' என்ற ஓர் எண்ணம் அன்று முதலாய், கீரன் நெற்றிக் கண்ணுக்கு இலக்காகிய அன்று முதலாய் அவன் நெஞ்சில் நின்று உறுத்தியது. 'வெள்ளத்தைத் தடுப்பதற்காக, மேகங்களை மழை கொட்டக்கூடாது என்று தடுக்க இந்தச் சிறு மானிடத் துரும்பாக இருக்கும் எனக்கு ஏது சக்தி? சிவனுக்கே முடியாத காரியம் அது. ஆனல் வரும் வெள்ளத்தை—நான் சுற்றிவளைந்து புரண்டு பழகும் இந்த மண்ணுலகில் வரும் வெள்ளத்தைத் தடுக்கவாவது பிரயத்தனப்படா விட்டால் நான் இந்த உலகத்திற்கு எதற்கு? இந்தப் புலமை எதற்கு?' என்று கபிலன் மனம் நீடு நினைந்து புழுங்கியது.

பாவம் எதிரொலி செய்வதைத் தடுக்க முடியாவிட்டாலும், எதிரொலி அண்ட சராசரங்களைக் கிடுகிடாயக்க வைத்துவிடாதபடி தடுக்க இந்த உலகத்துக்கே தன்னந் தனியனாய் நின்று கபிலன் துடித்தான்.

கபிலனின் எண்ணப் புயல் வேருெரு திசையிலும் புரண்டு அடித்தது:

'கீரனை எரித்த சிவன், அவனை எரித்தே சாம்பலாக்கி யிருந்தால் ஒரு வகையில் நன்மைகூட விளைந்திருக்கலாம். சிவனெருவனே அந்தப் பாவ முத்திரையைத் தாங்கிக் கொண்டிருப்பான். அவன் செய்த தவறு—நக்கீரனை எரித்த குற்றம் உலகெங்கும், வழி வழியாக வரும் பரம்பரைகளில் ஒரு தடையுத்தரவாக இருந்து மனித சமூகத்தில் கவிஞர் கூட்டத்தை இல்லை யென்ருக்கி யிருக்கும். இல்லாவிட்டால், தீரம் மிக்க புலவர்கள் தோன்றினல், கீரன்

பாவ தத்துவ விசாரணை மேல் நாடுகளில் கை வந்த வித்தை; தமிழ் வசனத்தில் இது புது முயற்சி...நக்கீரனை நெற்றிக் கண்ணல் எரித்த சிவன், பழையபடியும் அவனைக் காப்பாற்றியது உண்மைதான். ஆனல், இந்தப் பரிகாரம் செய்தும் சிவனல் நிம்மதியாக இருக்கமுடியவில்லை. திருவிளையாடற் புராணத்திலுள்ள இக் கதையைத் தத்துவ ரீதியில் அமைத்துச் சொல்லுகிறர் ஆசிரியர்.

தொழிலாளி மிக கஷ்டப்பட்டு வேலை செய்கிறான். அவன் அறிந்து கொள்கிறான். கணக்குப் போடுகிறான். எழுதுகிறான். உண்டுபண்ணுகிறான். பிறரை சம்மதிக்கச் செய்கிறான். ஒவ்வொரு மணியும் அவனது மூளைக்கு மிக கடினமான வேலையை கொடுக்கிறது. அப்போதப்போது அவன் தன் கண்ணாடியை எடுத்துவிட்டு சற்று சாய்ந்து கொண்டு ஒருகப் டீ அருந்தி ஓய்வெடுத்துக் கொள்வதில் ஆச்சர்யமில்லை. பெரிய தொழிற் சாலையின் போர்ட் அங்கத்தினர் கூடுமிடத்திலும் சரி, சொந்தக் காரன் தான் ஒருவனாக நடத்தும் வியாபார ஸ்தலத்திலும் சரி டீ நல்ல ஓய்வைக் கொடுத்து மனோவேகம் அளிக்கிறது. டீ ஒருநல்ல லாபகரமான நல்ல பழக்கம். சோர்வுறும் சமயம் டீ இளைப்பாற்றி நல்ல புத்துயிர் அளிக்கிறது. அதை நன்கு தயார் செய்து கொள்ளுங்கள்.
மேஜையில் அவன் கை எட்டக்கூடிய இடத்தில்...
நல்ல டீ தயாரிக்கும் முறை
1. டீயை கெட்டிலிலே காய்ச்சாதே. டீபாட் உபயோகி.
2. டீபாட் ஈரமில்லாமலும் வெதவெதப்புடனும் இருந்தால்தான் உணர்ந்த டீ தழையைப் போட்டு கொதிஜலம் விட்டதும் அது நன்றாய் ஊறி நல்லமணத்தைத் தரும்.
3. ஒவ்வொரு கப் டீக்கும் ஒரு டீஸ்பூன் தழை போட்டு அதிகப்படியாக டீ பாட்டிற்கு ஒரு ஸ்பூனும் போடவும்.
4. புதிதாக கொதிக்கவைத்த தண்ணீரையே உபயோகிக்கவும். ஒருபொழுதும் முன்னாடியே கொதிக்கவைத்த ஜலத்தையோ, கொதிக்காத ஜலத்தையோ அல்லது ரொம்ப கொதிக்கவைத்த ஜலத்தையோ உபயோகிக்காதே. ஜலம் குமிழையைப்போல் கிளம்பும் பொழுதுதான் அது கொதிப்பதற்கு அடையாளம்.
5. ஐந்துநிமிஷத்திற்கு குறையாமல் கிஷாயம் ஊரவேண்டும்.
6. டீபாட்டில் இருக்கும் பொழுதே சர்க்கரையும், பாலும் சேர்க்காதே. கப்புகளில் கஷாயத்தை ஊற்றவிட்டே அவைகளை சேர்க்கவம்.
எந்நேரமும் டீ நேரம்தான்
IK 273 TM.

LIPTONS
WHITE LABEL
TEA
BY APPOINTMENT TO THE
LATE KING EMPEROR GEORGE V
ONE POUND NETT
लिப்டன்ஸ்
என்றால்
முதல்தரமான டீ

சென்ற வழியில் சென்று தாங்கள் செய்த இலக்கியங்கள் பெயர் சொல்ல, சதையுடம்பைச் சாம்பலாக்கச் சம்மதித்திருப்பார்கள். இலக்கியத்துக்கும் புலவருக்கும் ஏக காலத்தில் பீடும் பெருமையும் சேர்ந்துகொண்டாவது வரும். அந்த ஒவ்வொரு பரம்பரையிலும் சிவனுடைய தெய்விகத்தில் பாவ முத்திரை விழுந்து விழுந்து அவன் ஒருவனோடு மட்டும் பாவம் தொடர்புகொண் டிருந்திருக்கும். ஆனால்—

பித்தன் பைத்தியக்காரத் தனம் செய்துவிட்டான். கீரனையும் எரித்தான். எரித்தவனையும் மன்னித்து விட்டான். அதாவது மன்னிப்பதைப் போன்ற ஒரு காரியத்தைத் தனக்கும் நல்லதென்று நினைத்துச் செய்து விட்டானே? கடலில் காயம் கரைத்த மாதிரியில் அவன் செய்துகொண்ட பரிகாரம் சக்தியற்றுப் போய்விட்டாலும் பாதகமில்லை; ஆனால்—பிராயச்சித்தத்தின் போலித்தனம், அரைகுறை நிவாரணம், பாவத்தை ஏவிவிட்டு விட்டது. விஷப் பூண்டுகளை வெள்ளத்தை விட்டு மூழ்கடித்து அழிப்பதற்குப் பதிலாக, நீர் பாய்ச்சிக் கப்பும் கவருமாய் வளர விட்டுவிட்டான். தண்ணீர் போதாது! தண்ணீர் போதாது!!

கீரன் தாமரை யிலைத் தண்ணீர் போலச் சங்கத்தி லிருந்தும் இல்லாதவனாக ஒரு மூலையில் அடக்கமாகி ஒரே எண்ணக் குவியலில் சிந்தனையைக் குழப்பிக் கொண் டிருந்தான். சங்கத்துச் சான்றோர்கள், வருஷக் கணக்காகத் தமிழாராய்ந்து, கலை விளக்கம் செய்து, மானிடர்களை மானிடர்களாக்கிய புலவர் பெருமக்கள், இப்போது நெறியில் பிசகிவிட்டனர்; நிலையில் தாழ்ந்து அமானுஷிகமாய் ஒருவரை யொருவர் கைகலக்காத நிலையில் சண்டையிட்டு ஏசிக்கொண் டிருந்தனர். இந்தப் பெருங் கூச்சலில் இருக்கும் இடம் தெரியாமல் உட்கார்ந்து மனம் உளைந்து யோசனையில் ஆழ்ந்துவிட்டான் கபிலன். கீரன் இருக்குமிடத்தைச் சூழ்ந்து சாவமைதி கோட்டை கட்டிக் கொண்டது; அவன் தலைமை ஸ்தானம் உயரமான இடத்திலிருந்தது என்ற மேடு பள்ள வித்தியாசத்தையே காட்டியதே ஒழிய தலைமை ஸ்தானத்தின் தொழிலும் செயலும், அங்கில்லை. பரணன் பேசிப்பேசித் தொண்டை யடைத்துப் போய் விட்டான். அவனுடைய வலது கரம் வியர்க்கின்ற நெற்றியில் விழும் சடாபாரத்தைக் கணத்துக்கு ஒரு முறை கோதிவிட்டுப் பின் நோக்கித் தள்ளிக்கொண் டிருந்தது.

புலவர்களில் யார் பெரியவர், யார் தாழ்ந்தவர், என்று தீர்மானிப்பது யார்? கீரனுடைய தலைமை ஸ்தானம், அவன் நெற்றிக் கண்ணின் சூடுண்டு, பழைய படியும் கடைத்தேறி வந்த நாள் முதல் ஆட்சி வன்மையை இழந்து போயிருந்தது. புடம் போட்டெடுத்த சொக்கத் தங்கம் வளைந்து கொடுத்துக் கடினம் இழந்து போனதுபோல அவனிடம் ஞானப் பொலி விருந்தது; ஆனால் அதிகார வீர்யம் செத்துப்போ யிருந்தது.

'எங்கோ நடந்த ஒரு தவறு' —என்று முதலில் நினைத்த கபிலனுக்குப் பிறகு மேற்கூறியவாறு ஒரு நிர்ணயமான அபிப்பிராயம் விழுந்தது.

பாவத்தை யடக்கச் செய்த பரிகாரம் சக்தியற்றுப் போய்

விட்டது. அதற்கு நிவாரணம் என்ன?......

அன்று, சிவன் இலக்கிய உலகின் விதிப்படி கீரனோடு தர்க்க வாதம் செய்ய வரவில்லை. 'சொன்னதை நீ ஒப்புக்கொள்ள முடியுமா, முடியாதா?' என்ற பயமுறுத்தலாக, இலக்கியம் புகுவதற்கு வழியில்லாமல் வேலி கட்டிக் கொண்டுள்ள ஓர் உலகத்தின் விவகாரமாக இருந்தது சிவனுடைய செயல். கீரன் ஒப்புக்கொள்ள வில்லை. சிவனுடைய தெய்விகத் தன்மையை மனிதன் இகழ்ந்த குற்றத்துக்காக அவன் எரிக்கப்பட்டான்—இந்தச் சம்ஹார நாடகத்தின் நடுவே சிவன் இலக்கியத்தை மறந்துவிட்டான்.

கடவுள் கைவிட்டான்; இனிப் பாண்டிய மன்னன் செண்பக மாறன் வந்து கடவுள் செய்யத் தவறிய காரியத்தைச் செய்வானா? அவனும் கைவிட்டான்.

கீரன் எரிபட்டு அப்புறம் பிழைத்துவிட்டான். அது வேறு கதை. ஆனால், இலக்கிய விவாதம் அந்தரத்தில் தொங்கியது. அதற்கு விடை அப்போது கிடைக்கவில்லை. அதை ஒருவரும் நினைக்கக்கூட வில்லையே!

உலகம் இந்த மாதிரித் தலைகீழ் வளர்ச்சியின் பரிணாம உருவம் பெற்றுவிட்டது. இந்தப் பிறழ்ந்த உலகில் கலையைக் கண்டதார்? இலக்கியத்தைக் கண்டதார்? அதற்கு யார்தான் அதிகாரி?

...இந்த நிலையில் சங்கப் புலவர்களின் தர்க்கம் முற்றியது. 'என் காவியம் சிறப்புடையது.' 'நான் பெரும் புலவன்;' 'நான் செய்த நூல் சிறந்தது; நீர் செய்ததை நூல் என்றே கூற வியலாது,' 'கீரனார் இதற்கு ஒரு முடிவு கூறட்டும்' 'அவர் என்ன முடிவு கட்டும் ஆற்றலைப் பெற்றுவிட்டார்? ஆற்றலிருந்திருந்தால் சிவன் அன்று நெற்றிக் கண்ணைத் திறந்திருக்க வேண்டாமே?' 'கீரனார் தர்க்க வாதம் செய்து வெற்றி கண்டாரா? உயிர்ப் பிச்சை வாங்கிப் பிழைத்தவர் தானே!'—இப்படியாகப் பேச்சுக்கள் முற்றி வளர்ந்து கொண்டே சென்றன. சங்கத்தின் பொற்றாமரைக் கருகே யுள்ள நாழிகை வட்டில் காலம் அகாலம் ஆவதைக் குறித்தது; எவ்வளவோ நேரம் கழித்து எங்கோ ஓரிடத்தில் விவாதத்தின் இரைச்சல் 'பளிச்' சென்று நின்றது.

கபிலனுடைய சிந்தனையோட்டம் இந்த மௌனத்தினால் நின்று விட்டது. ஏறிட்டுப் பார்த்தான்.

"என்ன? என்ன முடிவு செய்தீர்கள்?"

நக்கீரன் அப்போதுதான் கபிலனை நோக்கி ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தான். அவன் முகத்தில் அப்போது ஒரு புன்னகை தோன்றி மறைந்தது.

"பழையபடியும் நம் பிணக்குகளைத் தீர்க்கச் சிவனிடமே போகலாம் என்ற என் கருத்தைப் புலவர்களும் ஒப்புக் கொண்டுவிட்டார்கள்" என்று கபிலனைப் பார்த்துச் சொன்னான் பரணன்.

கபிலனும், நக்கீரனைப் போலவே சிரித்தான். கீரனிடம் அதிகார வீர்யம் அற்றுப் போன நிலையில் எதற்கும் சிவன்தான் புகலிடமாக இருந்தான் அப்போது. ஆகவே, "நாளை முற்பகல் ஆலவாயப்பன் சன்னதிக்குச் செல்லுவோம்" என்று கூறினான் கபிலன்.

கோவிலில் :

வெப்பு நோய் தொத்து நோயல்ல. கூடுவிட்டுக் கூடு பாயும் சக்தியும் அதற்குக் கிடையாது. ஆனல் எந்த நேரத்தில் கீரனின் உடலில் பற்றிய வெப்பு நோய் சிவனின் ஆணையால் தீர்ந்து போனதோ, அப்பொழுதே அது சிவன் உடலில் தாவிவிட்டது. அவனுடைய தழல் நிற மேனி தழல் சுடும் மேனியாகிவிட்டது. அகங்காரத்துக்கும் அதனடியாகப் பிறக்கும் கோபத்துக்கும் அடையாளமாகவும், ஆயுதமாகவும் உள்ள அந்த நெற்றிக் கண்ணைத் தவிர அவன் உடலில் சூடற்ற பாகம் கிடையாது. நெற்றிக் கண்ணில் குளிர்ச்சி; குளிர்ச்சி; கண்ணீரும் பனியாய்த் தங்கிக் கண்ணையடைத்துவிடச் செய்யும் குளிர்ச்சி!

வெப்புத் தாங்காமல் அவன் சரீரத்தின் வாமபாகத்தை விட்டுத் தனியாகப் பிரிந்து வெகு தொலைவில் போய் நின்று கொண்டிருந்தாள் உமாதேவி. கீரனைக் கரையேற்றி அருள் செய்த அன்று அவன் உடலில் கொஞ்சம்தான் சூடு இருந்தது. அப்போதும் தீயையே தாங்கித் தாங்கிப் பழக்கப்பட்டுப்போன, தன்னுடைய இடக் கரத்தால் மட்டும்தான் அவனை அவளால் வருடிக்கொடுக்க முடிந்தது. ஆனல் இப்போது வடவைக் கனலின் உருப் பெற்ற தோற்றமாக நிற்கும் சிவனருகே அவளால் போகவே முடியவில்லை.

"உமா......"

"என்ன?"

"என் துயர நோயை, என் உடலெல்லாம் வேகும்படி வேதனை செய்யும் இந்த வெப்பு நோயைத் தாங்க, எனக்கு இன்னும் கொஞ்சம் அகங்காரம் இருந்தால், அது நன் மருந்தாக இருந்திருக்கும். இல்லாவிட்டால் இந்த வெப்பு நோயை ஒழிக்க நான் இந்த மாந்தர் வாழும் மண்ணுலகிலேயே தாழ்ந்த ஒரு நிலை பெற்று, என்னிடமே நான் மன்னிப்புக் கோரி, நெஞ்சும், உடலும் அடங்கிக் குளிர வேண்டும். இந்த இரண்டில் ஒன்று கைகூடிவிட்டால் போதும். ஆனல் என்னல் என்ன செய்ய முடியும்? அகங்காரத்துக்கு நான் எங்கே போவது? நெற்றிக் கண்ணைப் பார், கண்ணீர் குளிர்ந்து பனிக் கட்டியாகிக் கண்ணையே மூடப் பார்க்கிறது. இன்னெரு வழி சொன்னேனே, அதற்கும் யோசனை புலப்படவில்லை. எனக்கு ஒரு ஞானமும், அறிவும்......"

"அப்படிச் சொல்லாதீர்கள். வேதங்கள் தேடி வந்த திருவடிகளைப் பெற்ற உங்களுக்கு ஞானம் இல்லையென்ருல் இந்த வேதனைப் படவே மாட்டீர்கள். "பொருளுடைக் கலையே!" என்றும் "தண்ணார் தமிழளிக்கும் தண் பாண்டி நாட்டான்" என்றும் அறிஞர்கள் ஒரு காலத்தில் புகழ வொண்ணும் சிறப்பமைந்த நீங்கள் அறிவுத் தெளிவு பெறவில்லையென்ருல் உலகில் பாவ, புண்ணிய மேது? இன்று பாவம் நிலை பெற்று உங்கள் அளவிலும் உங்கள் சம்பந்தப்பட்டவர்கள் அளவிலும் தன் வெம்மையைக் காட்டி எரித்துக் கடைசியில் ஒன்றுமில்லாமல் அவிந்துபோவதற்கு இன்று சந்தர்ப்ப மளிப்பது உங்கள் ஞானமல்லவா? அறிவு விசாலத்தில், ஞானத்தின் பரவுதலில் புண்ணியம் வளர்ந்து

கொண்டு போகிறது. அது ஒவ்வொரு புதுப்புது ரூபம் பெறும் போதெல்லாம், அதற்கு எதிரிடையாக நிற்கும் மற்றொரு தன்மையாகிய பாவத்தின் உருவங்கள் சிருஷ்டிக்கப்பட்டுக் கொண்டே வருகின்றன. அறிவின் எல்லை, புண்ணியத்தின் எல்லை; அறிவின் எல்லை, பாவத்தின் எல்லை. பாவமும் புண்ணியமும் ஒரு எல்லையில் நிற்கின்றன......

நீங்கள் கஷ்டப்படுவது, நீங்கள் நோய் நீங்கத் துடிப்பது, உங்களை எதிர்த்துப் பாவம் போரிட்டு மெலிவது—எல்லாம் உங்கள் அறிவினால் அல்லவா? அறிவு பெருகாத இடத்தில் பாவ புண்ணிய வேற்றுமை ஏது?''

''அறிவு இருந்தது. ...''

''இப்போதும் இருக்கிறது. ஒரு சமயம் நெறி பிறழ்ந்துவிட்டது. கீரனிடம் இலக்கிய ஆதாரத்தில் வெற்றி பெறவோ, அதை விடப் பெருமை யளிக்கும்படியாக அவனிடம் தோற்று விடவோ சந்தர்ப்பம் வாய்த்திருந்தது. ஆனால், அன்று பலாத்காரம் முன்னால் நின்றது. அந்தப் பலாத்காரம் செய்த கொடுமை உங்கள் அறிவின், ஞானத்தின் துணை கொண்டு உங்களுக்குப் பாடம் கற்பிக்கமட்டும் வந்தது என்று நினைக்க வேண்டாம்: உங்களின் கருணை, நக்கீரன் மேல் கொண்ட பேரருள் பாவத்தின் அளவுக் கேற்றபடி யில்லாததால், பாவம் விகாரமாகத் திரிந்து அண்ட சரா சரங்களையே பழி வாங்க முயலுவது போல இருக்கிறது.''

''எதைக் கண்டு சொல்லுகிறாய், இப்படி?''

''எதையும் காணவில்லை. பழச் செடி பழம் பழுக்கும் முன்னாலேயே அதை இன்ன பழச்செடியென்று சொல்ல முடியாதா, என்ன? விதை கையி லிருக்கிறது. என்ன விதை என்றுகூட நமக்குத்தெரிந்தது தானே?''

பார்வதி சாஸ்திரம் விரிக்கத் தொடங்கினாள். அவள் செய்யும் காரியம் அப்போது அது ஒன்று தான். கணவன் மனைவி என்ற தாம்பத்ய உலகின் எல்லையைக் கடந்து இப்போது வேறு உலகத்துக்கே வந்துவிட்ட பிறகு, சிவனுக்கு அவளால் சிசுருஷை செய்ய வாய்க்குமா? சிவன் செய்த செயலின் பலாபலனுக்கு யாருடைய துணையும் என்ன செய்துவிட முடியும்?

சிவன் புரண்டு படுத்து, படுக்கையில் நெளிந்தான். என்றோ அவன் தலையில் சூடியிருந்த கொன்றை மலர்கள் சருகாகக் காய்ந்து அவன் வியர்வையில் ஒட்டிக்கொண் டிருந்தன. புலித் தோலில் வியர்வையின் முடை நாற்றம். பார்வதி யிருக்கும் பக்கமாகப் பார்த்துப் படுக்கவே திரும்பினான்.

அப்போது வெளியே இரைச்சல் கேட்டது. அவன் மனக் குழப்பத்துக்கு மருந்தாக மற்றொரு குழப்பமான செய்தி அவனை நெருங்கி வந்துகொண் டிருந்தது! ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை உதிர்க்க ஓர் அரிய சந்தர்ப்பம் அவனைத் தானே தேடி வந்தது. சங்கப் புலவர்கள் தங்கள் பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ள நான்மாடக்கூடலின் கோபுர வாயில் வழியாகக் கோவிலுக்குள் பிரவேசித்தனர். வரும்போதுகூடத் தர்க்கமும் விவாதமும் நின்றபாடில்லை. கோபுரம் அவர்கள் கூச்சலை எதிரொலி செய்தது. அர்த்தமற்றுக் கூச்ச லிட்டுக்கொண் டிருந்த வௌவால்கள் புலவர்

களின் கூச்சல்களைக் கேட்டுத் தம் கூச்சல்களை நிறுத்திக் கொண்டன.

புலவர்கள் உள்ளே வந்தார்கள். உமை தனக்கு அங்கே வேலையில்லையென்று தன் சன்னிதிக்குள் நுழைந்து கல்லாகி விட்டாள். சிவனும் லிங்கத்தில் ஐக்கியமாகித் தவித்துக்கொண்டிருந்தான். மனிதத் தன்மைகளின் சிறுமைகளில் அடிபட்டதால், அதன் மூலம் தெய்வாம்சத்தின் பூரண உருவம் விகாரப்பட்டு மாறிப்போனதால், அவன் உருவத்துக்கு லிங்கம் பொருத்தமான கூண்டாக இல்லை. கையையும் காலையும் மடக்கி ஒடுக்கி மூச்சுத் திணறும்படியாகச் சிவன் உள்ளே உட்கார்ந்து திக்குமுக்கலாடித் தவித்தான். ஸ்தானம் தெய்வ ஸ்தானம் அல்லவா?

புலவர்கள் வந்தார்கள். நாற்பத்தெட்டு பேர். கீரனும், கபிலனும், பாணனும், இன்னும் ஒன்றிரண்டு பேரையும் தவிர்த்து எல்லோருடைய முகங்களிலும் அகங்காரக் கறை பட்டிருந்தது. அந்தக் கூட்டத்திலேயே சிவனுடைய கண் நக்கீரன் மேல் தான் விழுந்தது. அவன் வாயிலிருந்து ஒரு சொல்லும் வராமல் இருந்ததைக் கண்டு சிவன் அமைதி பெறுமல் லிங்கத்துக்குள்ளேயே தவித்தான். ஆனல் கபிலன் பேசுவதற்கு முன்வந்தான். கபிலனைல் என்ன, கீரனைல் என்ன? கபிலன் பேசத் தொடங்கினன். பார்வதியைப் போலச் சிவன் படும் வேதனையையும் அதன் முடிவையும் பலனையும், கீரனை எரித்த அந்தப் பாவ வித்திலிருந்தும், அந்த வித்து முளைத்து வளரும் சிவ நிலத்தின் பண்பிலிருந்தும் அறிந்து கொண்ட கவியரசன் கபிலன் முன்வந்தான்:

“ஆலவாய்ப் பெருமானே! தாங்கள் ஊழி வெள்ளத்தை விட்டு உலகை அழிக்க வில்லை. அல்லது வெள்ளம் வடிந்து நிலம் நிலமாகும்படி செய்யவும் இல்லை. ஆனல் வெள்ளத்தின் பெருக்கைச் சற்றுத் தடை செய்யத் திருவுளங் கொண்டீர்கள்—கொள்ள உங்களால் அன்று முடிந்தது. அந்த அரைகுறை நிலையில் நிலம் முழுதும் மனிதர்களையே தன்னகத்தில் புதைத்துக்கொள்ளும் வெறும் சேருகப் போயிருக்கிறது.

“அன்று பாவத்துக்கு நிவாரணந் தேடத் தாங்கள் செய்த முயற்சியின் போதாக்குறையால் உலகமே குறைபட்டு நிற்கிறது. புலவர்கள், சங்கத்துச் சான்ருேர்கள்—சான்ருண்மையை இழந்தார்கள். புல்மை சண்டைக் கருவியாகிவிட்டது. யார் பெரியவர் என்ற சர்ச்சை பெருத்துவிட்டது? இதற்கு யார் விடை கூறுவது? இந்தப் பெரிய காரியத்தை நிறைவேற்றி வைக்க இன்று ஒரு பெரியவரும், பேரறிஞரும் வர வேண்டியதில்லை— வரக் கூடாது. பேரறிஞரின் செயலால், அகத்தியரோ, தொல்காப்பியரோ வந்து செய்யும் ஒரு செயலால், இன்றைத் தர்க்கம் தீரலாம். ஆனல் இந்தத் தர்க்கத்தின் மூல விதையை இனி அங்கு உரிக்கவிடாமல், சாரத்தையழித்துவிடத் தக்க வல்லமை அவர்களிடத்தில் இல்லை. புலவர்களாகிய எங்களுக்கு நிரந்தரப் பாடம் கற்பிக்க யாராவது ஒருவர் வேண்டும். ஆனல் பெரியவர்களால் அது நடக்காது என்று மட்டும் சொல்லிவிட விரும்புகிறேன். ஏன் என்று அதன் கார

ணத்தை நான் விரித்தால்—விரிக்க விரும்பவில்லை. இதுவரை நான் சொன்னவைகளைத் தாங்கள் புரிந்துகொண்டு மிருப்பீர்கள்.''

''தாங்கள் புரிந்துகொண்டு மிருப்பீர்கள்''என்ற கபிலன் கூற்றில் பொருள் சூல் முட்டியிருந்தது. 'புதிய விவகாரத் தீர்ப்புக்கு, தன் குற்றத்தில் பிறந்த விவகாரத் தீர்ப்புக்குக் குற்றம் செய்த தான் மட்டும்தான் வர வேண்டுமே ஒழிய, பெரியவர்கள் வரக் கூடாது' என்று பொருள் படக் கபிலன் சொன்ன இந்தச் சொல்லைக் கேட்டு ஒரு கணம் பேயறைந்தவனைப் போல் வேதனைப் பட்டான் சிவன். மறுகணம் ஆனந்தவாரிதியிலேயே ஆழ்ந்து விட்டான். அவன் மனம் கபிலனுக்குத் தெரிந்திருந்தது. கஷ்டப்படும் இரண்டு பேரில் ஒருவர் சொல்லுவது இரண்டுபேருக்கும் தானே?

கபிலனுடைய வார்த்தைகள் சிவனுக்குப் புரிந்தன. தன்னையே பழையபடியும் வந்து பிணக்குத் தீர்த்து வைக்க வேண்டும் என்று புலவர்கள் கேட்கும் போது அவன் பட்ட கஷ்டம் அதே கபிலனுடைய சொற்களால் தான் சற்று ஆறுத லடைந்தது. ஆனல் சிவன் பிராயச்சித்தமாகக் கூட நியாயத் தீர்ப்பு செய்வது என்ற விவகாரத்துக்கு அஞ்சினன்.

ஆனல், பிணக்குத் தீர்க்க வருவது யார்? தான் போவதற்கில்லை, தன் சக்தி யின்மையை, தன் பொருந்தா நிலைமையைத் தனக்குள்ளே உணர்ந்து கொண்டான் சிவன். கீரனை எரிக்கப் போனதோடு இலக்கிய உலக விவகாரத் தீர்ப்புகள் போதாதா?

—சிவன் யோசித்தான். சிறிது நேரம் சென்றது. அவனது புத்தி தீக்ஷண்யம் திடீரென்று ஒரு வழி காட்டிவிட்டது. அவ்வளவு தான், சிவன் குதூகலித்தான். வெளியே வந்து ஆனந்தத் தாண்டவம் ஆடாத ஒரே குறைதான்.

லிங்க உருவி லிருந்து வெளி வந்து பிறை சூடியாய், புலியதழ் உடுத்த முக்கண்ணனுய்க் காட்சி யளித்தான். அவன் முகம் கோடி சூரியப் பிரகாசம் பெற்றுப் பொலிந்தது. புலவர்கள் பார்த்து ஒன்றும் புரியாமல் விழித்தனர். நக்கீரனையும் கபிலனையும் ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, சிவன் சொன்னன்:

''சங்கப் புலவர்களே! இந்தக் கூடல் திருநகரில் தனபதி என்ற வணிகனுடைய மகன் ஒருவன் உள்ளான். ஊமைச் சிறுவன். உங்கள் தாரதம்மியங்களை அறிய அவனுக்குத் திறமை யுண்டு. நீங்கள் போய் அவனிடம் உங்கள் நூல்களைப் பாடிக் காட்டினல் அவன் சிறப்பிது, சிறப்பில்லாதது இது என உங்களுக்கு அறிவித்துவிடுவான்'' என்று சொல்லிச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வருவதை அடக்கினன்.

புலவர்கள் நெஞ்சம் திடுக்கிட்டது. ''ஊமையா?'' ''ஊமைச் சிறுவனு?'' இதே கேள்விகள் புலவர்களின் மனதை முள்ளைப் போல் குத்தின. ''இது என்ன அவமானம்? ஊமைச் சிறுவன் கவி நயம் உணர்வ தெங்கே?'' எனத் திகைத்து நின்றனர் சில கீரன், கபிலன், பரணன் என்ற அந்தத் தனிக் கும்பல் மனசுக்குள் சிரித்தத; சிவனேடு சிரிப்பையும் மகிழ்ச்சியையும் பரி

மாறிக் கொண்டது. சிவனும் இந்த மன ஒற்றுமையின் அடிப்படையில் இந்த மூவர் கும்பலில் ஒன்றுகிவிட முயன்றான். ஆனல் அந்த ஆசை பலிதமாவதை ஏதோ வந்து தடுத்தது. எது...? இன்னும் அந்தத் தன்மைக்குச் சிவன் அருகனுய் விடாமல் தடுக்கும் அது எது......? எது......?

மேலும் நிற்கப் பயந்த புலவர்கள் போய்விட்டார்கள் வணிகன் வீட்டைத் தேடி. 'தங்கள் அகங்காரத்தை சிவன் இப்படியா அடக்க வேண்டும்?' என எண்ணி அழாக் குறையாக வருந்தினர்கள் புலவர்கள். கபிலன் சாவதானமாக நக்கீரனைப் பார்த்து,

"சிவன், தான் தப்பித்துக் கொள்ளவும் நல்ல வழி செய்துவிட்டான்" என்றான்.

"உங்கள் யோசனை" என்றான் கீரன்.

"யார் யோசனையானல் என்ன? சிவன் ஒரு பேரறிஞன் தான். தப்பித்துக் கொள்ள என்ன சுலபமான மார்க்கம் இது!" என்று சொல்லிக் கொண்டே போக, புலவர்கள் வழி நடந்தனர்.

கோவிலில் :

உமை கல்லுருவை விட்டு வெளிவந்து சிவனைத் தழுவினுள்; அவனுடைய உடல் வெப்பத்தைப் பொருட்படுத்தாமல் அவனைக் கட்டிப் பிணைந்தாள். பார்வதியின் திருமேனி சிவனைப் போர்த்துவிட்டது. ஆலவாயப்பன் மெய்ப்புளகித்தான். அவன் மனசிலும் ஒரு திருப்திதான். அதனல் படபடப்பு சற்று குறைந்திருந்தது, அவன் உடலில்.

"புலவர்களின் அகங்காரத்தை அடக்க ஊமைச் சிறுவனை நியமித்தபோது, நீங்களும் எப்படிப் பணிந்துவிட்டீர்கள்! உங்களுக்கும் இல்லாதபடி அந்த ஊமைக்கு ஒரு தகுதி யிருந்ததென்று எப்படிக் கண்டுபிடித்து விட்டீர்கள்? இப்படி யல்லவா தாழ்ந்து பணிய வேண்டும்? என்ன தந்திரம் இது?"

உமை கரங்களை முயக்கியும் நெகிழ்த்தும் சிவனை அன்பாதரவாய்த் தழுவிக் கொஞ்சினுள். சிவன் மேனியில் வெப்பம் சற்றுக் குறைந் திருந்தது. பாவத்தின் ஆட்சி தன்னைப் பொறுத்தவரையில் நீங்கிவிட்டதாகக் கனவு கண்டான் சிவன். பாவம் பூண்டற்றுப் போய்விட்டது. இனி அது வேரூன்றிப் படர தன் நல்லுள்ளத்தில் இடமில்லை. முதலாவதாக நக்கீரனைக் கரையேற்றும் போது அறுக்கப்படாமல் பாக்கி விழுந்த பாவத்தின் சில வேர்களை இப்போது அறுத்தெறிந்து விட்டதாக நினைத்துக் கொண் டிருந்தான். ஆனல், கபிலனையும் கீரனையும் தழுவிக் கொள்ளப் போகும்போது அன்று மனதினுள் தோன்றித் தடுத்ததே, அது என்ன? பயமா? பயம் எதற்கு? ஆனல் தடுத்தது எது? ...சிவனுடைய இருதயத்தின் அகட்டில் இந்தக் கேள்வி ஈன சுரத்தில் ஒலித்துக் கொண்டிருந்தது. ஆனல் தற்காலிகமாகப் பெற்ற அவன் சந்தோஷத்தின் பேராரவாரத்தில் அந்த ஹீன ஒலி சுதி யொடுங்கிப் போயிருந்ததால் சிவனுக்குக் கஷ்ட மில்லாமல் இருந்தது. பார்வதி இப்போது பழையபடியும் சிவனுக்குப் பணிவிடை செய்யும் பதி சேவையின் கருமங்களில் இறங்கிவிட்டாள்.

எத்தனையோ வருஷங்கள் ஓடி விட்டன. பதினைந்து தலைமுறைகள் கடந்து சென்றுவிட்டன. மண்ணிலே எத்தனையோ பிறப்பு இறப்புகள்! எத்தனையோ புதுப் புதுப் பாவங்களும் புண்ணியங்களும் ஒன்றை யொன்றை விழுங்கிச் செத்து, பழையபடியும் வேற்றுருவில் தோன்றிக் கொண்டு தங்கள் பரம்பரையைக் காப்பாற்றி வருகின்றன. எத்தனையோ போய் எத்தனையோ வந்தன. நிலைபெற்றிருந்த ஆதி தத்துவம் ஒன்றைத் தவிர எல்லாமே போய் வரவும், வந்து போகவுமாக இருந்தன. மாறுதல், மாறுதல், எத்தனை மாறுதல்! ஜடம், மாறியது. ஜடத்தை இயக்கும் உயிர் மடிந்து மடிந்து தோன்றியது. ஆனால், ஓர் உயிருக்கு ஒரு காலத்தில் ஏற்பட்ட ஒரு குறிப்பிட்ட இன்பம் அல்லது துன்பம் மட்டும், உலகின் மாறுதலுக்கு முரண்பட்டு நிலைத்துவந்தது. பாவத்தின் ஆயுள் பதினைந்து தலைமுறைக்குப் பிறகும் பழைய உருவத்தில், பழைய தன்மையில், பழைய காரணத்தில், பழைய காரியத்தில் நிலைத்து நின்று இன்றும் சிவனின் உள்ளத்தை ஆட்டிக் குலைத்து வந்தது. கீர, கபிலர்களுடன் சரியாசனத்தில் அமரும் தன்மையைத் தடுக்கும் அந்த வஸ்து எது?

'எது?'—இந்தக் கேள்வி பதினைந்து தலைமுறைகள் வரையும் உயிர் வாழ்ந்து வளர்ந்துவந்திருக்கிறது.

சிவன் இரண்டாவது முறை செய்த பிராயச்சித்தமும் போதவில்லை என்று என்றோ ஒருநாள் உமை சொல்லியே விட்டாள். சிவன் பித்தனானான். பித்தனாய், பேயனாய் நடமாடும் ஒருநாள் ...அன்று வந்தான் இடைக்காடன். சிவனுடைய உள்ளத்தில் ஏதாவதுமிச்ச சொச்சமாகப் பழைய, அந்தக் கேவலமான குணம் இருக்கலாம் என்ற ஒரே நம்பிக்கையுடன் வந்திருந்தான் இடைக்காடன். பழையபடியும் இலக்கியப் புகார் ஒன்றைக் கொண்டு வந்திருந்தான். அவன் புகாரைச் சிவனிடம் வெளியிட்டதும் சிவன் தனக்குள்ளாகவே,

"அந்த ஊமையைவிட நான் தாழ்ந்துபோக முயன்றேன். ஆனால், உலகம் என்னை என்றும் போல் பாவித்து ஊமையைப் பெரியவனாக்கிவிட்டது. நான் நினைத்ததற்கு எதிர்மாறாக நடந்ததன் எடுத்துக் காட்டாக வந்திருக்கிறான், பாவம் இடைக்காடன்" என்று நினைத்துக் கொண்டான்.

"இறைவா! குலேச பாண்டியன் கல்வி கேள்விகளில் சிறந்தவனென்று கேள்விப்பட்டு அவன்பால் சென்று கவிபாட அவன் தலையசைக்காது, முக மலர்ச்சி செய்யாது வாளா இருந்துவிட்டான். என்னைத்தான் அவமதித்தானே! சொல் வடிவாய்த் தங்களைப் பிரியாதிருக்கும் இமயாசலன் பாவையாகிய உமாதேவியையும், சொல்லுக்குப் பொருளாய் நிற்கும் தங்களையும் அவமதித்தானே?" என்று இடைக்காடன் சொல்லும்போது கடைசித் தடவையாகச் சிவன் உள்ளத்தில் அனல் மூண்டெழுந்து அடங்கியது. தன்னுடைய பாட்டுக்கு மதிப்பு கிடைக்காததால், சிவனையும் தன்னையும் விவகாரத்தில் எளிதாக இழுத்துப் போட்டுவிடலாம் என்று இடைக்காடன் துணிய வேண்டுமானால் சிவனை எவ்வளவு கேவலமாக நினைத்திருக்கவேண்டும் என்று பார்வதி கூடச் சீறிச் சினந்தாள். ஆனால்,

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

●

தற்காலம் நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப்பட்டிருப்பதால், உங்கள் தேவைக்கு உங்கள் மாகாணம் அல்லது ஸ்டேட்டில் உள்ள துணிக் கட்டுப்பாடு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

நேர்த்திக்கும்
உறுதிக்கும்

சாரதி

கைத்தறி நெசவுகள்

ஏ. ஆர். பி. சாரதி
தபால் பெட்டி நெ. 45
மதுரை

ஜெர்மெக்ஸ்



புண்ணுக்கும், தொத்து நோய்க்கும் உள்ள தொடர்பை
ஜெர்மெக்ஸ் துண்டிக்கிறது.

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பர்மசியுடிகல்ஸ் லிமிடெட்
தபால் பெட்டி நெ. 67, சென்னை

DJK22

தழலைத் தழலால் எங்கே அவிப்பது? தன் பாவத்தின் மிச்ச சொச்சம் இன்னும் இந்த இடைக்காடன் என்ற கிழவோடு வந்து கண்முன் நிற்பதாக நினைத்தான் சிவன். தன் சிறுமையை அவன் பயன் படுத்த வந்தானே ஒழிய அவன் கவிஞன் தான். தன் குறையால்தான், அவனும் குறைப்பட்டான், என்று சிவன் கருதினான். அவன் முகத்தில் பெருங் கருணையும் சான்றாண்மையும் விகசித்தன. மறுபடியும் ஒரு பிராயச்சித்தத்துக்கு வழி செய்தான்.

மதுரைத் திருக்கோயிலை விட்டு லிங்க உருவோடு வடபால் சென்று வையை யாற்றின் தென் கரையில் கோயில் கொண்டுவிட்டான். லிங்கத்தைக் கோயிலில் காணாது போகவே, வையை யாற்றின் கரையில் சிவன் எழுந்தருளிய செய்தி கேட்டு குலேச பாண்டியன் ஓடோடி வந்து முறை யிட்டான் சிவனிடம். அவன் வேண்டுகோளுக் கிணங்கியது போலவும், இடைக்காடனுக்கு மதிப்புத் தேடியளித்தது போலவுமாக பழைய படியும் மதுரையம்பதியின் கோவிலிலேயே எழுந்தருளச் சித்தமானான். ஆனால் தான் கடைசி முறையாகப் பிராயச்சித்தம் செய்துகொண்ட அந்தவடக்குத் தலத்திற்கு 'உத்தர ஆலவாய் எனப் பெயர் நிலவட்டும்' என்று பாண்டியனிடம் சொன்னான்.

திரும்பி வந்தனர். கோவிலுக்குள் கதலியும் கமுகும் நாட்டி அமைத்த பந்தலில், பூஞ் சேக்கையின் மேல் இடைக்காடனை அமர்த்தி, மங்கல வாத்தியங்களின் இன்னிசையோடு அவன் கவிகளைப்பாடக் கேட்டான் சிவன். அவனுக்கு வாரியளித்த பரிசில்களுக்கு அளவில்லை; கணக்கில்லை. இடைக்காடன் உருவில் பொலியும் பல கோடி உயிர்களுக்கும் பல கோடித் தத்துவங்களுக்கும் அளவில்லை; கணக்கில்லை. அந்தப் பல கோடி உயிர்களில் கீரனும் ஒருவன். இடைக்காடன் மேனியிலே கீரன்தோன்றிய அதே நேரத்தில் சிவன் மேனியிலும் கீரன் தோன்றினான். அன்று தெய்வ பீட மாகிய கோவில் லிங்கத்தில் சிவனால் சுகமாக அமர்ந்து கொள்ள முடிந்தது.

*

ஜனநாயகம்

அன்று: மக்களுடைய நன்மைக்காக மக்களால் நடத்தப் பெறும் மக்களுடைய அரசாங்கம்.

இன்று: மக்களில் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த சிலருடைய நன்மைக்காகக் கட்டுப்பாடான ஒரு சாராரால் மக்களுடைய ஆட்சி என்று சொல்லி நடத்தப்பெறும் அரசாங்கம்.

—அரசியல்

வாழ்க்கை விசித்திரம்

" வாழ்க்கையே மிகவும் விசித்திரமானது. எப்படி ? உறியி லிருந்து பக்ஷணத்தைத் தானே எடுத்துச் சாப்பிடும் அளவுக்கு வளர்ந்து விட்டால் அப்போது பக்ஷணத்தின்மீது ஆசையில்லாமல் போய்விடுகிறது "

—தி அட்வகேட்

உலக அரசாங்கம்

பெர்ள் பக்

நான் சிறு குழந்தையாக இருந்த போது, ஜன்னலோரத்தில் உட்கார்ந்து, யாங்ட்ஸீ நதியின் நீரோட்டத்தைப் பார்த்துக் கொண்டே இருப்பேன். எங்கள் வீடு யாங்ட்ஸீ நதியைப் பார்த்து இருந்தது. அந்த நதியில் ஒரு திசையை நோக்கிச் செல்லும் நீரோட்டத்தை அதற்கு எதிர்த் திசையிலிருந்து வரும் பல நீரோட்டங்கள் தடுக்கும். இதன் காரணமாகப் பல நீர்ச் சுழல்கள் ஏற்படும். இந்த நீர்ச் சுழல்களில் மனிதர்கள் விழுந்தால், பிறகு தப்புவதென்பது நடக்காத காரியம். இந்த ஆபத்தான நீர்ச் சுழல்கள் எனக்குத் தற்சமயம் அடிக்கடி நினைவுக்கு வருகின்றன.

உலகில் இப்போது 'ஒரே உலகம்' என்ற லட்சியத்தை நோக்கிச் செல்லும் நீரோட்டத்தைப் பல நீரோட்டங்கள் எதிர்த்துத் தடங்கல் செய்கின்றன; ஒரே உலக முயற்சி வெகு சீக்கிரத்தில் பலிதமாவதைத் தாமதப்படுத்துகின்றன.

உலக அரசாங்கத்தைப் பற்றி நாம் பேசுகிறோம். ஆனால், உலக அரசாங்கம் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் உலக மக்கள் நடுங்குகிறார்கள். அதை விட, பஞ்சம், பசி, யுத்த கஷ்டங்கள் ஆகியவற்றைச் சகித்துக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். உலக அரசாங்கத்தைக் கண்டு மக்களுக்கு இப்படிப் பயம் ஏற்படுவானேன்? அதை அவர்கள் இப்படி ஏன் வெறுக்க வேண்டும்? காரணம், சொந்த நாட்டவர்களானாலும் அந்நிய நாட்டவர்களானாலும் அவர்களை ஆட்சி செய்தவர்கள் கொடுங்கோலர்களாக இருந்து வந்தமை தான். இப்படி வெறுப்பை அமெரிக்காவைப் போலவே, அந்நிய ஆட்சிக்குட்பட்ட இந்தியா, இந்தோனேஷியா, பர்மா, இந்தோ சீனா முதலிய நாடுகளிலும் காணுகிறேன். சீனாவிலும் ஜப்பானிலும் அரசாங்கத்தின் மீது எத்தனையோ நூற்றாண்டுகளாக வெறுப்பு இருந்துகொண்டு வருகிறது. காரணம், எந்த அரசாங்கமும் மக்களின் நன்மையைக் கவனிக்கவே இல்லை. அரசாங்கத்தின் நோக்கம் முதலில் எதுவாக இருந்தபோதிலும் கடைசியில் அப்பட்டமான சுய நலத்தில்தான் போய் முடிந்திருக்கிறது. ஆகவே, சர்க்காரிடம் மக்களுக்கு நம்பிக்கை யற்றுப் போய்விட்டது.

இந்த நிலையில் சுய நலத்தை விடுத்து, உலகின் இன்றைய நிலையைச் சமாளிக்க முன்வர வேண்டும். சர்வ தேசச் சங்கம் இந்த அரசாங்க—வெறுப்பைச் சமாளிக்கத் தவறிவிட்டது. ஐக்கிய நாடுகள் சபையும் இன்றிருக்கும் நிலையிலேயே இருந்து வந்தால் அது வெற்றி பெறப்

ஸ்ரீமதி பெர்ள் எஸ். பக் நோபல் பரிசு பெற்ற அமெரிக்க நாவலாசிரியை. குழந்தைப் பருவத்திலிருந்து வெகு காலம் வரை சீனாவில் வசித்து வந்ததால் கீழ் நாடுகளிடம் மிகுந்த அனுதாபம் கொண்டவர் இவர். சீன தேசத்தைப் பின்னணியாகக் கொண்டு, இவர் எழுதிய 'நல்ல பூமி', 'விஷ வித்து', 'சீன வானம்' முதலிய நாவல்கள் சினிமாவில் படம் பிடிக்கப்பட்டுள்ளன. இக் கட்டுரை யுனைட்டெட் நேஷன்ஸ் வொர்ல்டில் வெளி வந்ததின் சாரம்.

போவதில்லை. மக்களின் நலனுக்குகந்த முறையில் அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும். தற்போது மக்கள், அரசாங்கத்துக்கு மிகவும் அதிக விலை கொடுத்து மிகவும் குறைந்த சரக்குகளைப் பெறுகிருர்கள். 'இந்த நிலையில், உலக அரசாங்கம் ஏற்பட்டுவிட்டால், இன்னும் அதிக விலை கொடுக்க வேண்டுமே, அப்போது சர்க்காருக்கு வரி கொடுப்பதே வாழ்க்கையாகப் போய்விடுமே! அதைவிட இப்போது உள்ள நிலையே விசேஷமானது' என்றெல்லாம் மக்கள் கருதுவது இயல்பு.

உலக மக்களுக்கு அரசாங்கத்தின் உருவத்தில், பயன்படும் ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். எப்படி இதை ஏற்படுத்துவது? கெட்ட பெயரெடுத்துவிட்ட அரசாங்கம் என்ற சொல்லை விடுத்து, நிர்வாகம் என்ற சொல்லை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவோம். மக்களுக்கு எப்படிப்பட்ட நிர்வாகம் வேண்டும்?

மக்களுக்கு முதலில் வேண்டியது உணவு. காற்று, தண்ணீர் இவைகளைப்போல் இன்றியமையாத தேவை உணவு. 'சில மக்களுக்குத் தான் உண வளிக்கப்படும்; பிறருக் கில்லை' என்று அமெரிக்கா சொல்லும் போது நம் அரசாங்கம் அமைதிக்கு இடமில்லாமல் செய்துவிடுகிறது. மக்களுக்கு உணவு கிடைக்குமென்ற நிச்சயம் இருந்தால்தான் ராணுவ அதிகாரிகளின் பாதுகாப்பை நாடாமல் இருப்பார்கள்; நாடவும் மாட்டார்கள். ஆகவே, இந்தப் பாதுகாப் பற்ற நிலையில் ஆயுதப் பரிகரணம் செய்வதை அவர்கள் சம்மதிக்க மாட்டார்கள்.

ஸர் ஜான் பாய்டு ஓர் தயாரித்த உணவுத் திட்டத்தையும் அரசாங்கமும் மக்களும் ஒப்புக்கொள்ளாதது வெட்ககரமான விஷயம். அமெரிக்கர்கள் தான தருமங்களில் பிரியம் உடையவர்கள். ஆனால், உலகில் மூன்றில் இரண்டு பகுதியினர் பட்டினியால் தவிக்கும்போது தகுந்த உணவு நிர்வாகத்தை ஏற்படுத்தாமல் நாம்தான தருமம் செய்வதை உலகம் வெறுக்கிறது. நாம் கொடுக்கும் உணவே, பட்டினி கிடப்பவனின் கழுத்தை நெரிக்கும்போது, ஒன்றும் கிடைக்காதவன் பாடு எப்படி இருக்கும்? ஆகவே, உணவு விஷயத்தை முதலில் கவனிக்காமல் அதை ஒத்திப்போட்டுவிட்டு,மற்றக் காரியங்களை ஐ.நா. சபை கவனிப்பது எனக்கு மிகவும் அவமானமாக இருக்கிறது. அதனால் நல்ல அம்சங்கள் நிறைந்த ஓரின் உணவுத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு காரியத்தில் இறங்க விரைவில் முன்வர வேண்டியது அவசியம். உலகின் உணவு நிலையைச் சமாளிக்க அதுவே தகுந்த சாதனமாக இருக்கிறது.

உணவுக்கு அடுத்தபடி முக்கியமானது சுகாதாரம். சீனவின் நிலைமை நாற்பதினுயிரம் பேருக்கு ஒரு டாக்டர் வீதம் என்று இருக்கிறது. இந்தியா, ஆப்பிரிக்கா இவைகளின் நிலைமையோ இதைவிட மோசம். அதனால் உலக சுகாதார நிர்வாகம் ஒன்று ஏற்பட்டா லொழிய கஷ்டம் தீரப் போவ தில்லை. உலக உணவு நிர்வாகத்துக்கு வேண்டிய பணத்தைவிட, சுகாதார நிர்வாகத்துக்கு அதிகப் பணம் தேவையாக இருக்கும். டாக்டர்களுக்கும், மருந்துகளுக்கும் நிறையப் பணம் வேண்டும். இப்

போது ராணுவ விஞ்ஞான ஆராய்ச்சிக்கு அளவு கடந்த பணம் செலவாகிறது. இந்தப் பணத்தின் ஒரு பகுதியை உலக சுகாதார நிர்வாகத்துக்குச் செல விட வேண்டும்.

உணவுக்கும், சுகாதாரத்துக்கும் அடுத்தபடி அடிப்படைக் கல்வி முக்கியத் தேவையாக இருக்கிறது. அதனால், உலகக் கல்வி நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தி, குறைந்த செலவில் நிறைந்த பலன் அளிக்கக் கூடிய படி தயாரிக்கப்பட்ட ஜேம்ஸ் யென் என்பவரின் திட்டத்தைக் கைக்கொண்டு கல்வி பரப்ப வேண்டும். உணவு, சுகாதாரம், கல்வி முதலியன கிடைக்குமென்ற நிச்சயம் ஏற்பட்டுவிட்டால் மக்கள் சமாதானத்தைப் பாதுகாக்க இயலும்; முன்னேறுவதற்குரிய சாதனங்களையும் அடைவார்கள். உலக உறவைப் பற்றி யோசிக்கும் மனச் சமாதானமும் மக்களுக்குக் கிடைக்கும். இப்படி உலக நிர்வாகம் ஏற்பட்டுவிட்டால் உலக அரசாங்கம் ஏற்பட்டுவிட்டதுபோல் தான். தற்சமயம் ஐக்கிய நாடுகள், ஏழைகள் தரித்திரத்தாலும் அறியாமையாலும், நோயாலும், கஷ்டப்படும்போது சில பணக்காரர்களுக்குப் பாதுகாப் பளிக்கத்தான் பயன்படுகின்றன. அதனால் பிரத்தியக்ஷ நிலையைச் சமாளிக்கும் புத்திசாலித்தனம் இல்லையென்றால் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தோல்வியாகவே முடியும். முதலாளிகளின் கையாட்களால் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இயங்கினால் இனி நாம் ஒரு பெரிய பாடத்தைப் படிக்க வேண்டிவரும். என்ன பாடம் அது? ஆசியாவில் ஒரு பெருத்த பயங்கர எழுச்சி கிளம்பப் போகிறது. அது ஆசியாவோடு நிற்காது; நசுக்கப்பட்ட மக்கள் வாழும் எல்லா இடங்களிலும் அது பரவும். நீக்ரோக்கள் வசிக்கும் நம் நாட்டுப் பகுதியிலும், வேலையில்லாத் திண்டாட்டத்தில் மக்கள் உழலும் இடங்களிலும் அந்தத் தீ பரவும்.

இன்றைய மோசமான நிலையில் உலக அரசாங்கத்தைப் பற்றிக் கனவு காண்பது ஆகாயக் கோட்டைக் கட்டுவதாகவே முடியும். ஏனென்றால், அதற்கு வேண்டிய அடிப்படை ஒன்றையும் நாம் போடவில்லை. ஏதோ ஒரு வீட்டைக் கட்டியிருக்கிறோம்—ஆனால், மணல்மேல் கட்டியிருக்கிறோம். பட்டினிப் பட்டாளமும், ஆக்ரோஷப் பட்டாளமும் அந்த வீட்டைத் தகர்த்தெறிந்துவிடும்.

✲

ஒரு வேளை...!

சென்னையில் ஒரு பிரபலசிறுகதை எழுத்தாளரும், அவருடைய நண்பர்களும் ஒரு தெரு வழியாகப் போய்க்கொண்டிருந்தார்கள் அப்போது அங்கே ஒரு கல்யாண வீட்டில் பந்தல் போடப்பட்டு வெள்ளைத் துணியால், பந்தலில் விதானமும், குஞ்சங்களும், தொங்கட்டான்களும் கட்டப்பட்டிருந்தன. வெள்ளையைத் தவிர்த்து வேறு சிவப்பு, பச்சை நிறமுள்ள துணி கொஞ்சம்கூட பந்தல் அலங்காரத்தில் இடம் பெறவில்லை, இதைப் பார்த்த ஒருவர், "ஏன் வெறும் வெள்ளைத் துணியாக இருக்கிறது? எப்போதும் சிவப்புத் துணியையும் அலங்காரத்துக்குச் சேர்த்துத் தைப்பதுண்டே?" என்றார். அதற்குக் கதாசிரியர் சொன்ன பதில்: "ஒரு வேளை நடக்கப்போவது விதவா விவாகமாக இருக்கும்.!"

மார்க்ஸீயப் பொருளாதாரம்

●

ரா. ஹாலாஸ்யநாதன்

IX

'ஏகாதிபத்தியம் ஒழிக! பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒழிக!' என்று நாம் கோஷிக்கிறோம். பொதுவாக, ஒரு தேசம் மற்றொரு தேசத்தை அடிமைப்படுத்தினால் அதை ஏகாதிபத்திய நாடு என்று அழைக்கிறோம்.

ஏகாதிபத்தியம் என்றால் என்ன, அதன் குணங்கள் என்ன என்பதைப் பற்றி லெனின் தான் முதன் முதலில் ஆராய்ச்சி செய்தார்.

பல நூற்றாண்டுகளாக வளர்ந்து, உலகம் முழுவதும் பரவி வந்த முதலாளித்துவம் இருபதாவது நூற்றாண்டில் அதன் வளர்ச்சியின் கடைசிக் கட்டத்தை அடைகிறது. அதாவது முதலாளித்துவத்திற்குள்ளே உள்ள முரண்பாடுகள்—முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையே உள்ள முரண்பாடு, உற்பத்தித் துறையில் திட்டம் எதுவுமின்றி அராஜகம் தலைவிரித்தாடுவது, தொடர்ச்சியாகப் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டுக்கொண்டேயிருப்பது முதலியன—முற்றுகின்றன. இவைகளைச் சமாளிக்க முடியாத கட்டத்தை அடைகிறது முதலாளித்துவம். எனவே, முதலாளித்துவம் அழிந்து போகத் துவங்குகிறது. ஆகவே, முதலாளித்துவ சமூக முறையை மாற்றியமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. சோஷலிஸ்டு சமூகத்தை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது சோஷலிஸ்டு சமூகத்தைத் தொழிலாளர் வர்க்கம்தான் முன்னின்று அமைக்க முடியும். ஆகவே, "ஏகாதிபத்தியம் பாட்டாளி மக்களின் சோஷலிஸ்டுப் புரட்சியின் கட்டம்'' என்று லெனின் கூறுகிறார்.

ஏகாதிபத்தியக் கட்டத்தை அடைந்திருக்கும் முதலாளித்துவத்திற்கும், வளர்ச்சியின் உச்ச நிலையை அடையாதிருந்த முதலாளித்துவத்திற்கும் இடையே மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம் இருக்கிறது. இந்த உண்மையை முதன் முதல் கண்டு பிடித்த லெனின் ஏகாதிபத்தியத்தின் பிரத்தியேகக் குணங்களைப் பின்வருமாறு விவரிக்கிறார்:

உற்பத்திச் சாதனங்களும், மூலதனமும் ஒரு சில முதலாளிகள் கையில் அபரிமிதமாகக் குவிந்து விடுவதால் "குத்தகை முதலாளித்துவம்'' ஏற்படுகிறது. (அதாவது ஒரு சில பெரிய முதலாளிகள் ஒன்றுசேர்ந்து கூட்டுக் கம்பெனிகளை ஏற்படுத்துகிறார்கள்.)

பாங்கு முதலாளிகள் தொழிற்சாலை முதலாளிகளோடு ஒன்று சேர்ந்து, கொடுக்கல், வாங்கலோடு, பொருள் உற்பத்தியிலும், ஈடுபடுகிறார்கள். இதன் விளைவாகப் பாங்கு முதலாளிகளின் ஆதிக்கம் வலுக்கிறது.

வெளி நாடுகளுக்கு முன்பு பொருள்களை ஏற்றுமதி செய்த

ஏகாதிபத்தியம் என்றால் என்ன? முதலாளித்துவம் என்றால் என்ன? இந்தப் பூதங்கள் எங்கெங்கு சந்தர்ப்பங்களில் பிறக்கின்றன? இவற்றின் கோர தாண்டவங்கள் எப்படி யெல்லாம் இருக்கின்றன?.........—கட்டுரையைப் படியுங்கள்.

முதலாளிகள், இப்பொழுது மூல தனத்தையே ஏற்றுமதி செய்கிறார்கள்.

சர்வ தேச முதலாளிகள் ஒன்று சேர்ந்து, கூட்டுக் கம்பெனிகளை அமைத்து, உலகத்தைத் தங்களுக்குள் பங்குபோட்டுக் கொள்ளுகிறார்கள்.

உலகம் முழுவதும் பெரிய முதலாளித்துவ நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்றன. (அதாவது உலகத்திலுள்ள சகல நாடுகளையும் பெரிய முதலாளித்துவ நாடுகள் பங்குபோட்டுக் கொண்டுவிட்டன. இனி மேல் புதிதாகக் கைப்பற்ற வேண்டிய நாடுகளே கிடையாது.)

குத்தகை முதலாளித்துவம்: முதலாளித்துவத்தின் ஆரம்ப காலத்தில் தங்குதடையின்றி யாவரும் வியாபாரம் செய்வதற்கு உரிமை வேண்டும், ஒரு முதலாளியோடு மற்றொரு முதலாளி போட்டி போட உரிமை வேண்டும் என்று முதலாளிகள் கோரினார்கள். யந்திரப் புரட்சி ஏற்படாத நாடுகளின் பொருள்களை விற்று, மூலப் பொருள்களை மலிவாகப் பெற்று பல முதலாளிகள் மேன் மேலும் கொள்ளை லாபம் திரட்டினார்கள். ஆனால், ஏகாதிபத்தியக் கட்டத்தில்—20வது நூற்றாண்டில்—உலகிலுள்ள நாடுகளையெல்லாம் பெரிய முதலாளித்துவ நாடுகள் ஏற்கெனவே அடிமைப்படுத்திவிட்டதால், புதிய நாடுகள் கிடைக்கவில்லை. அதே சமயத்தில், தொழிலாளர் வர்க்கமும் ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட்டு, போதுமான ஜீவனச் சம்பளத்தைக் கோரினார்கள். இவை யாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல், முதலாளிகளுக்குள்ளேயே நடந்த போட்டியும் சிறிய முதலாளிகளை அழித்து, பெரிய முதலாளிகளையும் அழித்துவிடும் என்ற நிலைமை ஏற்பட்டது. அப்பொழுது, பெரிய முதலாளிகள் ஒன்று சேர்ந்து கூட்டுக் கம்பெனிகளை அமைத்து, ஒருவருக்கொருவர் போட்டி போட்டு விலையைக் குறைக்காமல், பொருள்களின் விலையை அதிகரித்துக் கொள்ளை லாபமடிக்கத் துவங்கினார்கள்.

இவைகளுக்குத்தான் கார்ட்டல், ஸிண்டிகேட், டிரஸ்ட் என்று பெயர்; ஆயினும் முதலாளித்துவத்திற்குள்ளே உள்ள முரண்பாடு இதன் மூலமாக மறைந்துபோவதில்லை.

பாங்கு முதலாளித்துவம்: பாங்குகள் கொடுக்கல் வாங்கல் தொழிலை நடத்திவந்தன. அதாவது, ஏதேனும் ஒரு முதலாளி பணத்தை உபயோகிக்க முடியவில்லையென்றால் பாங்கில் அதைப் போடுகிறார். வேறு ஏதேனும் முதலாளிக்குப் பணம் தேவையாயிருந்தால், அந்த முதலாளிக்கு அந்தப் பணத்தைக் கொடுத்து வந்தன பாங்குகள்.

வரவரச் சிறிய முதலாளிகள் அழிந்து போவதுபோல், சிறிய பாங்குகளும் அழிந்துபோய், ஒரு சில பெரிய பாங்குகள் நிலைத்திருக்கின்றன. இத்துடன் பாங்குகளிடம் ஏராளமாகப் பணமும் குவிகின்றது. ஆகவே, குறுகியக் காலத்திற்கு முதலாளிகளுக்கு கடன் கொடுப்பதை நிறுத்தி, நீண்ட காலத்திற்குக் கடன் கொடுக்கிறது. அதாவது, முதலாளிகளோடு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டு, உற்பத்தியிலும் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்கள். பாங்கு முதலாளிகள் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தில் பங்கெடுத்துக்

கொள்ளுகிருர்கள். அதேமாதிரியாக, பெரிய முதலாளிகளும் பாங்குகளின் நிர்வாகத்தில் பங்கெடுத்துக்கொள்ளுகிருர்கள். ஏகாதிபத்தியச் சட்டத்தில் பாங்கு முதலாளிகளும், தொழிற்சாலே முதலாளிகளும் ஐக்கியமாகிருர்கள்.

மூலதனத்தை ஏற்றுமதி செய்வது: இருபதாவது நூற்றுண்டிற்கு முன்பு, முதலாளித்துவ நாடுகள் தத்தம் நாடுகளில் உற்பத்தியான பொருள்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தன. ஏகாதிபத்தியக் கட்டத்தில் ஏராளமாகக் குவிந்திருக்கும் மூலதனத்தை உள்நாட்டில் போட்டு, கொள்ளே லாபமடிக்கச் சந்தர்ப்பம் கிடைக்காமல் போகிறது. ஏனென்ருல், உள்நாட்டிலுள்ள தொழிலாளர்கள் ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட்டு, ஜீவனச் சம்பளத்தைக் கோருகிருர்கள். யந்திர உற்பத்தியில் அபிவிருத்தி யடையாத இந்தியா, சீனு முதலிய நாடுகளில் மூலதனத்தைப் போட்டு தொழிற்சாலேகளே ஏற்படுத்திஞல் குறைந்த கூலிக்குத்தொழிலாளர்கள் கிடைப்பார்கள். மூலப் பொருள்களும் அங்கேயே கிடைக்கின்றன. தாய்நாட்டிற்கு அவைகளேக் கொண்டுவந்து, பொருள்களாக மாற்றி, திரும்பவும் அங்கே கொண்டுபோகும் கப்பல், ரயில்வே சத்தம் மிச்சமாகிறது.

தொழிலாளர்கள் ஸ்தாபன ரீதியாக ஒன்றுபடாமலிருப்பதால், 12, 14 மணி நேரம் வேலே செய்யும்படி தொழிலாளர்களே நிர்ப்பந்தித்து கொள்ளே லாபமடிக்கலாம். ஆகவே, வெளி நாடுகளில் மூலதனத்தை ஏற்றுமதி செய்து தொழிற்சாலேகளே வெளி நாடுகளில் ஏற்படுத்துகிருர்கள்.

இதோடு கூடவே, வெளி நாடுகளுக்குக் கடன் கொடுப்பதன் மூலமாகப் பணத்தையும் ஏற்றுமதி செய்கிருர்கள். இவ்வாறு பணத்தை ஏற்றுமதி செய்வதன் மூலமாக இரு நாடுகளுக்கும் இடையே நெருங்கியத் தொடர்பும் ஏற்படுகிறது. கடன்கொடுத்த நாடு, கடன் வாங்கிய நாட்டின் அரசியலில் தலேயிடுகிறது. அதாவது, கடன் வாங்கிய சர்க்காரை அதிகாரத்தில் வைத்திருப்பதில் அக்கரை காட்டுகிறது. உதாரணமாக, இப்பொழுது அமெரிக்க ஏகாதிபத்தியம் சீனுவுக்குக் கோடானு கோடி டாலரைக் கடன் கொடுத்து, சியாங்கை ஷேக்கின் ஒரே கட்சி சர்வாதிகார ஆட்சியை அதிகாரத்தில் நிலேத்திருக்கும்படி செய்து வருகிறது.

சர்வ தேச முதலாளிகளின் கூட்டுக்கம்பெனிகள்: எப்படி ஒரு சில முதலாளிகள் ஒன்று சேர்ந்து கூட்டுக்கம்பெனிகளே ஏற்படுத்துகிருர்களோ, அதே மாதிரியாக போட்டியைத் தடுப்பதற்காகவும், கொள்ளே லாபமடிப்பதற்காகவும் பல நாடுகளிலுள்ள முதலாளிகள் ஒன்றுசேர்ந்து கூட்டுக்கம்பெனிகளே ஏற்படுத்தி உலக மார்க்கட்டைப் பங்கு போட்டுக் கொள்ளுகிருர்கள்.

உலகம் முழுவதும் சர்வ தேச முதலாளித்துவ நாடுகளுக்குள் பங்கு போட்டுக் கொள்ளப் படுகின்றன.

இருபதாவது நூற்றுண்டின் ஆரம்ப காலத்தில் உலகத்திலுள்ள நாடுகள் எல்லாம் ஏகேனும் பெரிய முதலாளித்துவ நாடுகளுக்குச்சொந்தமாக இருந்தன. ஆகவே, இருபதாவது நூற்றுண்

டுக்குப் பிறகு வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கும், பழைய முதலாளித்துவ நாடுகளுக்கும் தத்தம் நாட்டிலுள்ள பொருள்களை விற்பதற்குப் புதிய மார்க்கெட்டுகள் தேவையாக இருந்தன. ஆனால், இன்னும் அடிமைப் படுத்தப்படாத நாடே கிடையாது.

பெரிய முதலாளிகள் தங்களுக்குள்ளேயே பொருளாதாரத் துறையில் அபிவிருத்தியடையாத நாடுகளை ஏற்கெனவே பங்கு போட்டுக்கொண்டதால், தங்களுக்குள்ளேயே புதிதாகப் பங்கு போட்டுக்கொள்ளச் சண்டை போடுகிறார்கள். இதைத்தான் "ஏகாதிபத்திய யுத்தம் என்று அழைக்கிறோம்......"

இவ்வாறு வளர்ச்சியின் உச்ச நிலையை அடைந்திருக்கும் முதலாளித்துவத்தின் குணங்களை லெனின் விவரிக்கிறார். வளர்ச்சியின் கட்டம் போய்விட்டதால், சமூக முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது ஏகாதிபத்தியக் கட்டத்தை அடைந்த முதலாளித்துவம். வேலையில்லாத் திண்டாட்டமும், பொருளாதார நெருக்கடிகளும், உலகைத் திரும்பவும் பங்கு போடும் யுத்தங்களும் ஏகாதிபத்தியக் கட்டத்தில் கோரதாண்டவமாடுகின்றன. சமூக முறையில் உற்பத்தி நடக்கிறது. ஆனால், உற்பத்தியை நிர்வாகம் செய்கிறவர்கள் தனிப்பட்ட முதலாளிகளாக இருக்கிறார்கள். தனி உடைமையையும் சமூக உடைமையாக்கினால்தான் முதலாளித்துவத்தின் தீமைகளை அகற்றமுடியும்.

ஏகாதிபத்தியக் கட்டத்தில், முதலாளித்துவத்திற்குள்ளே புதைந்து கிடக்கும் முரண்பாடுகள் முற்றுகின்றன.

முதலாவதாக, குத்தகை முதலாளிகள் மேன் மேலும் தொழிலாளர்களைச் சுரண்டி வருவதால் மேன் மேலும் ஏராளமான தொழிலாளர்களை வேலையிலிருந்து விலக்கி வருவதால் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்குமிடையே போராட்டம் அதிகரிக்கிறது. அதாவது ஏகாதிபத்திய முதலாளிகளின் கொடிய சுரண்டல், தொழிலாளர்களைப் புரட்சிக்கு இழுத்துச்செல்லுகிறது.

இரண்டாவதாக, ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே உலகைப் பங்குபோட்டுக் கொள்வதற்காகப் போராட்டம் வலுக்கிறது. பிறநாடுகளைச் சுரண்டிக்கொழுப்பதற்காக விரல் விட்டு எண்ணக் கூடிய முதலாளிகள் யுத்தத்தை ஆரம்பித்து, பொதுமக்களைக் கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாக்குகிறார்கள். இதன் மூலமாக முதலாளித்துவத்தின் சக்தி பலவீனமாகிறது. சமூகத்தைச் சிலருடைய நாசகார யுத்தத்திலிருந்து பாதுகாக்க, பாட்டாளி மக்கள் புரட்சி செய்கிறார்கள்.

மூன்றாவதாக, ஆதிக்கம் செலுத்தும் நாட்டிற்கும், அடிமை நாட்டிற்கும் இடையே போராட்டம் வலுக்கிறது. அடிமை நாடுகள் நடத்தும் சுதந்தரப் போராட்டம் ஏகாதிபத்தியத்தின் சக்தியைப் பலஹீனப் படுத்துகிறது.

சுருங்கச் சொன்னால், ஏகாதிபத்தியக் கட்டத்தில் சோஷலிஸ்டுப் புரட்சி வெடிக்கிறது.

*

புத்தக உலகம்

புதுமைக் கவி பாரதியார்: [ஆசிரியர்: தி. ஜ. ர. கிடைக்குமிடம்: அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை 4. விலை ரூபாய் 1.]

பாரதியாரின் உண்மைச் சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறுகிறது இந்தப் புத்தகம். இந்தக் காலத்தில் சொந்தச் சரக்குகள் சேர்க்காமல் பாரதியாரைப்பற்றிப்புத்தகம் ஒன்று வெளி வருகிறது என்றால், அது ஆச்சரியப்படத்தக்க விஷயமாகும். ஆகவே, ஆசியர் தி. ஜ. ர. பாரதியாரைப்பற்றி எழுதியுள்ள இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டிருக்கும் விஷயங்களைத் தவிர்த்து பாரதியாரைப் பற்றி அதிகமாகத் தெரிந்துகொள்ள வேறு ஒன்றுமில்லை.

புத்தகத்தின் முதல் பகுதி பாரதியார் சரிதை; பிற்பகுதி அவர் கவிகள் சிலவற்றின் விமரிசனம். அழகான, விறு விறுப்பான நடையில் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்பவேண்டும்

உமறுப் புலவர் நினைவு மலர்: [கிடைக்குமிடம்: மாணவர் பிரசங்கப் பயிற்சிக் கழகம், நாகூர். உள்நாடு விலை அணு 12; வெளிநாடு ரூ. 1.]

தமிழிலுள்ள, சிறப்புப் பொருந்திய, ஒரே இஸ்லாமியக் காவியமாகிய சீறாப் புராணத்தை இயற்றிய உமறுப் புலவரைப்பற்றிய பல செய்திகளும், சிறப்புரைகளும் இப் புத்தகத்தில் அடங்கியுள்ளன. உமறுப் புலவரை அநேகமாக மறந்துவிட்ட தமிழர்களுக்குப்பழையபடியும் அவரைப் பற்றி நினைவூட்டும் முறையில் இந் நூலை வெளியிட்டவர்களைப் பாராட்ட வேண்டும். யாவரும் படிக்க வேண்டிய நல்ல புத்தகம்.

வீரர் சுபாஷ்: [ஆசிரியர்: ஸி. எஸ். வேணு. கிடைக்குமிடம்: எஸ். எஸ். பாபு, 57, அண்ணாபிள்ளைத் தெரு, சௌகார்பேட்டை, சென்னை. விலை ரூ. 1-8-0.]

இந்த நூலை ஆங்கில மூலத்திலிருந்து ஸ்ரீ சந்தானம் மொழிபெயர்த்திருக்கிறார். ஸ்ரீ சுபாஷ் போஸின் சரித்திரம்—குறிப்பாக அவர் இந்தியாவிலிருந்து திடீரென்று மறைந்து வெளிநாட்டுக்குப் போனதிலிருந்து—ஆதியோடு அந்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தேதிவாரியாகச் சரித்திரம் நல்ல முறையில் எழுதப்பட்டிருக்கிறது. இடையிடையே படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

சித்திர மடல்: [பதிப்பாசிரியர்: பெ. தூரன். கிடைக்குமிடம்: புதுமலர் நிலையம், கோயமுத்தூர். விலை ரூ. 1-8-0.]

காளமேகப் புலவர், பாவை—தெய்வங்கள் பெருமாள் என்ற தலைவன்மீது இயற்றிய மடல் இது. மிகவும் சிறந்த நூல். இப்படிப்பட்ட நூலை, 'சிருங்காரரசம் சற்று அதிகமாக இருக்கிறது; ஆகவே, தமிழ்ப் பண்புக்கு ஒவ்வாதது' என்று சொல்லிச் சிலர் அழித்துவிடப் பார்க்கிறார்கள். அது தவறு. இலக்கிய நயத்தையும், தன்னிகரற்ற கவிதா சாதுரியத்தையும் தமிழ் நடையையும் உத்தேசித்து இந்த நூலைத் துணிந்து வெளியிட்ட பதிப்பாசிரியரைப் பாராட்ட வேண்டும்.

இந் நூலில் அநேக வரிகள் விடுபட்டுள்ளன; அநேக வரிகளின் பாடம் சிதைந்து பொருள் தெரியாமல் கிடக்கின்றன. அதனால் அந்தப் பொருள் மயக்கம் தரும் அடிகளுக்குப் பதிப்பாசிரியர் தெளிவாக உரை எழுதாமலும் விட்டிருக்கிறார். இந்தக் குறைகளை அடுத்த பதிப்பில் களைய வேண்டியது மிக அவசியம். பாட்டுடைத் தலைவனுடைய 'பாவை' என்ற ஊர் திருநெல்வேலி ஜில்லாவி

லுள்ள பாவூராக இருக்கலாம் என்றும் ஓர் அபிப்பிராயம் இருந்து வருகிறது.

ஸ்ரீ கிருஷ்ண லீலா : [ஆசிரியர் : ஸ்ரீ எஸ். என். ராமதேசிகன். கிடைக்குமிடம் : நவபாரதி பிரசுராலயம், திருநெல்வேலி & சென்னை 5. விலை ரூ. 1-8-0.]

மகா விஷ்ணு கிருஷ்ணவதாரம் எடுத்து மண்ணுலகில் ஆடிய விளையாட்டுக்களின் முழு விபரங்களும் சுருக்கமாக எழுதப் பெற்றுள்ளன. ஒரு நாட்டின் பூர்வ பண்பை அறிய வேண்டியது அவசியம்; அதற்குப் புராணக் கதைகளைப் படிக்க வேண்டியதும் அவசியம். எல்லா நாட்டினரும் இதைச் செய்கிறார்கள். ஆசிரியர் கதைப் போக்கைக் கெடுக்கும் முறையில் இடையிடையே தம் பக்திப் பிரவாகத்தைத் திறந்துவிட்டிருக்க வேண்டாம். அழகான அச்சமைப்பு; அட்டை பளபளத்தாலும் கவர்ச்சியற்ற 'காக்கரீய்ப் பொன்' நிறத்தில்தான் இருக்கிறது.

பொழுது புலர்ந்தது : [ஆசிரியர்: பொ. திருகூடசுந்தரம் பிள்ளை. கிடைக்குமிடம் : புத்தக நிலையம், ராயவரம், புதுக்கோட்டை சமஸ்தானம். விலை ரூபாய் 4-0-0.]

இரண்டாவது மகாயுத்தம் தொடங்கியதிலிருந்து, தேசிய சர்க்கார் ஏற்பட்டவரை, காங்கிரஸின் சரித்திரத்தை ஒரு நிகழ்ச்சி பாக்கியில்லாமல் தெளிந்த தமிழ் நடையில் அழகாக எழுதியிருக்கிறார் ஆசிரியர். சரித்திரம் எழுதும் ஆசிரியர் கட்சி உணர்ச்சியில்லாமல் எழுதுவதுதான் நியாயம். இந் நூலாசிரியர், சர்வ கட்சிக் கூட்டணி ஜீவாதாரமான அவசியமாகி விட்ட இந்த சந்தர்ப்பத்தில், லீக் ஸ்தாபனத்தைப் பலமாகத் தாக்காமல், காங்கிரஸ், லீக் ஆகிய கட்சிகளில் உள்ள குறை நிறைகளை எடுத்துக்காட்டி, தக்க யோசனைகளைக் கூறியிருந்தால் பயனுடையதாயிருந்திருக்கும். காங்கிரஸைப் போலவே, லீக்கிலுமுள்ள ஜனநாயக சக்திகளைக் காண மறுப்பது நியாயமில்லை.

மிகவும் அழகான முறையில் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள்; முக்கியமான புத்தகம்.

வருங்காலத் தமிழகம்: [ஆசிரியர்: கா. அப்பாதுரை. கிடைக்குமிடம்: தமிழர் பதிப்பகம், 81, லிங்க செட்டித் தெரு, சென்னை 1. விலை ரூ.1.]

'வருங்காலத் தமிழகம்' என்று பெயர் தாங்கிய இப் புத்தகத்தில் இறந்த காலத் தமிழகத்தைப் பற்றித்தான் முக்கால் பகுதிக்கு மேல் சொல்லப்பட்டிருக்கிறது. வருங்காலத் தமிழகம் எப்படி யிருக்கும்? எப்படி இருக்க வேண்டும்?—என்றெல்லாம் இந்நூல் முழுவதும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கும் என்று புத்தகத்தைப் புரட்டுபவர்களுக்கு ஏமாற்றந்தான் மிஞ்சும். புத்தகம் சரித்திரப் போக்கில் இல்லாமல், கட்சிப் பிரசங்கமாக இருக்கிறது. கம்பனின் கவித் திறனை ஆசிரியர் 'இறக்கி'ப் பார்க்கிறார். தன்னிகரற்ற ஒரு மகா கவியை இவ்வளவு உள்ளங்கை இடத்துக்குள்ளாகத் தக்க காரணமின்றி 'இறக்கும்' விபரீதத் துணிவு ஒழிய வேண்டும்.

1. **மகத்தான போராட்டம் :** [ஆசிரியர் : என். கே. கிருஷ்ணன். விலை 8 அணா.]

2. **வங்காள விவசாயிகள் போராட்டம் :** [ஆசிரியர் : ஆர். எச். நாதன்.]

முதல் புத்தகத்தில் தென்னிந்திய ரயில்வேத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து தங்கள் உரிமைகளுக்காகப் போராடியதையும், வெள்ளை முதலாளியின் கல்நெஞ்சையும், இதற்கு நடுவில் பிரகாசம் மந்திரிசபை நடந்து கொண்டலட்சணத்தையும் விரிவாகக் கூறுகிறார். ஆசிரியர். அவசியமான படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இரண்டாவது புத்தகத்தில், மூன்றில் இரண்டு பங்கு வாரம் வேண்டும் என்று நிலச்சுவான்தார்களை எதிர்த்து வங்காள விவசாயிகள் போராடிய விபரங்கள் முழுதும் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு முக்கியமான புத்தகங்களும் சென்னை, பிராட்வேயிலுள்ள ஜனசக்தி பிரசுராலயத்தில் கிடைக்கும்.

ரிக்வேதம் — அக்னி ஸூக்தங்கள். [ஆசிரியர்: ஸ்ரீ அரவிந்தர்; மொழிபெயர்த்தவர்: தி. வி. கபாலி சாஸ்திரிகள். வெளியிட்டோர்: அரவிந்தர் நூல் நிலையம், சென்னை. விலை ரூபாய் 4.]

மொழிபெயர்ப்பு மட்டம். ஒரு பக்கம் படித்து முடிப்பது மலையைப் புரட்டும் காரியமாக இருக்கும்போது, புத்தகம் புரிகிறதா என்பது வேறு விஷயம். ஓர் உதாரணம்:

"புனிதமாம் புல்லின் கத்தை அக்னிக்காக அடைக்கல வணக்கத்துடன் பறிக்கப்பட்டபோது அழுக்ககற்றும் அகப்பை ஒளியளிப்பு நிரம்பி தன் வேலையில் அமைக்கப்பட்டபோது புவியின் இல்லத்தில் குடியிடம் பெறப் பட்டபோது, வேள்வியும் கதிரவனில் கண்ணைப்போல் இருத்தப்பட்ட போது,—" (பக்கம் 143)

இப்படி எழுதினால் யாருக்குப் புரியும்? தவிரவும் வல்லின மெல்லின வித்தியாசமின்றித் தப்பாகவும், காதுக்குக் குரூரமாக ஒலிக்கும் சொற்களுடனும் எழுதியிருக்கிறார் ஆசிரியர்.

இந்த நூலை தமிழ் எழுதத் தெரிந்த வேறு யாரேனும் குறைந்த பட்சம் கஷ்டம் தராத நடையிலாவது மொழி பெயர்த்திருந்தால் எவ்வளவோ பிரயோஜனமாக இருந்திருக்கும்.

பஜனைப் பாடல்கள்: [வெளியிட்டோர்: ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், கோயமுத்தூர். விலை அணா 12.]

இப் புத்தகத்தில் பாசுரங்களும் சுலோகங்களும் இசைப் பாடல்களும் அடங்கி யிருக்கின்றன. இசைப் பாடல்களுக்கு ராக, தாள விபரங்களும் கொடுக்கப்பட் டிருக்கின்றன. கோபாலகிருஷ்ண பாரதியார், சுப்பிரமணிய பாரதியார், தி. இலக்குமண பிள்ளை, ம. ப. பெரியசாமி முதலிய பலரால் இயற்றப்பட்ட பாடல்களை அழகிய இந்தப் புத்தக உருவில் குறைந்த விலையுடன் வெளியிட் டிருக்கிறார்கள். சமஸ்கிருத சுலோகங்களுக்குப் பொருள் எழுதியிருக்க வேண்டியது அவசியம்.

புரட்சி: [ஆசிரியர்: எஸ். சங்கரன், வெளியிட்டோர்: மாம்பலம் இளைஞர் கழகம். 14/80 பாண்டி பஜார், தியாகராயநகர், சென்னை. விலை ரூ. 1.]

இந்தியாவில் இதுவரை நடந்த சுதந்தரப் போர்களின் வரலாறுகள் இப் புத்தகத்தில் தொகுத்துக் கூறப் பட் டிருக்கின்றன. இந்த வரலாறுகள் எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டியது அவசிய மென்றாலும்...

'எங்கள் ரத்தத்தைச் சிந்தி நின் மானத்தைக் காப்போம். எங்கள் உயிரைப் பணயமாக வைத்து உன்னை விடுவிப்போம்' என்று சுதந்தர தேவியைப் பார்த்துச் சொல்லுகிறார் ஆசிரியர். இப்போது ரத்தம் சிந்தத் தேவையே இல்லை. இந்தியாவில் காங்கிரஸ், லீக் என்ற கட்சி வேறுபாடுகளும், காங்கிரஸ் தொழிலாளி, கம்யூனிஸ்ட் தொழிலாளி என்ற கோஷ்டி வேறுபாடுகளும் நீங்கி ஒற்றுமை ஏற்பட்டுவிட்டால் அப்புறம் வீணாக ரத்தத்தைச் சிந்த வேண்டாம். இந்த ஒற்றுமையை ஆசிரியர் வற்புறுத்தாமல் கம்யூனிஸ்ட்களைத் தாக்கியும், 'ஜப்பான் சரணடைந்தது...... இந்திய தேசீயராணுவமும் சரணடையும்படி நேர்ந்துவிட்டது' என்று எழுதி, அதன்மூலம், ஜப்பான் ஜெயித்திருந்தால் இந்தியா சுதந்தரம் பெற்றிருக்கும் என்று அர்த்தம் கொள்ளும்படி செய்திருப்பதும் தேச விடுதலைக்கு வழிகாட்டாது; நேருக்கு மாறான பலனைத்தான் கொடுக்கும்.

Commercial Progress:

[ஆங்கில வார வெளியீடு. கௌரவ ஆசிரியர்: கே. ஜி. எம். தாரகன், எம். ஏ., நிர்வாக ஆசிரியர்: எஸ். சுப்பையா. 115-E, மௌபரீஸ் ரோடு, சென்னை, 14. விலை அணா 8.]

பொருளாதாரம், வர்த்தக நிலவரங்கள், தொழில் வளர்ச்சி, நாணய மாற்று, ஏற்றுமதி இறக்குமதி விபரங்

கள் ஆகிய பல செய்திகளைக் கொண்ட அரிய பத்திரிகை. அழகான முறையில் வெளியிடப்பெற்றிருக்கிறது. மேற்கூறிய துறைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இந்தப் பத்திரிகை உற்ற துணைவன் என்று கூறிவிடலாம்.

ஹிந்து—முஸ்லிம் பிரசினை: ஆசிரியர்: மகாத்மா காந்தி. [மொழிபெயர்த்தவர்: க. அருணாசலம், பி.ஏ., எல்.டி.,] புதுமைப் பதிப்பகம் லிமிடெட், 14, வெள்ளாளத் தெரு, புரசைவாக்கம், சென்னை 7. விலை ரூ. ஆறு.

'தினமணி' விசேஷ வெளியீடாக வந்திருக்கும் 543 பக்கங்களுள்ள இந்த அரிய நூல், ஒவ்வொருவரும் கசடறக் கற்று, அதன்படி நிற்கவும் வேண்டிய உயரிய படிப்பினைகளைப் போதிக்கிறது. கிலாபத் இயக்கம் தொடங்கி இன்றுவரை நிகழ்ந்த, இந்து—முஸ்லிம் பிரச்னை சம்பந்தப்பட்ட செய்திகளைப்பற்றி காந்திஜி செய்த விமரிசனங்களும், ஒற்றுமைக்காக அவர் உபதேசித்த சன்மார்க்க போதங்களும் இந் நூலில் இடம் பெற்றுள்ளன. கட்சி வேற்றுமை உள்ளவர்களும், காந்திஜியின் கோட்பாடுகளில் அபிப்பிராய பேதமுள்ளவர்களும்கூட இந் நூலில் அடங்கிய நல்லெண்ணத்தையும், இந் நூல் வழிகாட்டும் மார்க்கங்களையும் கடைப்பிடிக்கத் தவறமாட்டார்கள்.

புத்தகம் அழகிய முறையில் வெளிவந்திருக்கிறது.

பாரதியும் கவிதையும்: [இதுவும் புதுமைப் பதிப்பக வெளியீடுதான். விலை: ரூ. 2-8-0; பாரதியின் புதல்வி ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி, இப் புத்தகத்தில் பாரதி எப்படி ஓர் அதிசய புருஷராக வாழ்ந்தார் என்பதைப் படம் பிடித்திருக்கிறார். பாரதியின் கவிகளில் இவை இவை, இந்த இந்தச் சந்தர்ப்பங்களில் பாடப்பட்டன என்றும் கூறியிருக்கிறார். 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்பது முதுமொழி. பாரதியாரின் இளைய புதல்வி ஸ்ரீமதி பாப்பா கீழ்க்கண்ட பாடலை எழுதும்போது அவளுக்கு மூன்று வயது என்று குறிப்பிடுகிறார் ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி:

"மாணிக்க மேடையில், மான் விளையாடையில்
சகியே நாமிருவரும் செல்வோமே
குயில்கள் மயில்கள் எல்லாம்
குடியிருக்கும் சோலையில்
கூடி நாமிருவரும் செல்வோமே,
ஆண்களில்லாக் காட்டில்,
பெண்களரசாட்சியில்
சகியே நாமிருவரும் செல்வோமே"

(பக்கம் 118)

இப்படி எதுகை மோனையெல்லாம் கவனித்து அழகிய சொற்களில் மூன்று வயதிலேயே எழுதிய பாப்பா, அதற்குப்பின் பாட்டெழுதாமல் இருந்துவிட்டது தமிழ் நாட்டின் துரதிர்ஷ்டமே. இளம் பிராயத்தில் பாடியதே இப்படி இருந்தால், இன்று பாடும் பாட்டு எப்படி இருக்கும்?

—கு. அ.

வரப் பெற்றோம்

நவலட்சுமி: [தமிழ் மாதப் பத்திரிகை. ஆசிரியர்: பி. எம். ஆர். முத்துசாமி ரெட்டியார், 136, செட்டியார் தெரு, கொழும்பு. விலை அணா 2.]

நன்னெறி: [மாத வெளியீடு, நன்னெறி லிமிடெட், சென்னை, 12. விலை அணா 8]

ஜ்வாலா: [வாரப் பத்திரிகை. ஆசிரியர்: வே. விசுவநாதன், 39. ஆண்டர்சன் தெரு, சென்னை.]

திருப்புகழமிர்தம்: [மாத வெளியீடு. ஆசிரியர்: கிருபானந்தவாரி, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை. விலை. அணா 4.]

தமிழ்த் தென்றல்: (மாதப் புத்தகம். பதிப்பாசிரியர்: வே. வ. இராமசாமி. அலுவலகம்: விருதுநகர். விலை அணா 4.]

உதயம்: [மாதப் வெளியீடு, மட்டக்களப்பு, இலங்கை. விலை அணா [illegible].]

✲

Edited, Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115 - E, Mowbrays Road, Royapettah, Madras - 14

அழகின் சிறப்பு

சருமசுகத்தின் மகிமையே

உங்கள் வசீகரம் பெரும்பாலும் மேனியழகை பொறுத்திருக்கிறது. மேனியழகு சருமசுகத்தினுல் மட்டுமே ஏற்படுகிறது. சருமத்தைப் போஷிக்கும் குணமுடையதும் ஆன்டிஸெப்டிக்குமான தைலங்கள் சேர்ந்துள்ள 'கேடில்' ரெக்ஸோனுவில் அடங்கி யிருப்பதால் அது சருமத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதுமல்லாமல் சரும அழகு ஏற்படவும் உதவுகிறது. அதிசீக்கிரத்தில் தாராளமாயுண்டாகும் ரெக்ஸோனுவின் நுரை சருமத்திற்குள் சுகமளிக்கும் கேடிலை சேர்த்து ஆற்றலுடன் அழகையும் கொடுக்கின்றது. கேடில் கலந்துள்ள விசேஷமான சோப் இது ஒன்றே. அதனுலேயே இச்சோப் சருமத்தை மச்சமறுக்களிலிருந்து பாதுகாக்கிறது.

ஆரோக்கிய மிகுதியால் சோபையடையும் சருமத்தை முக்கியமாகக் கருதும் ஆடவர்கள், ரெக்ஸோனுவின் சுறுசுறுப்பளித்து சக்தியை ஊட்டும் திறமையை மெச்சுவார்கள். சுகமான சருமமேற்பட விரும்பும் ஆடவர்களுக்கு, ரெக்ஸோனு இன்றியமையாதது என்று உண்மையாக சொல்லலாம்.

குழந்தைக்கு ரெக்ஸோனு: குழந்தையின் மெலிய சருமத்தில் புண்கள், சிரங்குகள் ஏற்பட வழியுண்டு. ரெக்ஸோனுவின் மருந்துசேர்ந்த நுரை சிறு கைகால்களை சாதாரண சரும வியாதிகளிலிருந்து காப்பாற்றுகிறது.

★ரெக்ஸோனுவிலுள்ள கேடில், ஆன்டிஸெப்டிக்கும் சுகமளித்துப் போஷிக்கும் தன்மையுடையதுமான தைலங்கள் சேர்ந்த ஒருவிசேஷ மருந்து. இம்மருந்து சருமப் பாதுகாப்பிற்கு ரொம்பவும் உத்தமமானது.

சருமசுகத்திற்கு ரெக்ஸோனு

RP. 31A-50-40 TM

REXONA PROPRIETARY LIMITED

கிரைப்-டில்-வாட்டர்

GRIPE-DIL-WATER

குழந்தைகளின்
ஆரோக்கியத்திற்கு உகந்தது

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

BHARATH DRUG HOUSE
MADURA

Children's necessity-Pet drink of the Child-Mother's ready-at-hand remedy-for all disorders of Stomach and Children's General Tonic

டிஸ்டிரிபியூடர்கள்:-T.N.C.நாகலிங்கம் பிள்ளை & ஸன்ஸ், மருந்து ஷாப், மதுரை

M.S.D.

பாட்டில் 1-க்கு ரூ 1 4 0

சோனல்

BHARATH DRUG HOUSE
MADURA

T.N.C. நாகலிங்கம் பிள்ளை & சன்ஸ்
மருந்து ஷாப் மதுரை

டப்பி 1-க்கு ரூ. 0 6 0

ஸ்ரீவிஸ் - அம்லா ஹேர் ஆயில்

உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.
குளிர்ச்சியாயும் புத்துணர்ச்சி அளிப்பதாயுமிருக்கிறது.

ஸ்ரீவிஸ் பர்பியூமரி ஒர்க்ஸ்

பூரண உரிமையாளர்கள் :

S. விஸ்வநாதம் & கம்பெனி

44, பந்தர் தெரு : மதராஸ்-1



பிரகாசமான சூரியனும் மனோகரமான சந்திரனும் தங்களின் ஜோதியை எல்லோருக்கும் பாரபக்ஷமின்றி ஒரே மாதிரியாக அளிக்கின்றன.

வாலிபரானாலும் அல்லது வயோதிகரானாலும், ஆடவரானாலும், பெண்டிரானாலும், தனவந்தரானாலும், அல்லது ஏழையானாலும்—எல்லோருக்கும் ஆரோக்கியமான வளர்ச்சி அபிவிருத்திக்கும், நோயை எதிர்க்கும் அதிகப்படியான சக்திக்கும் விட்டமின் 'A, D' சத்துக்கள் அவசியமாகும். மதராஸ் கவர்ன்மென்ட் பிரான்ட் ஷார்க் லிவர் ஆயிலும், அடமினும் உபயோகிக்கப்பட்டால் எல்லோருக்கும் பிரகாசமான ஆரோக்கியத்தை—வாழ்வின் ஒளியைபட பொழிகின்றன.

தயாரிப்பவர்கள்: கவர்ன்மென்ட் ஆயில் பாக்டரி, கள்ளிக்கோட்டை

சென்னை ராஜதானிக்கும், அதன் சுற்றுப்புறமுள்ள
ஸமஸ்தானங்களுக்கும் ஏஜண்டுகள்:

மெஸர்ஸ் பாரி & கம்பெனி லிமிடெட், மதராஸ்

அம்பி அம்பி அணிலைப் பார்—அது
ஆடித் திரியும் அழகைப் பார்

—'சுரபி'

அணில்

சின்னச் சின்னக் கதைகள், சிங்காரப் பாட்டுக்கள்,
மனதுக்குப் பிடித்த கட்டுரைகள், விடுகதைகள்,
வேடிக்கைக் கணக்குகள், அழகான படங்கள்
வர்ணஜாலத்துடன் வெளிவரும்

குழந்தைகளின்
வாரப் பத்திரிகை

தனிப் பிரதி	வருட சந்தா ரூ. 3
ஒரு அணா	2 வருட சந்தா ரூ. 5

இது சக்தி வெளியீடு

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை 14

வாழ்க்கைச்
சித்திரம்

உயிர்ச்சித்திரங்கள் எழுதுவதிலே தலை சிறந்த பேரறிஞர் வ. ரா., அவர் எழுதிய ஒவ்வொரு சித்திரமும் உயிருடன் தத்ரூபமாக விளங்குகிறது. இந்த அரிய புத்தகத்தைப் படித்துப் பாருங்கள். கட்டுரையில் உள்ள குழந்தை உங்களுடன் பேசும், விளையாடும். மைக் குறத்தி குறி சொல்ல ஆரம்பித்து விடுவாள். இன்னும் பலபேர் உங்களை உறவு கொண்டாடுவார்கள். இத்தனைபேரும் உங்கள் உறவினராவதற்கு நீங்கள் கொடுக்க வேண்டியது ரூபாய் இரண்டரை தான்.

பவானி பிரசுரம்
ராயவரம்,
புதுக்கோட்டை சமஸ்தானம்.

வேம்பின் சிறந்த சத்துகள் இதில் அடங்கி இருப்பதால், *கேரளா வேப் ஸோப்* உங்கள் சருமத்தைப் பாதுகாத்து அதிக அழகை உண்டாக்குகிறது. சருமம் மாசு மறுவில்லாமல் இளமை வனப்புடனிருக்கச்செய்கிறது. நல்ல சரும ஆரோக்யத்திற்கு ஏற்ற ஸோப் இதுதான்,

MANUFACTURERS :—

KERALA SOAP INSTITUTE

...CALICUT...

FAS-KS-4

சக்தி வாய்ந்த நூல்கள்

லெனின் பிறந்தார் : ஆர். ராமநாதன் எழுதியது.

லெனின் பிறந்தார் என்ருல் கூடவே புரட்சி இயக்கமும் பிறந்தது என்றுதான் பொருள். இந் நூலில் லெனின் வரலாறு சொல்லும் வகையில் புரட்சி இயக்கம் வளர்ந்த வகையையும் ஆசிரியர் விளக்கி யிருக்கிருர். படங்களுடன்

விலை ரூ. மூன்றரை தபால் செலவு தனி

இனி நாம் செய்யவேண்டுவது யாது?

டால்ஸ்டாய் எழுதியது — ரா. விசுவநாதன் மொழிபெயர்ப்பு

காந்தியடிகளின் கருத்தைக் கவர்ந்தது இந் நூல். "உழைப்பவனுக்குத்தான் உணவு, உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம்" எனும் அரிய சித்தாந்தம்தான் இந் நூலில் அடங்கி யிருக்கிறது. இப்போது தமிழில் மூன்ரும் பதிப்பாக வெளிவந்திருக்கிறது. அழகிய மொழிபெயர்ப்பு

விலை ரூ. மூன்று தபால் செலவு தனி

தயாராகின்றன

உலோகமும் நாமும் : மு. அருணசலம் எழுதியது.

உலோகங்களைப் பற்றிய விரிவான முறையில் தெளிவாய் விளக்குவது இந் நூல். தமிழ் உலகுக்குப் புதிது.

ஆசிய நாடுகள் : கு. அழகிரிசாமி எழுதியது.

ஆசியாவிலுள்ள முப்பத்து நான்கு நாடுகளைப்பற்றிய சரித்திர, பூகோள, இலக்கிய, அரசியல் விவரங்களைத் தெரிவிப்பது இந் நூல். ஆசிய உறவு மகா நாட்டு நிகழ்ச்சி முறையும், சொற்பொழிவுகளும் அடங்கியது. பல படங்களோடு வெளிவரும்.

முத்திரா ராக்ஷஸம்

வடமொழியில் விசாக தத்தர் எழுதிய சிறந்த அரசியல் நாடகத்தின் அழகான மொழிபெயர்ப்பு.

ஹிந்து பத பாதுஷாஹி

வீர சவர்க்கார் எழுதிய நூலின் மொழிபெயர்ப்பு. இந்து சாம்ராஜ்ய வீழ்ச்சியை விவரிக்கும் சிறந்த நூல்.

சக்தி காரியாலயம் — சென்னை 14.

கவிராஜ் R. N. சென்குப்தாவின்

அமிர்த ஸலஸா
(ரிஜிஸ்டர்ட்)

(தங்க ஸத்துக் கலந்தது)

எல்லா விதமான சரும வியாதிகள், ரத்த அசுத்தம், கட்டிகள், வாத நோய்கள், ரத்தசோகை முதலியவற்றிற்கும் குழந்தை பிறந்தவுடன் ஏற்படும் பலவீனத்திற்கும் ஓர் சிறந்த ஒளஷதம்.

ஒரு வாரம் உபயோகித்தால் அதன் குணம் நன்கு தெரியும். ரத்தம் சுத்தம் அடைந்து நாளடைவில் நல்ல ரத்தம் அதிகரிக்கிறது. எல்லா வியாதிகளும் நீங்கி அவயவங்கள் நல்ல சுவாதீனம் அடைகிறது. யௌவன சக்தியை மீண்டும் பெறுகிறது.

பாட்டில் 1க்கு ரூ. 1-0-0

1 டஜன் ரூ. 10-0-0

(தபால் செலவு தனி)

ஏஜண்டுகள் தேவை

Mahat Ayurvediya Ausadhalaya

144/1, Upper Chitpore Road, Calcutta

ஆஸ்த்மா வியாதியுள்ளவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லுவேன்

தற்சமயத்திற்கு தணமளிக்கும் மருந்துகளை வாங்குவது முற்றிலும் வீண்.

"புரோஹித் சுவாஸஹரி" தற்சமயத்திறகு மட்டும் அல்ல, "ஆஸ்த்மா"வின் மூல காரணங்களையும் கண்டித்து நீடித்த குணத்தை அளிக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே திணறலை நிறுத்தி ஜீரணத்தையும் அதிகரிக்கிறது. நாளடைவில் பலத்தையும் கொடுத்து ஆஸ்த்மாவை வேரோடு ஒழிக்கும்.

"ஆஸ்த்மா," திணறல் (கஷ்ட சுவாசம் முதுகுவலி, தொண்டைக் க கரப்பு, இருமல்) இன்னும் இதைப்போன்ற ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு "சுவாஸஹரி" ப்ளெயின், (நீலப் பெட்டி) சாப்பிடவேண்டும். அஜீரணம் வயிறு உப்பிசம் உள்ள ஆஸ்த்மா வியாதி உள்ளவர்கள் "சுவாஸஹரி" காம்பௌண்ட் (சிவப்புப் பெட்டி) உபயோகிக்கவேண்டும்.

ஒவ்வொரு மருந்துக் கடையிலும் கிடைக்கும் 3, 6, 12, அவுன்ஸ் அளவுகளில் முறையே ரூபாய் 3-6-0, 5-12-0, 10-0-0 ஆக விலை.

தயாரிப்பவர்கள் :—

புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்
எம். எஸ். எம்.

ஸ்டாக்கிஸ்டுகள் :— சென்னை :

1. அப்பா அண்டு கோ, சைனா பஜார்.
2. அமிருத் ரத்னாகர் பார்மஸி, கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

திருவாங்கூர் :

K. C. மாத்யூ & கோ,
கெமிஸ்ட்ஸ் &,
ட்ரக்கிஸ்ட்ஸ்,
கோஷாஞ்சேரி.



புரோகித்ஸ் ஸ்வாஸஹரி

டிடிடியின் திறன் முழுதும்

நியோஸிடில் உள்ளது

10% டி.டி.டி பௌடர்

இது கெய்கி தயாரிப்பு

DJK 6019 TAM.

★ நியோஸிட் நீடித்த சக்தியுள்ளது

★ அண்டும் சகல பூச்சிகளும் நாசமடையும்

★ மானிடர்களுக்கு கெடுதலில்லாதது

தென் இந்தியாவுக்கு விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ்
அடிலன் அண்ட் கோ., லிட்.,
மௌண்ட் ரோட், மதராஸ்

DDT geigy DDT

மைசூர் சமஸ்தானம், லீடட் ஜில்லாக்களுக்கு
விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ் முகமத் ரஹீம் கலீல்;
99-B, ஊஸ்மான்கான் ரோட்,
பெங்களூர் ஸிடி.

கெய்கி இன்ஸெக்டிஸைட்ஸ் லிட்., நெவில் ஹவுஸ் நிக்கல் ரோட், பேலார்ட் எஸ்டேட், பம்பாய்

மங்கை ★ பெண்களின் புத்தகம்

ஆசிரியர்: எஸ். விசாலாட்சி

- 'சக்தி' அளவில் அழகிய படங்களுடன் மாதப் பத்திரிகையாக வெளிவருகிறது.
- ஜூன் மாதம் 15உ இரண்டாவது தொகுப்பு முதலாவது புத்தகம் வெளிவருகிறது.
- விலை எட்டணாதான். வருடச் சந்தா ரூ. ஆறு. இரண்டு வருடச் சந்தா ரூ. பதினொன்றுதான்.
- நீங்கள் — உங்கள் சிநேகிதர்களுடன் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்துவிடுங்கள்.
- உங்களுடைய சந்தேகங்களை ஆசிரியருக்கு எழுதுங்கள். பதில் எழுதத் தகுதி வாய்ந்தவைகளுக்குப் பதில் வெளியிடப் பெறும்.

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை—14.